# இந்தோ - சைஞ

2-MAY 1946
MADRAS
T.N.A.L
604124

எழுதியவர்
த. கிருஷ்ணமூர்த்தி
உதவியாசிரியர் "பாரததேவி"

பிரசுரம்
அம்பிகா பிரதர்ஸ்
மயிலாப்பூர் :: சென்னை

காபிரைட்] 1946 [விலை அணு 12

முதற்பதிப்பு

...HIVES LIBRARY
...MORE, MADRAS-600 008
L 08114

Printed at KABEER PRINTING WORKS, Triplicane, Madras
and Published by Ambika Brothers, Mylapore, Madras
Q. H. MS. 32 (1000—18-4-46)

# I

# தேசமும் அதன் ஜனங்களும்

ஆசியா கண்டத்தின் தென் கிழக்குத் திசையில் இந்து மகா சமுத்திரமும், சைனக் கடலும் சேருமிடத்தி லுள்ள தீபகல்பத்தின் கிழக்கு பாகமே இந்தோ சைன வாகும். அதன் பெயரிலிருந்தே அது இந்தியாவுடனும், சைனவுடனும் தொடர்பு கொண்டதென்பதை அறிய லாம். இதனைப் பிரஞ்சு சர்க்கார் பிரெஞ்சு இந்தோ சைன ஐக்கியம் என்கிறது.

இது 2,85,000 சதுர மைல் பரப்புள்ளது. பிரான்சை விடப் பரப்பில் மற்றும் கால்பாகம் பெரியது. இந்த ஐக்கியத்திலே சேர்ந்துள்ள ஐந்து நாடுகளிலே ஒன்ருன கொச்சின் சைனவைப் பிரஞ்சு அதிகாரிகள் தங்கள் நேர் அதிகாரத்திலேயே வைத்திருக்கிருர்கள். இதன் பரப்பு 24,900 சதுர மைலாகும். அதில் சுமார் 70 லட்சம் ஜனங்கள் வசிக்கிருர்கள். இதன் தலைநகரே சைகோன். கம்போடியா என்பது மைசூர் போன்று பிரஞ்சுக்காரர் ஆதிக்கத்திலிருக்கும் சுதேச சமஸ்தானம். இதன் பரப்பு 69,900 சதுர மைல். இதன் ஜனத் தொகையோ 30 லட்ச மாகும். 90,000 மக்களைக் கொண்ட நாம் பென் என்பதே இதன் தலைநகரம். அன்னமென்பது மற்ெருரு சமஸ் தானம். இதன் விஸ்தீரணம் 56,900 சதுர மைலேயாை லும் இதில் 56,56,000 மக்கள் வசிக்கிருர்கள். அறுபதா யிரம் பேர்கொண்ட ஹுயூ என்பதே இதன் முக்கியப் பட்டணம். அன்னமை ஒட்டிய டான்கின்னும் சுதேசிகள் ஆட்சியிலிருக்கிறது. இது 44,700 சதுர மைல் பரப்பும் 87 லட்சம் ஜனத் தொகையுமுடையது. இதன் தலை நகரே ஹனய். சுமார் ஏழு லட்சம் மக்கள் வதியும் 88

ஆயிரம் சதுர மைல் விஸ்தீரணமுள்ள லாஆஸ் என்ற பிரதேசத்தில் ராஜவமிசங்களிருந்தும் பிரான்ஸே எல்லா அதிகாரங்களையும் கவனிக்கிறது. 40,000 மக்கள் கொண்ட லுவாங்பிரபாங்கே இப்பிரதேசத்தில் பெரிய நகரமானாலும், வியந்தியானி என்ற நகரையே லா ஆஸின் தலைநகராகப் பிரஞ்சுக்காரர் கொண்டிருக்கின்றனர்.

இவ்வைந்து பிரதேசங்களுடன் சைனாவிட மிருந்து 99 வருஷங்களுக்குக் குத்தகைக்கு எடுக்கப்பட்டிருக்கிற குவாங் சோவன் என்ற 300 சதுர மைல் பரப்புள்ள பிரதேசமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதில் இரண்டு லட்சம் சீனர் வசிக்கின்றனர். இப்பிரதேசங்களை யெல்லாம் ஒன்று சேர்த்தே பிரஞ்சுக்காரர் இந்தோ-சீனா ஐக்கியமென அழைக்கின்றனர். இவ் ஐக்கியத்தின் அதிபராக கவர்னர் ஜெனரலொருவரைப் பிரஞ்சு ஜனாதிபதி காலனி மந்திரி யோசனைப்படி நியமிக்கிறார். கொச்சின் சைனாவே பிரஞ்சு பார்லிமன்றத்திற்கு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றிருக்கிறது. அது பிரான்சுடன் சேர்ந்த நாடாகப் பாவிக்கப்படுகிறது. இதற்குக் கவர்னரொருவரும், இதர சமஸ்தானங்களுக்கு ரெஸிடெண்டுகளும் கவர்னர் ஜெனரல் ஆதிக்கத்திலிருக்கின்றனர். கவர்னர் ஜெனரலே ஐக்கியத்தின் கொள்கைகளை நிர்ணயிப்பவர். எல்லா பிரதேசங்களின் ஆட்சி பற்றியும் உத்தரவிடக் கூடியவர். காலனி மந்திரிக்கு நேர் பொறுப்புள்ளவர். ஐக்கியத்தில் சேர்ந்திருக்கிற ஒவ்வொரு பிரதேசத்திற்கும் தனித்தனி வரவு செலவுத் திட்டமுண்டு. அவை ஐக்கியத்தின் பொதுச் செலவிற்காகவும் கப்பம் கட்டவேண்டும். அது போலவே அவை ஐக்கிய வரிகளில் சிலவற்றின் வருமானத்தில் பங்கும் பெறுகின்றன. இந்தோ சைனாவின் பட்ஜட் தொகை ஆண்டுக்கு 75 கோடி பிராங்குகளாகும்.

1920 ளு செப்டம்பர் 11-ந்தேதி சட்டப்படி கவர்னர் ஜெனரலே சட்டம் செய்யலாம். சட்ட சபையையும்

கலக்கலாம். அங்கத்தினரில் பெரும்பாலோர் பிரஞ்சுக் காரர்கள். டான்கின் அன்னுமியரைப் பற்றிய சட்டத் திற்கே அன்னும் அரசரின் அனுமதியும் வேண்டும். 1927 ஷூ சட்டப்படி 35 பிரஞ்சுக்காரரும் 25 இந்தோ சீனரும் சட்டசபையில் பதவி வகிக்கிருர்கள். அதில் 10 பிரஞ்சுக்காரரும், 6 சுதேசிகளும் கவர்னர் ஜெனரலால் நியமிக்கப்படுவர்.

இந்தோ சைனுவிற்குச் செல்லுமொருவன் காணக் கூடிய தென்னவெனில் ஒருபால் குடி நெருக்கமும், மற்ருெரு புறம் மக்களே இல்லாத மலைகளும் அடவிகளு மிருப்பதையே. இந்தோ - சைனுவின் வடக்கிலுள்ள யுன்னுன் பிரதேசத்திலிருந்து கிளம்பும் இரண்டு மலைத் தொடர்ச்சிகளிலொன்று டான்கின் பிரதேசத்தின் வழி யாக ஆலாம் விரிகுடா முடிய செல்லுகிறது. அங்கே கடற்கரையில் கூட நீண்ட மலைகள் செங்குத்தாக இருப் பதைக் காணலாம். மற்ருெரு மலைத் தொடர்ச்சி வட இந்தோ சைனுவில் கிளம்பி வடமேற்கிலிருந்து வடகிழக் காக கிழக்குப் பாகத்திலேயே வளைந்து வந்து கிழக்கு கம்போடியாவிலும் தெற்கு அன்னுமிலும் கிளைகளாகப் பிரிந்து முடிகிறது. இம்மலைத் தொடர்ச்சியில் கீழ்த் திசையே செங்குத்தாக விருக்கிறது. மேற்கு சாரியில் செங்குத்தென்ப தில்லாமல் வரவரத் தாழ்ச்சியாகவே யிருக்கிறது. அதனுல் தொடர்ச்சியின் மேற்கு மத்திய பாகங்களில் பீட பூமிகளிருக்கின்றன. இவைகளிலே பல அழகிய மலை வாசஸ்தலங்களை அமைத்திருக்கிருர்கள்.

யுன்னுனிலிருந்து தொடர்ச்சிகள் விரிந்து செல்லு மிடை வெளியில் கிளேர், ஸாங்காய் (சிவப்பாறு) ஸாங்போ (கறுப்பாறு) முதலிய நதிகள் டான்கின் பிர தேசத்தில் பாய்கின்றன. ஆனுல் இந்தோ சைனுவின் முக்கிய நதி மீகாங்கே. இது திபேத்தில் உற்பத்தியாகி பல மைல்களுக்கு ஐக்கியத்திற்கு எல்லையாகச் சென்று இறுதியில் காம்போடியா வழியாகப் பாய்ந்து கொச்சின்

சைனுவில் கடலுடன் கலக்கிறது. இது 1900 மைல் நீளமுடையது. முதலில் கூறப்பட்ட நதிகளால் டான்கின் பிரதேசத்தில் 13,000 மைல் பரப்புள்ள வள நிலமும், (டெல்டா), மீகாங்கினுல் கொச்சின் சைனு, தென் காம்போடியாவில் 40,000 சதுர மைல் வள நிலமும் சாகுபடியாகின்றன. இந்த வள நிலப் பிரதேசத்தின் நீர்ப்பாசனத்திற்காகவும் போக்கு வரத்திற்காகவும் நதிகளின் கிளைகளை யெல்லாம் சம்பந்தப்படுத்திப் பல கால்வாய்களை சர்க்கார் வெட்டியிருக்கிறது. இவ்விரு பிரதேசங்களில் நெல், அபரிமிதமாக விளைகிறது. போர் காலத்திற்கு முன் இங்கு விளையும் அதிகப்படியான அரிசி சுமார் பத்துலட்ச டன்களுக்கு மேல் பிற நாடுகளுக்கு ஏற்று மதியானது. மொத்த ஏற்றுமதியில் அது 62% ஆகும். உலகிலேயே நெல் விளைச்சலில் இந்தோ சைனு மூன்றும் ஸ்தானம் வகிக்கிறது. 63 லட்சம் டன் அரிசி உற்பத்தியாகிறது. கம்போடியாவின் மத்தியப் பிரதேசத்திலேயே டான்ஸிலாப் என்ற பெரிய ஏரி யிருக்கிறது. இதில் மீன் பிடிப்பு அதிகம். இந்த ஏரியில் மீகாங் நதியில் பிரவாக காலத்தில் வரும் அதிக நீரை நிரப்புகிறுர்கள். மீகாங்கில் நீர் குறையும்போது ஏரியின் நீர் நதிக்குக் கொண்டு போகப்படுகிறது. இதன் ஜலம் நீர்ப்பாசனத்திற்கும் பயன்படுகிறது.

சித்திரை மாதத்திலிருந்து புரட்டாசி முடிய தென்மேற்குத் திசையிலிருந்து பருவக்காற்று அடித்து ஏராளமான மழையைக் கொணர்கிறது. இதனுல் அடிக்கடி வெள்ளமும் ஏற்படுவதுண்டு. இக்காலத்தில் மழை பெய்தாலும் வெய்யிலும் அதிகமிருக்கும். மற்ற மாதங்களிலே பருவக் காற்று வடகிழக்கிலிருந்து அடிக்கும். ஆனுல் அப்பொழுது மழையிராது. இக்காலத்திலே வடபாகத்தில் இரவிலும் பகலிலுமுள்ள வெட்பதட்ப நிலையில் பெருத்த வித்தியாசமுண்டு. தை மாதத்தில் இது மிகவும் பெருகும். அம்மாதிரியே வேனிற் காலத்திலும் இங்கு சென்னையை

விட அதிக உஷ்ணமுண்டு. தென் இந்தோ சைனுவில் மாரிகால வேனிற்கால உஷ்ண நிலேக்கும் இரவு பகல் நிலேக்கும் அதிக வித்தியாசமில்லே. ஆடி, ஆவணி மாதங்களில் பிலிப்பைனிலிருந்து கிளம்பி உக்கிரமாக அன்னுமின் கிழக்குக் கரையோரங்களில் பலத்த புயல்கள் அடிக்கடி அடிப்பதுண்டு.

கி. பி. 1788 லேயே பிரஞ்சுக்காரர்கள் இந்தோ சைனுவில் தலேகாட்டினுலும் 1859-லேயே மண்ணுசைப் பித்து அவர்களேப் பிடித்துக்கொண்டது. ஆகவே ஆட்சி புரிய பிரஞ்சுக்காரர்கள் இந்தோ சைனுவில் வசிக்க வேண்டியிருக்குமென்பதும் ஏற்பட்டுவிட்டது. எனவே 1885-ல் முதன் முதலாகப் பிரஞ்சுக்காரர் நாட்டின் சுகாதாரத்திலும் நாட்டங் கொண்டனர். போர் துவங்கு முன்னர் அங்கு 400 பிரஞ்சு வைத்தியரும், 80 சுதேசி வைத்தியருமே யிருந்தனர். சில விடங்களிலேயே இலவச வைத்தியம். வட இந்தோ சைனுவில் ஆண்டு தோறும் இறப்பவரைவிட பிறப்பவர் தொகையே ஒரு லட்சத்திற்கு மேலிருப்பதாகத் தெரிகிறது. இந்தியாவில் பிரிட்டிஷார் மலேவாசஸ்தலங்களே ஏற்படுத்தி யிருப்பதுபோல் டான்கின், ஹனுய், மத்திய தெற்கு அன்னும், கம்போடியா முதலிய இடங்களில் வாசஸ்தலங்களே அமைத்திருக்கின்றனர். ஆலாங் விரிகுடா, அன்னுமின் கீழ் கரை, செயிட் ஜாக்ஸ் முனே, சைகோன் நதி முகத்துவாரம், தென் கம்போடியா முதலிய இடங்களிலே கடற்கரை உல்லாச வாசஸ்தலங்களேயும் நிர்மாணித்திருக்கின்றனர்.

## இயற்கைச் செல்வம்

இந்தோ சைனுவின் இயற்கை செல்வத்தை இன்னும் பிரஞ்சு சர்க்கார் அறியவில்லே. அதில் ஈடுபட்டால் மேலும் பல உலோகக் கனிகளேக் காணலாம். இப்போது அதிகச் சிரமமின்றி அதிக லாபத்தை அடையக் கூடியவைகளிலே கருத்து சென்று கொண்டிருக்கிறது.

நாட்டின் மூன்றிலிரண்டு பாகத்தில் காடுகளும், மலைகளும் அடர்ந்திருப்பதும் கவலை கொள்ளாததற்குக் காரணமாகும். நாட்டின் நிலமோ வளம் கொண்டது. தொன்று தொட்டு இங்கு நெல்பயிரிடப்பட்டு வருகிறது. பிரஞ்சுக்காரர் ஆட்சி ஏற்பட்ட பிறகு தங்கள் நாட்டுக்குத் தேவையான சரக்குகளை ஏற்றுமதி செய்து கொண்டு போக வேண்டிய விளைபொருட்களையே பயிரிடத் தூண்டினார்கள். அவர்கள் முயற்சியால் மக்காசோளம், தேயிலை, புகையிலை, சணல், பஞ்சு முதலியன இப்போது விளைகின்றன. பல பிரெஞ்சுக்காரர்கள் மலைச்சாரலிலுள்ள வெட்ட வெளிகளை வளைத்துக்கொண்டு இப்போது, அங்கு, காப்பி, ரப்பர் தோட்டங்களைப் பெருவாரியாக அமைத்திருக்கின்றனர். பிரஞ்சு ஆட்சி ஏற்பட்ட பிறகே காட்டு மரங்களை வெட்டி விற்பதும் ஏற்பட்டதாம். டர்பன் டைன், (மர எண்ணெய்) கோந்து, கற்பூரம், இஞ்சி, அவுரி, லவங்கம் முதலியன இப்போது காட்டுப் பிரதேசங்களில் ஏராளமாக உற்பத்தியாகின்றன.

1920க்கு முன் சைனாக்காரர்கள் ஆதிக்யத்திலிருந்த சுரங்கத்தொழில்களைப் பிரெஞ்சுக்காரர் கைப்பற்றி விட்டனர். 1929ல் சுமார் 3 கோடி பெறுமானமுள்ள தாதுப் பொருட்கள் ஏற்றுமதியாயின. அரிசிக்கு அடுத்தபடி சுங்கவரி கிடைக்கும் இனம் இதுதான். இதில் முக்கியமானவை நிலக்கரி (25 லட்சம் டன் 77%; ஈயம் 10%; துத்தநாகம் 95%). நிலக்கரிக் கனிகள் அனைத்தும் வட கிழக்கு டான்கின் பிரதேசத்திலேயே யிருக்கின்றன. இவைகளைத் தவிர செம்பு, இரும்பு, தங்கம் முதலியன சிறிய அளவில் கிடைக்கின்றன.

பிரஞ்சு ஆட்சி இந்தோ சைனாவில் ஏற்படுமுன் ஆறுகளே நெடுந் தூரப்பயணத்திற்குப் பாதைகளாக விளங்கின. பிரெஞ்சு ஆட்சி கொச்சின் சைனாவிலிருந்து வடக்கில் பரவத் தொடங்கவே ஆட்சி உறுதி கொள்ளவும், ராணுவத் தேவைகளின் பொருட்டும் பல சாலைகளை

யும், ரயில்வேக்களையும், போட்டார்கள். போருக்கு முன் 18,000 மைல் ராஜ பாட்டையும், 2090 மைல் ரயில்வேயும் போடப்பட்டிருந்தன. இருபதாயிரத்திற்கு மேல் மோட்டார்களிருந்தன. கடற்கரையோரப் படகு போக்குவரவிற்கும் வசதி செய்தார்கள். முக்கியமாகப்புயல் காலங்களிலே அவைகளைப்பற்றி முன்னறிவிக்கப் பல ஆராய்ச்சி நிலையங்கள் அமைத்தார்கள். கொச்சின் சைனுவில் சைகோன், வட பாகத்தில் ஹனுயிற்குக் கிழக்கில் 50 மைலில் ஹெய்பாங், வட அன்னுமில் பின் கின் ஹ-யூவுக்கு அருகிலுள்ள துரானே முதலியனவே முக்கியத் துறைமுகங்கள். ஜப்பான்-ரஷ்யா போரின் போது வந்த ஜாரின் பால்டிக் கடற்படை அனைத்தும் தங்கிய காம்ரான் விரிகுடாவில் பிரஞ்சு சர்க்கார் போருக்குச் சில ஆண்டுகளுக்கு முன் சிங்கப்பூர் போல சிறிய அளவில் கடற்படை தளமொன்றை நிறுவ முனைந்தது.

இந்தோ சைனுவில் 1888லிருந்து 1918 வரையில் 40 கோடி பிராங்குகளை மூலதனமாகப் பிரஞ்சுக்காரர்கள் போட்டார்கள். அது தவிர ரயில்வே கம்பெனிகளுக்கு முதல் மகாயுத்தத்தின் முன்னர் 50 கோடி பிராங்குகள் போட்டார்கள். 1924க்குப் பிறகு தனிப்பட்டவர் முதலும் 1931க்குப் பிறகு சர்க்கார் கடனும் ஆருயிரம் கோடி பிராங்குகள் பெருகின. 1938ல் பிரஞ்சு மூலதனம் 200 கோடி பிராங்கிற்கு எட்டியது. அதனுல் ஆண்டுக்கு முக்கால் வட்டி வீதம் லாபமுமடைந்தனர். இந்தோ சைனுவின் வரவு செலவு தொகையில் பத்திலொருபாகம் தேசியக் கடன் வட்டிக்கே சென்றது. அவைகளனைத்தும் பிரான்சிற்கே சென்றது. பிரான்சு அதன் வெளிநாட்டு வியாபாரத்தில் அரை பாகம் தானே எடுத்துக்கொண்டது. பிரான்சிற்குச் சாதகமாக அதன் வரி விகிதங்களை அமைத்தனர். 1936-38ல் இந்தோ சைனுவின் இறக்குமதியில் 53%ம்; ஏற்றுமதியில் 49.7%ம் பிரான்சு எடுத்துக்கொண்டது. பிரான்சிற்கு ஏற்றுமதி செய்ததைவிட இறக்கு

மதியே அதிகம். ஜப்பானே ஏற்றுமதியைவிட அதிக இறக்குமதி செய்தது. இந்தோசைஞு ஏற்றுமதி செய்யும் பொருள்களில் பெரும்பாலும் பக்கத்திலிருக்கும் நாடுகளுக்கு, முக்கியமாக ஜப்பானுக்குத் தேவையாகவிருந்துங்கூட—அவைகளுக்குச் சரக்குகள் செல்லாமலிருக்குமாறு தீர்வைகளும், வரிகளும் விதிக்கப்பட்டன. பிரன்சு முதலாளிகளுள்ள தொழில்களுக்கே பாதுகாப்பும் அளிக்கப்பட்டன. அதனுல் மக்களில் பெரும்பாலோர் முக்கால் பாகத்தினருக்கு மேல் வேளாண்மையையே நம்பியிருக்க வேண்டியதாயிற்று.

அபின், சாராயம், கள், புகையிலை, உப்பு, தீக்குச்சி முதலியவைகளை ஏகபோக வியாபாரத்திற்கு விட்டதால் சர்க்காருக்கு லாபமாயிருந்தாலும், ஜனங்களுக்குக் கஷ்டமாய் முடிந்தது. பிரஞ்சு ஆட்சியில் இந்தோ சைஞுவில் அபின் வியாபாரம் அபரிமிதமாகப் பெருக்கப்பட்டதால் சர்க்காருக்கு ஏராளமாக வரும்படி. அதே பிரஞ்சு சர்க்கார் பிரான்சில் அபின் வைத்திருப்போரைச் சிறையிலடைக்கிறது.

இந்தோ சைஞுவில் கால் நடைகள் அதிகமில்லாதது குறிப்பிடத்தக்கது. பிரஞ்சுக்காரர்களே ஆடுகளை வளர்ப்பதற்கு முதலாவதாகக் கொண்டுவந்தார்களாம். இப்போதும் அதிக ஆடுகள் கிடையாது. இந்தோ சீனர் பாலையோ, பால் பண்டங்களையோ அதிகம் விரும்புவதுமில்லை. எருமைகளை உழவு நிமித்தம் வளர்க்கிருர்கள். அதன் மாமிசத்தையும் தின்னுகிருர்கள்.

$2\frac{1}{2}$ கோடிக்கு மேல் ஜனத்தொகையுள்ள இந்தோ சைஞுவில் சர்க்காரால் 7338 பள்ளிகளும், தனிப்பட்ட ஹோதாவில் 1519 கல்விச்சாலைகளும் நடத்தப்படுகின்றன. சர்க்கார் கல்விச்சாலைகளில் 5 லட்ச மாணவரும், தனி ஸ்தாபனங்களில் 1 லட்ச மாணவரும் படிக்கின்றனர். தனிப்பட்ட ஸ்தாபனங்களில் பல, கிறிஸ்தவ மிஷன்களால் நடத்தப்படுபவை. அவைகளுக்குச் சர்க்கார் உதவி

யும் செய்து வருகின்றது. மேலும் சர்க்கார் மிஷனரி வேலேக்குச் சாதகமாகப் பல சலுகைகளே யளித்தும் வருகிறது. இதனுல் இந்தோ சைனுவில் கிறிஸ்தவர் தொகையும் ஏறி வருகிறது. அப்படி மதம் மாறுபட்டோர் தம் ஆட்சியை விரும்புவதுடன், அது நிலேத்து நிற்க உதவுவரென்றும் சர்க்கார் நம்பியது. பசிபிக் போராட்டத்திலே கிழக்கிந்திய தீவுகளில் கிறிஸ்தவரான சுதேசிகளும், அஸ்ஸாம் எல்லேப்புறத்தில் கிறிஸ்தவரான நாகர்களும் பிறரும் நேசதேச ராணுவத்திற்கு உதவி செய்தது நோக்கற்பாலது. சுதேசிகளுடன் நெருங்கி வேலே செய்த பல விதேச மிஷனரிகளும்—ஆண்களும் பெண்களும் கூட—தங்கள் செல்வாக்கின் கீழிருந்த பல சுதேசிகளேக் கொண்டு நேசதேசப் படைகளுக்கு உளவு கூறுதல் போன்று பல விஷயங்களில் பலமுனேகளில் உதவி செய்தார்கள்.

## மக்கட் பிரிவுகள்

இந்தோ சைனுவின் மொத்த ஜனங்களில் முக்கால் பாகத்தினர் அன்னுமியரே. இவர்கள் சுமார் 2 கோடியினராகும். இவர்களோ சீனக் கலாசாரத்துடன் பெரிதும் கலந்தவர்களாகத் தெரிகிறது. டான்கின், அன்னும் கொச்சின்சீனு ஆகிய பிரதேசங்களில் இவர்கள் வசிக்கிருர்கள். இவர்களுக்கு உடல் வளர்ச்சி அதிகமில்லே. பெரும்பாலோர் 5' 2''க்கு உட்பட்டேயிருப்பர். தென் பிரதேச அன்னுமியரைவிட வட பாகத்திலிருப்போர் தேகவலுவுள்ளவர். ஆனுல் தென் பாகத்திலிருப்போரிடைதான் பண்பும் அழகுமிருக்கின்றன. அன்னுமின் தலே நகராகிய ஹியூ நகரின் பெண்கள் ரம்பை போல் அழகு படைத்தவர்கள்.

அன்னுமியர் பாஷையில் பல வடமொழிப் பதங்கள் கலந்திருக்கின்றன. ஆனுல் தாய்(ஸயாம்) பாஷையின் இலக்கணவிதிகளேயே கையாளுவதால் அப்பதங்கள் சிதைந்திருக்

கின்றன. சீன பாஷையின் பலசொற்களும் சேர்ந்திருக்கின்றன. பொதுவாக அன்னமியர் பொறுமை உடையவர். ஆடம்பரத்தில் ஆசை கொண்டவர். எவரிடமும் எச்சரிக்கையாகவே நடந்துகொள்ளக்கூடியவர். தன்னடக்கமுடையவர். அரிசிச் சாதமும், மீனும் கொஞ்சம் காய் கறிகளுமே அன்னமியரின் அன்றுட ஆகாரம். விசேஷ பண்டிகைகளின்போதே வாத்துக் கறியும், பன்றி மாமிசமும் உண்பது வழக்கம். லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பதில்லை; குடிப்பதும் கிடையாது. ஆனல் நம்மைப்போல் வெற்றிலை பாக்கு மெல்லும் பேர்வழிகள். ஆகவே அம்மரபினரில் பலர் சரியான புஷ்டி ஆகாரமின்றி சோகையாக இருப்பதைக் காணலாம்.

சீனவின் கலாசாரத்தை ஏற்றதுபோல் அதன் மதத்தையும் ஏற்றுக் கொண்டவர் அன்னமியர். பித்ரு பூஜை, குடும்பப் பெரியார்களிடம் மரியாதை, குலாபிமானம் ஆகிய இவை அவர்களிடம் பூரணமாகக் குடிகொண்டிருக்கின்றன. கிராம சபைகளே சமுதாய வாழ்வுக்கு அடிப்படை. அனுபவஸ்தர்களாயும், வயது முதிர்ந்தவர்களாயுமிருக்கும் செல்வந்தர்களே இச்சபைகளில் பதவி பெறுவார்கள். இவர்கள் மஹாயான பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்களானலும் மதப்பற்று அதிகம் கிடையாது.

பத்து லட்சத்திற்கு மேல் கிறிஸ்தவர்களான அன்னமியரிருக்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் தென் டான்கின், வட அன்னம், சைகோன் பிரதேசங்களிலேயே இருக்கிருர்கள். ஜப்பானிலுள்ள ஷின்டோயிசம் போன்று அன்னமிலும் சகல மதத்தாரையும் ஒன்று சேர்க்க 1924-ல் காடேய்சமென்ற புது சமயம் ஸ்தாபிக்கப்பட்டது. இருபது இருபத்திரண்டு வருஷங்களிலேயே அதில் பத்து லட்சம் பேருக்கு மேல் அன்னமியர் சேர்ந்துவிட்டனர். அன்னமியரில் பெரும்பாலோர் வேளாண்மையிலும், மீன்பிடிப்பதிலுமே ஈடுபட்டிருக்கின்றனர்.

அதிகாரப்பதவியிலிருப் போரில் பலர் இப்போது மேற்கத்திய நாகரிகத்தைத் தழுவி விட்டனர்.

கம்போடியரே அடுத்தபடி கவனிக்கப்பட வேண்டியவர்கள். மொத்தத் தொகை 30 லட்சத்திற்கு மேலிருக்கும். மீகாங்நதி பிரதேசத்தில் வாழ்பவர்கள். உயரமானவர்கள். இந்துக்களுடன் அதிகத்தொடர்பு கொண்டவர்கள். இவர்கள் நாட்டிலேயே பழய காலத்து இந்துக் கோவில்கள் பாழடைந்த நிலையிலிருப்பதை இன்றும் காணலாம். விருந்தாளிகளை உபசரிக்கும் குணமும், பரந்த மனப்பான்மையும், சோம்பேறித்தனமும், மதபக்தியும் கொண்டவர்கள். கட்டுப்படுத்திக் கூற முடியாத மாறுபட்ட குணமுடையவர் என்கிறார் மேலை நாட்டாசிரியர் ஒருவர். இவர்கள் ஹினயான பௌத்த இனத்தைச் சேர்ந்தவர்கள். கம்போடியாவில் பௌத்த மடங்கள் அனந்தம். அவை சமுதாய சக்கரங்களாக விளங்குகின்றன. படிப்பிற்கும், தியானத்திற்கும் கம்போடியர் மடங்களை அடிக்கடி நாடுவதுண்டு. முன் காலத்தில் கம்போடியர் பல நாடுகளை ஆண்டனர். பிற்பாடு தாய்லாந்திடமும் அன்னமிடமும் போரிட்டுக் களைத்து இறுதியில் 1863ல் பிரஞ்சுக்காரரிடம் சரண் புகுந்தனர். அதைச் சுதேச சமஸ்தானமாகப் பிரஞ்சு சர்க்கார் விட்டிருக்கிறது.

ஒரு லட்சம் ஜனத் தொகையுள்ள ஸாமியர் வெகு காலம்வரை மத்திய அன்னமை ஆண்டனர். இவர்கள் இந்தியப் பண்பில் பூர்ணமாகக் கலந்தவர்கள். இவர்களில் பலர் பின்காலத்தில் இஸ்லாம் மதத்தைத் தழுவி விட்டனர். இன்று அவர்கள் வேளாண்மையிலேயே ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்கள் சமுதாயத்தில் பெண்களே நடு நாயகமாக விளங்குகிறார்கள். வீட்டுக் காரியம், வயல் வேலை, கடை கண்ணிகளுக்குப் போவது யாவையுமே பெண்கள் கவனிக்கிறார்கள். இந்து ஸாமியர் 'பார்வதி' தேவியை தொழுபவர். தென் அன்னமில் நாதிராங் என்ற விடத்தில் அழகான அம்பிகையின் ஆலயமுமிருக்கிறது.

புதைப் பொருள் ஆராய்ச்சியாளர் இப்போது ஸாமியரின் பழைய தலைநகரான சிம்ஹபுரத்தையும், இந்திரப் பிரஸ்த மென்ற வேறொரு நகரையும் கண்டுபிடித்திருக்கின்றனர். அங்குள்ள இடிந்து பாழடைந்துபோன கோவில்களை இன்றும் காணலாம். பத்தாவது நூற்றாண்டு முடிய இவர்கள் ஆட்சி பலத்திருந்தது. அதிலிருந்து குறையத் தொடங்கி பதினேழாம் நூற்றாண்டில் முற்றும் அழிந்து விட்டது.

வட மீகாங் பகுதியிலே யுள்ள லாஆஷியர் தொகை ஆறு லட்சத்திற்கு மேலிருக்கும். இவர்கள் நாடு 1893-ல் பிரஞ்சு பாதுகாப்புக்குப் பலியானது. இவர்களும் கள்ளங்கபடமற்ற உபசரிப்புக் குணமுள்ள மக்கள். அதிக வளர்ச்சியில்லாதவர். 5 அடி, 2½ அங்குலம் சராசரி உயரம். வசிக்கும் பிரதேசம் செழிப்பானபடியால் அதிக சிரமமில்லாமலே நெல், வாழை, மா, தென்னை முதலியவை களை விளைவிக்க முடிகிறது. செல்வந்தர்களைத் தவிர இதரர் மூங்கில் வீடுகளிலேயே வசிக்கின்றனர். இவர் களும் பௌத்தர்கள். ஆனால் பேய் பிசாசில் நம்பிக்கை யுள்ளவர்கள்.


கான்டன், புகியன் பிராந்தியங்களிலிருந்து வந்த சீனர்கள் சுமார் ஆறு லட்சம் பேர் இந்தோ சைனா பூராவி லும் பரந்து வசிக்கிறார்கள். சைகோன் அருகிலுள்ள சோலன், ஹனாய், நாம்பென் முதலிய இடங்களிலே இவர் களின் பெரிய குடியிருப்புகளுண்டு. கி. மு. 300 க்கு முந்தி முதலே, அன்னமுடன், சைனா தொடர்பு கொண் டிருந்தது. தனி சுதந்திர ராஜாங்கமாக அன்னம் பிரிந்து போனபோதும் சைனாவுடன் கொண்ட கலாசாரத் தொடர்பை விட்டுவிடவில்லை. மன்சூ வமிசத்தார் மிங் வமிசத்தை விரட்டி யடித்தபோது பல சீனர் 1680 ல் கொச்சின் சைனாவில் வந்து குடியேறினர்.

இந்தோ சைனாவின் அரிசி வியாபாரம் பெரிதும் சீனரிடமே இருக்கிறது. கொச்சின் சைனாவில் ஆற்றுத்

தோணி ஓட்டும் தொழிலும் அன்னாரிடமே. தோல், மீன் வியாபாரத்திலும் அவர்களுக்குப் பெரிய பங்கு. இது தவிர பல பெரும் மளிகைக் கடைகளையும் அவர்கள் நடத்துகிறார்கள். தங்களுடன் சில வியாபாரத்தில் சீனர் போட்டியிடுவதைக்கண்ட பிரஞ்சுக்காரர் அவர்களை ஒழிக்கவும் விரும்பினர். அன்னாமியருக்கும், அவர்களுக்கு மிடையே பூசல்களையும் விளைவித்தனர். பிரித்தாளும் தந்திரத்தைப் பிரெஞ்சுக்காரர் அங்கும் கைவிடவில்லை.

சமீபகாலமாகக் குடியேறிய மலேயர் சுமார் முக்கால் லட்சமிருக்கின்றனர். இவர்கள் பெரிதும் கம்போடியா, கொச்சின் சைனா ஆகிய விடங்களிலேயே வசிக்கிறார்கள். இவர்கள் நெசவிலும் மீன் பிடிப்பதிலும், அங்காடி கடை வைப்பதிலும் படகோட்டுவதிலுமே ஈடுபட்டிருக்கிறார் கள். இவர்களும் முஸல்மான்களே யானாலும் ஸாமி முஸ்லிம்களைவிட மதவைராக்கியம் கொண்டவர்கள். கோஷா முறையைக் கடுமையாக அனுஷ்டிப்பதுடன், ரம்ஜான் விரதம், சுன்னத்து, பன்றி மாமிச விலக்கு, மது விலக்கு முதலியவையும் கையாளுகிறார்கள்.

சைகோன் தேசத்தில் இருப்பதெல்லாம் ஏழாயிரம் இந்தியரே. பலர் பிரஞ்சுஇந்தியாவிலிருந்து போனகத்தோ லிகர். இந்தியர்அங்காடிக் கடைகளையும் துணிக் கடைகளை யும் வைத்துச் சீவனம் நடத்துகின்றனர். இவர்களில் பலர் முஸ்லிம்கள். பல நாட்டுக் கோட்டை செட்டிமார் தவணைக் கடைகளையும் வைத்திருக்கிறார்கள். சைகோனில் தமிழ் பத்திரிகை யொன்றும் சில காலத்திற்கு வெளி வந்து கொண்டிருந்தது. தென்னிந்திய முறைப்படி இந்து ஆலயங்களை இங்கே நம்மவர் கட்டியிருக்கின்றனர். சில இந்தியர் வண்டியோட்டிகளாய் வேலை செய்கிறார்கள். பிரஞ்சு இந்தியாவிலிருந்து சென்றவர் சர்க்கார் உத்தி யோகங்களில் பதவி வகிக்கிறார்கள். இந்தியரில் பெரும் பாலும் கொச்சின்சைனாவிலேயே வசிக்கிறார்கள். அங் குள்ள மக்களின் செல்வத்தைத் தவணைக் கடைகள்



சைகோன் நகர தெருவொன்றின் தோற்றம்

மூலமாகச் செட்டிமார் உறிஞ்சுவதாக வர்ஜினியா தாம்சன் என்ற ஆங்கில மாது கூறுகிருர். செட்டியார் கள் 5 கோடி பியர்ஸ்டுகள் மூலதனம் போட்டிருக்கிருர் களென்றும், கொச்சின் சைனுவிலுள்ள சாகுபடி வயல் களில் கால் வாசி அவர்களிடமிருக்கிறதென்றும் அவர் கள் விரும்பத்தகாதவர்களென்றும் தம் இந்தோ சைனு நூலில் குறிப்பிடுகிருர். 1900 லிருந்து முப்பது வருஷ காலத்தில் சுமார் 18 கோடி பியர்ஸட்டுகள் அன்னு மியர் செட்டியார்களுக்குக் கொடுத்திருக்கிருர்களென்றும் அதில் கால் பாகம் இந்தியாவிற்கும், மற்ருெரு கால் பாகம் மூலதனத்திற்கும் சென்றதென பி. பானுர்டு கூறுகிருர்.

போருக்கு முன் ஜப்பானியர் தொகை அதிகமில்லை. 400 பேரே. இந்தியர்களைப் போல் அவர்களும் அவர்கள் நாட்டார் வைத்திருக்கும் சில வர்த்தக நிலையங்களில் வேலை செய்யவே வந்தார்கள்.

மொத்தம் சுமார் ஐம்பதாயிரம் பிரஞ்சுக்காரர் களிருக்கிருர்கள். இவர்களில் பெரும் பாலோர் ராணுவத் திலும் சர்க்காரிலும் அதிகாரிகளாயிருக்கிருர்கள். பிறர் தோட்டக்காரர்களாயும் பாதிரிகளாயும் பெரிய வியாபாரி களாயும் சுரங்க முதலாளிகளாயும், ஆலைச் சொந்தக்காரர் களாயும் இருக்கிருர்கள். ஆகவே நாட்டின் செல்வத்தை உறிஞ்சும் குழாய் அவர்கள் கையிலிருப்பது வெள்ளிடை மலை. அது விழும் தொட்டியோ பிரான்சு.

ஏகாதிபத்தியங்கள் எதுவானுலும் சரி, பிரிட்டிஷ், பிரஞ்சு, டச்சு, பெல்ஜியம், போர்ச்சுகல் எல்லாம் பிரித் தாளும் சூழ்ச்சியை வெகு சமர்த்தாரமாகக் கையாண்டு கறுப்பர்களை அடிமைகளாக்கி, தம் நாட்டவர்களை எஜமானர்களாக்கி அயல்நாடுகளை ஆண்டு வருகின்றன. இந்தோ சைனுவில் மலைகளிலும், காடுகளிலும் வசிப்பவர் களைத் தனி ஜாதியாராகவே ஐரோப்பிய நிற நிபுணர்கள் பிரிக்கிருர்கள். மலை ஜாதியார் சுமார் 7 லட்சத்திற்கு மேலிருக்கிருர்கள். அவர்களைத் தாய், முவாங், மான்,

மியோ, மாய், பணுங்கா என்ற பல பிரிவுகளாகப் பிரித்திருக்கிருர்கள். இவர்களில் சில ஜாதியார் நாட்டாண்மைக்காரர் அதிகாரத்திலும், பிறர் தான்தோன்றித்தனமாகவும் வாழ்கின்றனர். பொதுவாக இவர்கள் அனேவரும் நம்மைப் போலவே சொத்துரிமை வழக்கம் கொண்டாலும் ஜராய், ராதை என்ற இரு வகுப்பாரிடை மாத்திரம் மருமக்க தாயமிருக்கிறதாம். இவர்களில் பெரும்பாலோர் திடகாத்திரமுள்ளவர்கள். மலேகள் ஏறுவதற்குள்ள வலுவுடையவர்கள், பெரும்பாலோர் வேளாண்மையிலேயே ஈடுபட்டிருக்கிருர்கள். அவர்களுக்கு மந்திரவாதிகளிடம் அபார நம்பிக்கை. சங்கீதம், ஒப்பாரி, கேளிக்கை விளேயாட்டுகளில் அவர்களுக்கு அளவுகடந்த ஆசை. குடிப்பழக்கமுண்டு. பல தார மணத்திற்குத் தடையில்லாவிட்டாலும் அதிகமாகக் கையாளுவது கிடையாது. 1889 முதலே இம்மலேச் சாதியாரைக் கொண்ட பட்டாளங்களேப் பிரெஞ்சுக்காரர் திரட்டி வைத்திருக்கின்றனர். இவர்களில் பலர் அரை நிர்வாணிகள். இம்மலேச் சாதியார் எப்பிரதேசத்தில் வசிக்கிருர்களோ, அப்பக்கத்து உடையணிகளேயே சிறிது மாற்றி அணிவது வழக்கம். தென் இந்தோ சைனுவிலிருக்கும் மலேச்சாதியார், வேட்டையில் அதிகக் கவனம் செலுத்துகின்றனர். இவர்களில் பலர் பூமாதேவி, இந்திரன், வருணன், அக்னி தேவர்களே வழிபடுவோர். இவர்களேயே பிரஞ்சு, அமெரிக்கப் பாதிரிகள் கிறிஸ்தவராக்குகிருர்கள்.

---

# II

# அன்னமியர் வரலாறு

ஏசுநாதர் அவதரிக்கு முன்னமேயே இந்தியாவின் கலாசார அலைகள் ஒரு புறமும், சீனக் கலாசார அலைகள் மற்றொரு புறமும் இந்தோ சீனாவின் மீது மோதி மோதி தம் தம் பண்பில் அந்நாட்டை மூழ்குவித்து வந்தன. வட பாகத்தில் சீனாவின் கலாசாரச் செல்வாக்கும் தெற்கிலும், மேற்கிலும் இந்தியாவின் கலாசாரச் செல்வாக்கும் ஓங்கின. தென் அன்னமின் ஸாமி நாகரிகமும், கம்போடியாவின் குமர் நாகரிகமும் இந்திய நாகரிகத்தின் பிரிவுகளே. கி. பி. 1000 வருஷங்கள் முடிய அன்னமில் சீனாவின் ஆதிக்கமிருந்தது. அதன் பிறகு, லே, லை, டிரான் வம்சத்தார் அன்னமை ஆண்டனர். அதனால் சீனக் கலாசார ஓட்டம் எவ்விதத்திலும் தடைப்படவில்லை. ஆனால் இதே காலத்தில் எக்காரணத்தாலோ இந்தியாவின் கலாசார வெள்ளம் தடைபட்டு நின்று விட்டது. ஆயிரம் வருஷங்களுக்கு முன் தென் கோள முழுதும் தன் பண்பைப் பரப்பிய இந்தியா திடீரென அதனை நிறுத்திக் கொண்டது இந்தியாவின் வரலாற்றிலேயே ஓர் ஆச்சரியமான கட்டம். இதன் காரணத்தை இன்னும் சரித்திராசிரியர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. சீனாவின் நாகரிக வெள்ளம் பெருகி அதுவே தன்னிகரற்று விளங்கியது. இந்து நாகரிகம் ஓட்டமில்லாத ஓடை நீராக நின்று பாசி பிடித்து விட்டது. அதன் தன்மையை இன்றும் அவ்விடங்களில் காணலாம். சீனாவின் நாகரிகத்தால் தென் கிழக்கு ஆசியா மக்கள் நன்மையை அடைந்தார்கள். அது எந்த நாட்டையும் அபகரிக்க எழவில்லை. என்பதும் நோக்கற்பாலது. சீனாவின் சாம்ராஜ்யம்

அண்டத்தின் அகண்ட ராஜ்யமாக விளங்கிய காலத்திலும் அது அயலாரை அண்டிக் கெடுக்கவில்லை. மேற்கத்திய ஜனநாயக வல்லரசுகள் தென் கிழக்கு ஆசியாவிலே, வர்த்தகமென்று கொள்ளையிலும், மதச் சுதந்திரமென்று தங்களுக்கு ஐந்தாம்படை அமைத்துக்கொள்ள மதப் பிரசாரத்திலும் ஈடுபட்டு இறுதியில் சாம்ராஜ்யங்களைப் பெருக்க ஆரம்பித்தபோது அன்னும் வலுவிலேயே சீனுவின் மேலாதிக்கத்தை ஏற்று ஒத்தாசை எதிர்பார்த்து நின்றது. சீனுவே அயலாரிடம் அவதிப்படும்போது அன்னுமிற்கு உதவ முடியாது போகவே அது அயலாரிடம் பணிய வேண்டியதாயிற்று.

சீனுவின் ஆட்சியிலிருந்து பிரிந்து தனியாட்சியைப் புது சகஸ்ர வருஷ சகாப்தத்தில் அன்னும் அமைத்துக் கொண்டு தன் அரசை வலுப்படுத்திக் கொண்டது. இந்தியாவின் கலாசாரத்தில் தொடர்பு கொண்டு ஒரு காலத்தில் பேரரசாக விளங்கிய தென் அன்னுமிலுள்ள சம்பா ராஜ்யத்தை அன்னுமியர் 1471-ல் கைப்பற்றினர். அன்னுமியர் சம்பாவை பிடித்தபோதே அது இந்தியாவின் தொடர்பற்று ஆட்டங் கொண்ட நிலையிலிருந்தது. எனவே அன்னுமியர் அதனை எளிதில் வெற்றி கொண்டனர். சம்பா அன்னுமியருக்கு இரையானதும் கொச்சின் சீனுவும் முடிவில் அன்னுமியருக்கு அடிபணிந்தது. அதனுல் அன்னுமியரும் கம்போடியரும் அண்டை ராஜ்யக்காரர்களானுர்கள். அன்றிருந்து அடிக்கடி இரு ராஜ்யங்களும் மோதிக் கொள்ள ஆரம்பித்தன. கம்போடியாவும் சம்பா ராஜ்யம்போல் கீழே விழும் நிலையை எட்டிக் கொண்டிருந்தது, ஆனுல் இதற்குள் அன்னுமியர் ராஜ குடும்பத்தில் சதியும், துரோகமும், கலகமும் மலியவே கம்போடியா சிறிது தாக்குப் பிடித்தது.

சம்பாவின் ராஜ்யம் ஒரு சமயம் கொச்சின் சீனுவையும் கொண்டிருந்தது. சம்பா ராஜ்யம் இரண்டாம் நூற்ருண்டிலே தோன்றிய அரசு. அந்நாட்டின் செல்வப்

பெருக்கை மார்கோ போலோ என்ற வேனீஸ் வர்த்தகன் கண்டு மேலை நாடுகளுக்குப் பதின்மூன்றும் நூற்றாண்டிலறிவித்தான். அது பின்னரே அன்னாமியருக்கு அடி பணிந்தது. சம்பா அடிக்கடி கம்போடியாவுடனும், அன்னாமுடனும் போரிட்டு பல மிழந்தது. ராதை, ஜராய் மலைவாசிகள் சம்பா ராஜ்ய மக்கள். 17ம் நூற்றாண்டில் வட அன்னாம் மாக்வமிசத்தாருக்கும் கொச்சின் சைனா நிகுயன்களுக்கும் டான்கின் திரின்களுக்கும் சதா சச்சரவிருந்து கொண்டிருந்தது.

கம்போடியாவை ஆண்டது குமர் மரபினர். கி. பி. 625ல் சீனா சாம்ராஜ்யத்திலிருந்து விலகியது. கம்போடியாவையும் அதைச் சுற்றியிருந்த பிரதேசங்களையும் ஸயாமையும் அவர்கள் ஒரு சமயம் ஆண்டார்கள். பழைய சீனா ஏடுகளிலிருந்து, கம்போடியா ராஜ்யம் உருக் கொள்ளுவதற்கு முன் அங்கு பௌனான் என்ற அரசு இருந்ததாகத் தெரிகிறது. மீகாங் நதிப் பாய்ச்சல் பிரதேசங்களெல்லாம் பௌனான் ஆட்சியில் ஏசு பிறந்த நூற்றாண்டிலேயே இருந்திருக்கிறது. ஆறும் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அது அழியத் தொடங்கியதாகவும் தெரிகிறது. முன்னமே குறிப்பிட்டப்படி இப்பிரதேசம் முழுதுமே இந்திய நாகரிகத்தில் முழுகியதாகும். இன்றும் அதற்குரிய சான்றுகள் பல அங்கிருக்கின்றன. அவர்கள் ஆட்சியில் கலை கரையற்று பெருகியது. குமர்கள் இந்தியர்களல்லாவிட்டாலும் இந்து பண்பிலேயே ஊறியவர்களானபடியால் அவர்கள் ஆட்சியின் போதும் சமஸ்கிருதமே தர்பார் பாஷையாக விருந்தது. பல பௌத்தர்களிருந்தாலும் இந்து மதமே எங்கிலும் ஓங்கியிருந்தது. பதின்மூன்றும் நூற்றாண்டு முடிய இதன் வளர்ச்சி தடைபடவில்லை. பின்னர் அண்டை நாடுகள் படையெடுக்கத் தொடங்கவே குமர் நாகரிகம் குலைந்தது. பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் கொச்சின் சைனாவும், ஸயாமும் அதனைக் குலைத்தன.

பதினாரும் நூற்றாண்டின் மத்தியில் வியாபாரத்திற் கென்றும், மதப் பிரசாரத்திற் கென்றும் போர்ச்சுகீசியர், ஸ்பானியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் யாவரும் இந்தோ சைனாவை மொய்க்க வந்தனர். 1553-ல் போர்ச்சுகீசியர் கம்போடியாவிலும், 1596-ல் ஸ்பானியர் அன்னாமிலும் 1637-ல் டச்சுக்காரர் டான்கிலும் வியாபார ஸ்தலங்களை அமைத்தனர். டச்சுக்காரர் 1700 வரையிலிருந்தனர். அலக்சாண்டர் ரோடஸ் என்ற கத்தோலிக்கப் பாதிரியார் பாஷை அபிவிருத்தி எனக் கூறி தேசீய லிபியைக் கொன்றார். அவரே அன்னாமிய பாஷைக்கு உரோமன் லிபியைப் புகுத்தியது. இதையே பின்னர் பிரஞ்சு சர்க்கார் கையாண்டது. இம்மகான் உரோமாபுரி போப்பரசருடன் கலந்து அயல் நாட்டு "மிஷனரி சொஸைட்டி" ஸ்தாபித்து அன்னாமில் பலரைக் கிறிஸ்தவராக்கினார். அன்று தொட்டது இன்று பத்துப் பதினைந்து லட்சக் கிறிஸ்தவர் தொகையில் முடிந்திருக்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டிலே பீர் பாய்வர் என்ற வேறொருவன் பிரஞ்சு சாம்ராஜ்யம் வேர் கொள்ள வழி காட்டினான். தென் கிழக்காசிய நாடுகளில் வியாபாரம் செய்வதாகக் கூறி எல்லா நாடுகளையும் சுற்றிவிட்டு ஆங்காங்குள்ள நிலைமையை எடுத்துக் காட்டினான்.

1788-ல் பிக்ளியூ பிஹெயின் என்பார் அன்னாமை ஆண்ட நிகுயன் வமிச அரசருடன் மேலை நாடுகளின் வியாபார சலுகைகள் பற்றியும், மதப் பிரசார உரிமை பற்றியும் உடன்படிக்கை யொன்று செய்து விடவே பிரெஞ்சுக்காரர் இந்தோ-சைனாவில் கால் கொள்ளுவது சௌகரியமாகி விட்டது. அதே நிகுயன் வமிசத்தைச் சேர்ந்த பாவ்தாய் என்பாரே 1945 வரையில் அன்னாமை ஆண்டார். ஓண்ட வந்த பிஹெயின் சும்மாவிருக்கவில்லை. வழக்கம்போல் தர்மகர்த்தா பொறுப் பேற்க முன்வந்தார். கீழ்திசை நாட்டு மக்களுக்குச் சாவின் பிறகு மோட்ச சாம்ராஜ்யம் சம்பாதித்துக் கொடுப்பதுடன்

நிற்காமல் இகலோகத்திலும் ஒரு சாம்ராஜ்யத்தை (பிரஞ்சு) அவர்களுக்கு (அன்னுமியருக்கு)ச் சம்பாதித்தும் கொடுத்தார். ஹியூவைத் தலை நகராகக் கொண்ட அன்னுமிய அரசே கி. பி. 1800 வரையில் அன்னும், டான்கின், கொச்சின் சைனு, லாஆஸ் முதலிய பிரதேசங்களை ஆண்டுவந்தது. வழக்கம்போல் அன்னுமியர் அரசர் பதவிக்குப் போட்டிகளும், சூழ்ச்சிகளும் மலிந்தன. அட்ரான் மேற்றிராணியாராக விருந்த பிக்ளியு பிஹெயின் பரலோக சித்தியை விட்டு இகலோக சித்தியில் இறங்கி கொச்சின் சைனு சிங்காதனத்திலிருந்து விரட்டப்பட்ட நிகுயன் ஆன் என்பவருக்குச் சிங்காதனம் கைப் பற்ற உதவினுர். அன்னுர் 1802லிருந்து 1820 வரையில் அன்னும் ராஜ்யத்தை ஆண்டார். அவருக்கு அயலாரின் உதவியால் அன்னுமியர் வாழும் இதர பிரதேசங்களும் கிடைத்தன. கியலாங் சக்ரவர்த்தி என்ற பேரும் கிடைத்தது. பக்தர் பிஹெயினும் தம் நாட்டிற்குக் கூலி பெற்றுர். ராஜ்யம் முழுவதிலும் தடையற்று வியாபாரம் நடத்தவும், மதப் பிரசாரம் செய்யவும் சலுகை பெற்றுர். இச் சலுகையே பிறகு பேராபத்தாக முடிந்தது. ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டியது. கியாலாங்கிற்குப் பிறகு பட்ட மேறிய மகன் மின்மாங்கும் அடுத்தபடி ஆண்ட டையன்திரியும் உடன்படிக்கையின்படி நடந்து கொள்ளவில்லை என்றும் கிறிஸ்தவரான சுதேசிகளைக் கொடுமைப் படுத்துகிறுரென்றும் அன்னியருக்கு விரோதமான கொள்கைகளைக் கையாளுகிறு ரென்றும் பிரெஞ்சுக்காரரும் ஸ்பானியரும் தூற்றலிலும் பிரசாரத்திலும் இறங்கினுர்கள். அன்னுமை ஏப்பமிட இது முதற்படி. மேற்கத்திய கிறிஸ்தவ ராஜ்யங்கள் அன்னுமியருக்கு எச்சரிக்கை கொடுக்கவும் முற்பட்டது.

## அந்நியர் படையெடுப்பு

**1857**-ல் டான்கின் ஸ்பானிய பிஷப் டயஸ் கொலே செய்யப்பட்டா ரென்ற முகாந்திரம் கொண்டு, இரு நாடுகளும் ஒன்றுசேர்ந்து 1858 ஆகஸ்டு 31-ந்தேதி அட்மிரல் கோல்ட் ஜினெளலி தலைமையில் ஒரு கடற் படையையும் அனுப்பின. ஹியூவுக்கு அருகாமையிலுள்ள துரானே துறைமுகத்தைத் துவம்சம் செய்தார் பிரெஞ்சு அட்மிரல். 1862-ல் சைகோனே அட்மிரல் கார்னட் ஆக்கிர மித்துக் கொண்டார். கொச்சின் சைனு முழுதுமே 1859-ல் பிரெஞ்சு அட்மிரல் ஆட்சிக்குட்பட்டது. 1861 ஜூன் 5-ல் அன்னும் அரசருக்கும், பிரஞ்சுக்காரருக்கும் ஏற்பட்ட ஏற்பாட்டின்படி பிரான்சின் கொச்சின் சைனு ஆக்கிரமிப்பை அன்னும் ஏற்றது. துரானே யிலும் வேறு பல துறைமுக நகரங்களிலும் பிரஞ் சுக்காரர் பல வியாபார சலுகைகளேப் பெற்றனர். பிரான்சு, சட்டத்தையும் சமாதானத்தையும் நிறுத்து வது தன் கடமையாகிவிட்டதென்று கூறிக்கொண்டு அண் டையிலுள்ள அரசுகளின் மீதும் கை வைக்க ஆசை கொண்டது. கம்போடியாவில் கலகத்தைத் தூண்டியது. அதுபற்றி ஸயாமிற்கும் பிரான்சிற்கும் பெரிய அடிதடி எழும்போலிருந்தது. இறுதியாக ஸயாம் (தாய்லந்து) தன் னுட்சியிலிருந்த கம்போடியாவை 1862ல் கை விட்டது. கம்போடியா அரசனுக்குப் பாதுகாப்பு கொடுப்பதாகக் கூறி அடுத்த ஆண்டில் அதைத்தன் வட்டாரத்திற்குப் பிரான்சு கொணர்ந்தது. 1860 லிருந்து 1904 வரை கம்போடியாவை ஆண்ட சிற்றரசனுன நரோதமன் பிரஞ் சுக்குச் சாதகமாக ஸயாமைப் பகைத்து மீர்ஜாபர் வேலே செய்தான். செளந்தபிரிய மகாராஜா என்ற வேறெருவரும் கம்போடியா பட்டத்திற்குப் போட்டி போட்டார். 1867-ல் கொச்சின் சைனுவின் கொஞ்ச நஞ்ச பாகத்தையும் விடாது தன்னுட்சியில் கொண்டு வந்தது. பிரான்சு அடுத்த பத்


தாம் வருஷம் டான்கின் சிற்றரசைக் கிளப்பி விட்டு அன்னும் ஆட்சியிலிருந்து அதை விலக்கி 1874-ல் பாது காப்பை அதன்மீது சுமத்தியது. 1873ல் டான்கின்கை ஆக்கிரமிக்கச் சென்ற லெப். பிரான்சிஸ் கார்னியர் என் பார் கொல்லப்பட்டதனால், அதையே காரணமாகக் கொண்டு அன்னுமினால் சட்ட சமாதானத்தைக் காப்பற்ற முடியாதெனக் கூறி தன் பாதுகாப்பிலிருக்க வேண்டு மென வற்புறுத்தி சுமத்தியது. அன்னுமிய அரசர் அதை அருவருத்ததால் சீனுவின் உதவி பெறுலாமெனக் கருதி தம் மரியாதையைச் செலுத்தினர். அன்னுமிய அரசர் தூடக் பிரான்சின் கொள்கைக்கு ஏற்றேபோவதாக உறுதி கூறுவதாகச் சொல்லிவிட்டு மீறுகிருரெனப் பிரான்சு மீண்டும் 1883ல் தாக்கியபோது சீனுவின் பின் பலமிருக்கிறதென அன்னும் எதிர்த்தது. அப்போது நடந்த யுத்தத்தில் பிரஞ்சு கடற்படை பூசௌ ஆயுதக் கிடங்கை நாசமாக்கி, ஸான்டேயில் சீனரைத் தோற் கடித்தது. 1884 ஜூன் 6ந்தேதி அன்னுமுடனும் 1885 ஏப்ரல் 4ந்தேதி சைனுவுடனும் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டது.

அதன்படி அன்னுமும், டான்கின்னும் பிரஞ்சு சாம் ராஜ்யத்திலுள்ள தனி சமஸ்தானங்களாயின. வேறு வகையின்றி கிழத்தன்மை யடைந்த சைனுவின் ‘திவ்விய பேரரசு’ ஒருப்பட வேண்டியதாயிற்று. பிரஞ்சு சர்க்கார் இந்தோ சைனுவில் சட்டத்தையும் சமாதானத்தையும் நிலை நிறுத்த பாதுகாப்புப் பொறுப்பை மனமுவந்து ஏற்றுக் கொண்டது. அன்னுமியரின் செல்வத்தைப் பெருக்கி வளர்க்கவும், அன்னுரின் தேசாசாரத்தை உன்னத மாக்கவுமே தான் தர்மகர்த்தா பொறுப்பேற்றுக் கொண் டிருப்பதாக பிரான்சு கூறியது.

தான் கொண்ட நாடுகளின் காவலின் பொருட்டு ஸயாமுடன் தகராறுகொள்ள பிரான்ஸ் அடிக்கடி முனைந்தது. பிரஞ்சு ஸ்தானிக ரொருவர் இறந்ததற்காக

1893ல் லாஆஸின் ராஜகுடும்பங்களை ஸயாமிலிருந்து பிரித்து தன்னுட்சிக்குட் படுத்தியது. ஷான் சமஸ்தானங்களைக் குறித்துப் பிரான்சு பிரிட்டன் ஸயாம் மூன்றும் தகராறு செய்தன. முன்னெல்லாம் பிரான்சிற்கு விரோதமாக ஸயாமைக் கிளப்பி வந்த பிரிட்டன் அதனைக் கைவிடவே ஸயாம் பிரான்சிற்கு இணங்க வேண்டியதாகி விட்டது. 1896ல் பிரான்சும் பிரிட்டனும் ஸயாம் குறித்து போரில் இறங்கும் போலிருந்தன. ' ஆனால் ஏகாதிபத்திய வழக்கம் போல் இரண்டும் எஞ்சிய ஸயாமின் எல்லைகளுக்கு உறுதி கூறின. ஸயாமை மூன்று பிரிவுகளாகப் பிரித்து கிழக்கில் பிரஞ்சு செல்வாக்கும் மேற்கில் பிரிட்டிஷ் செல்வாக்கும் இருப்பதுடன் இடையில் நடு நிலையுள்ள பிரதேசம் கொத்திக்கொள்ளுவதற்குமாக ஓர் ஏற்பாட்டிற்கு வந்தன. இவ்வாறு ஸயாமின் பாதுகாப்புக்கு உறுதி கொடுத்து பிரான்சு கிழக்கில் சில ஜில்லாக்களை எடுத்துக் கொண்டது; பிரிட்டனும் சளைக்கவில்லை. ஈடாக அதுவும் தெற்கிலுள்ள ஜில்லாக்களை எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று ' என்கிறார் பண்டித ஜவஹர்லால் நேரு. ' இதைப் பற்றி எழுதவே மனம் கூசுகிறது. ஏகாதிபத்தியம் கை வைத்த இடமெல்லாம் இதே போக்கடாத்தனம் ' என்று குறிப்பிடுகிறார் ஸ்ரீ இந்திராவிற்கு எழுதிய கடிதத்தில்.

1877ல் கம்போடியா, கொச்சின் சைனா, அன்னம், டான்கின் யாவும் ஒரே பிரஞ்சு கவர்னர் ஜெனரல் ஆட்சிக்குட்பட்டது. அன்னார் பிரெஞ்சு கலோனியல் மந்திரிக்கே பொறுப்பானவரென்றும் முடிவானது. 1879 வரையில் பிரஞ்சு இந்தோ சைனா அட்மிரல்கள் ஆட்சியிலேயே இருந்தது. அவர்கள் பிரஞ்சு கடற்படை இலாகாவிற்கே பொறுப்பு உள்ளவர்கள். அப்போதெல்லாம் அவர்கள் இந்தோ சைனாவில் ' சமாதானத்தைப் பரப்பி வந்தார்கள். மக்கள் தேசிய உணர்ச்சி அற்று ' சமாதானப் ' பிரியர்களாய் ஆனதும் சிவில் கவர்னர் நியமிக்கப்பட்டார்.



அங்கர் ஆலயத்தில் 7 தலை நாகம்

அன்றிருந்து பிரஞ்சு சர்க்கார் நாட்டின் மக்களை 'உய்விக்க'வும் சரியான கல்வி போதனுமுறை அமையவும், அதிகாரத்தில் சுதேசிகளும் பங்குகொள்ளவும் உழைக்கிறது. அன்னுமியரும் ஸயாமியரும் (தாய்லந்தார்) லா ஆஸைப்பற்றி தகராறு செய்துகொண்டு வந்ததை நீக்கவே லாஆஸை பிரான்சு எடுத்துக்கொண்டதாம். லாஆஸின் மக்களும் இந்தியக் கலாசாரத்தில் முழுகியவர்கள். அவர்கள் ஒழுங்கான அரசை நடத்தி வந்ததாகச் சரித்திராசிரியர்கள் கூறுகிறார்கள். 15-ம் நூற்றாண்டிலேயே கருணையை நிலைநாட்டத் தோன்றிய பௌத்தமத அரசனொருவன் மேலை நாட்டில் கத்தோலிகரும், புது மதத்தாரும் ஒருவரையொருவர் கொள்ளி வைத்தெரித்தது போல, இந்து ஜனங்களை வெகுவாகக் கொடுமை படுத்தினான். இன்றும் அவ்விருமதச் சாயல்களைப் பரக்கக் காணலாம். ஒருவனுக்குணவில்லை எனில் திருடவும் அந்நாட்டு பரம்பரை சட்டம் கூறுகிறது. தான் உண்டதிற்கு மேல் எதுவும் கையிலெடுத்துப் போகக்கூடாது. அங்கு கிராம கணக்கர் உண்டு. ஸயாமியர் லாஆசுகளைத் தம்மிருப்பிடத்திலிருந்து கிளப்பிக்கொண்டு போனதாகப் பிரான்சு குற்றஞ்சாட்டியது. அதன் தாய் சாம் ராஜ்யத்திற்குத் தடைபோட்டது. 1893ல் ஸயாமைத் தாக்கி 1894-ல் லூவாங் பிரபாங்கையும் பிரான்ஸ் கபளிகரம் செய்தது. 1899ல் சைனாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி. ஹெய்னான் தீவுக்கு எதிரிலுள்ள குவாங் சோவன் பிரதேசத்தையும் 99 ஆண்டு குத்தகையாக எடுத்துத் தன் இந்தோ சைனா யூனியனுடன் பிரான்சு சேர்த்தது. புது நூற்றாண்டு பிறந்தும் அதன் ஆசை அடங்கியபாடில்லை. 1907-ல் தாய்லந்தி (ஸயாம்) டமிருந்து பட்டம் பாங், ஸிஸோபன், ஸியாம் ரீப் (இங்குதான் அங்கர் ஆலய மிருக்கிறது) ஆகிய ஜில்லாக்களைக் கம்போடியாவிற்கென எடுத்துச் சேர்த்துக்கொண்டது.

பித்தலாட்டம், மோசடி முதலிய போக்கடாத் தன

முறைகளைக் கொண்டு நிறுவப்பட்ட பிரஞ்சு சாம்ராஜ்யம் எப்படி நடந்து வந்தது? வியாபாரத்திற் கென்றும் மதப்பிரசாரத்திற் கென்றும் வந்த பிரான்சு, மதமாறிய அன்னுமியரை ஐந்தாம் படையாகக் கொண்டு ஆட்சி நடத்தி வந்தது. பெரிய அதிகாரிகளெல்லாம் ஐரோப்பியர்கள். அடுத்தபடியாகச் சட்டைக்காரர்களெனப்படும் வெள்ளை பிரஞ்சுகளுடன் ரத்தக் கலப்பு கொண்ட அரை சுதேசிகள்; முடிவாகக்கிறிஸ்தவ சுதேசிகள்.

## சுதந்திர உணர்ச்சி

கொச்சின் சைனுவை ஆக்கிரமித்த போதே அப்பிர தேச மக்கள் பிரான்சினிடம் தங்களுக்குள்ள அவநம்பிக்கையைக் காட்டி விட்டார்கள். 1862ல் சைகோன் அட்மிரலுக்கு வந்த கடிதமொன்றில் மேற்கும் கிழக்கும் சேராதென்றும், கொச்சின் சைனுவை அபகரித்ததற்குப் பழிவாங்கப் போவதாகவும் கண்டிருந்தது. நவீன நாகரீகச் சின்னங்களாகிய பீரங்கிகளும், சுழல் துப்பாக்கிகளுமற்ற அன்னுமியர் தங்கள் கோபத்தை சொத்து நாசத்திலும், மதமாறிய அன்னுமியரை ஒழிப்பதிலும் காட்டினர். ஆகவே அவர்களைக் கள்வர்களென்றும், மதக் கசடர்களென்றும் பிரான்சு பறைசாற்றி படுகொலை செய்வது எளிதாகிவிட்டது. சன்யாட்சென் பற்றவைத்த சீனப்புரட்சியும், ரஷ்யாவை இந்நூற்றுண்டு தொடக்கத்தில் ஜப்பான் மண் கவ்வச் செய்ததும் அன்னுமிய மக்களை விழிக்கச் செய்து விட்டன. சீனர் அன்னுமிய தேசியத்திற்கு ஆதரவு தந்தனர். அன்னுமிய யுவசங்கம் ஜார் மன்னருடன் பிரான்சு சேர்ந்திருப்பதைக் கண்டித்து கவர்னர் கிளிமன் தாலுக்கு மகஜரனுப்பியது. பயங்கரவாதிகளும் தலை காட்டினுர்கள். குண்டு வீச்சு அடிக்கடி தோன்றின. சைனுவும், ஜப்பானும் அன்னுமிய மாணவர் வந்து படிக்க வசதி தந்தன. மார்ஷல் சியாங்கும், சோயென் லேயும் உதவினர். அதைக் கண்ட

பிரஞ்சு சர்க்கார் வெளி நாட்டுச் செல்வாக்கிற்குள் அவர்கள் அடங்கிவிடுவார்களெனப்பயந்து ஹனுயில் சர்வகலா சாலை யொன்றைத் துவக்கியது. ஆனால் 1908-ல் நடந்த கலவரத்தின் காரணமாக அதனைப் பிரஞ்சு சர்க்கார் மூடிவிடவே, பிரான்சிடம் அன்னுமியரின் வெறுப்பு அதிகமாயிற்று. 1914-18 மகா யுத்தம் நடந்தபோது பிரான்சின் தோல்விகளைக் கண்டு ஜனங்கள் அதனிடம் அவநம்பிக்கை கொள்ளத் தொடங்கினர். அன்னும் மன்னர் துய்தான் தப்பியோட முயன்றார். அப்போது குவாங்கி போன்ற பல இடங்களில் கலகங்கள் தலைகாட்டின. 1916ல் தாய்நிகுயர் ராணுவப் போலிஸ் புரட்சியில் ரெஸிடென்ட் டார்லஸ் பண்ணிய அட்டூழியம் கொஞ்ச நஞ்சமல்ல. தன்னை மீறியவர்களை யெல்லாம் அவன் பெல்சாம் முறையில் சித்திரவதை செய்தானும். அவனது குற்றம் சைகோன் நீதிஸ்தலத்தில் ருசுவாகியும் 200 பிராங்கு அபராத தண்டனையே சார்க்கார் போட்டது. அந்த இந்தோ சைனு பிரஞ்சு டயருக்குக் கவர்னர் காக்னுக்குட்பட பல பிற்போக்காளர் பெரியதொரு பதவியைத் திரும்பத் தரவே அன்னுமியரின் பொறுமை வரம்பு கடந்துவிட்டது. முதல் மகாயுத்தத்தின்போது லட்சம் அன்னுமியர் பிரான்சின் உதவிக்குக் கடல் கடந்து சென்றார்கள். அன்னுமியத் துருப்புகளை வெள்ளைக்காரப் பிரஞ்சுத் துருப்புகளுடன் வைக்காமல் மேற்காப்பிரிக்கா செனிகாலி துருப்புகளுடன் சேர்த்தனர். அவர்களை மிருகத்தினும் கேவலமாகப் பிரஞ்சு அதிகாரிகள் நடத்தினார்கள். பிரான்சிற்குச் சென்று நேரில் பிரஞ்சு மக்கள் வாழ்வைக் கண்டதன் பிறகு ஐரோப்பியரிடமிருந்த பயமெல்லாம் அவ்வன்னுமியரை விட்டது. அடிக்கடி அன்னுமிய முகாம்களில் கைகலப்புகள் தோன்றுவது சகஜமாகிவிட்டது. ஐரோப்பியர் குற்றம் புரிந்தால் அபராதமும் சுதேசிகள் புரிந்தால் தண்டனையுமிருந்து வந்தன. ஹுயூ நகரின் சாலையை அழகுபடுத்த வேண்டுமென்று 6000 கல்லறைகளைச் சர்க்

கார் ஈடுகொடுக்காமல் நாசமாக்கியது. மேலை நாடுகளை நேரில் கண்ட பிறகு புரட்சி மனோபாவங் கொண்டனர்.

முதல் மகாயுத்தத்தின் முடிவில் அப்போது பிரிட்டிஷாருடைய நேச நாடாக விருந்த ஜப்பான் உலகத்தில் எந் நாட்டிலும் நிறபேதம் காட்டக் கூடாதென்ற தீர்மானத்தை வெர்சேல்ஸ் சமாதான மகாநாட்டில் கொணர்ந்த போது அகண்ட நிலத்தை அநியாயமாக ஆட்களின்றி ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் வெள்ளை ஆஸ்திரேலியாவும் பிற ஐரோப்பிய நாடுகளும் அதனைத் தோற்கடித்தன. 1914-18 போரின் பிறகு ஜனநாயக வல்லரசுகள் வாய் வேதாந்திலேயே இருக்கின்றன வென்பதைக் காலனி மக்கள் அறிந்தார்கள். அவர்களும் சுதந்திரம் பெற பலாத்காரத்திலிறங்கினார்கள். இந்தோ சைனாவின் விடுதலைக் கிளர்ச்சி பற்றி நமக்கு ஏதும் தெரிய விடுவதில்லை. தென்னமெரிக்காவின் மூலை முடுக்கு விஷயங்களெல்லாம் பறந்தாலும் ஏகாதிபத்தியங்களின் அட்டூழியங்கள் அம்பலத்திற்கு வராமலிருப்பதில் எல்லா ஐரோப்பிய நாடுகளும் ஒன்றுக்கொன்று உதவுகின்றன. இன்று உலகச் செய்தி ஸ்தாபனம் அவைகளிடமே இருப்பதால் வேறு வழியில் சமாசாரமும் எட்டுவதில்லை. இரும்புத்திரை போட்டாகிவிட்டது.

1925-ல் இளம் அன்னமின் புரட்சிக் கட்சி தோன்றியது. ஆனால் 1929-ல் கம்யூனிஸ்டு கட்சி தலையெடுத்ததும் இது கலகலத்து விட்டது. போலோ கான்டோர் ஜெயிலில் அவதிப்பட்டவர்கள் அன்னமின் சிறப்பை மீண்டும் கொண்டுவர புக்வயிட் என்னுமொரு கட்சியை ஸ்தாபித்தனர். சயுசதி வெளியானதும் அதுவும் கலைந்தது. 1929-ல் அன்னமிய வருஷப் பிறப்பன்று பிரஞ்சு அதிகாரி ஒருவர் சுடப்பட்டபோது செய்த விசாரணையில் ராஜாங்க அதிகாரிகளும் சம்பந்தப்பட்ட ரகசிய சங்கமொன்று இருந்து வருவது போலீசுக்குத் தெரிந்தது. அவர்கள்

கட்சித் துரோகிகளையும் கண்காணித்துத் தண்டித்து பயமுறுத்தி வந்ததும் வெளியாயிற்று. அதைத் தொடர்ந்து போலீஸ் துரிதமாகச் செல்லவே யென்பாய் புரட்சித் தோன்றியது. அப்போது சில பிரஞ்சு அதிகாரிகள் கொல்லப்பட்டார்கள். அதனுல் பிரஞ்சு அதிகாரிகள் பழிவாங்க முற்பட்டதால் அன்னுமில் பெரியதொரு ஆகஸ்ட் கலவரம் நடந்தது. பிரஞ்சு அதிகாரிகள் விமானங்களைக் கொண்டு ஏதுமறியா மக்களையும் கொன்று கிராமங்களையும் நாசமாக்கினுர்கள். பல தலைவர்களைக் கைது செய்து சிறைப்படுத்தினுர்கள். ஆறு பிரஞ்சு சோல்ஜர்களுக்காக ஆயிரக் கணக்கானவர்கள் கொல்லப் பட்டார்கள். அப்போது சர்க்கார் நடத்திய அட்டூழியத்தைப் போட்டோ படங்களுடன் ஆண்டன் வயலாய் என்னும் மாது 'தமது இந்தோ-சைனு கெடுபிடி' நூலில் வருணித்திருக்கிருர். அதுவே தருணமெனக் கம்யூனிஸ்டுகள் பலர் அயல்நாட்டில் பதுங்கினர் 1936-ல் மீண்டும் பலாத்காரத்தைக் கைவிட்டு கம்யூனிஸ்டுகள் தலையெடுக்க முற்பட்டனர்.

இந்தோ சைனுவில் தேசிய இயக்கத்தை ஒடுக்க 1930ஹு பிப்ரவரி 10-ந் தேதி யென்பாய் புரட்சியில் சம்பந்தப்பட்டவர்களை யெல்லாம் சதி வழக்குகளில் உட்படுத்தி நீண்டகால தண்டனைகளைப் பிரான்சு கொடுத்தது. சென்ற 50 ஆண்டுகளாகவே வடபாகத்தில் இக்கொந்தளிப்பு அதிகம். அங்கேயே அதிக ஜன நெருக்கம். 1917-19-ல் கவர்னர் ஜெனரலாயிருந்த ஸ்ரீ ஸொராட் 1933-ல் நடந்த ஆயுத பரிகரண மகாநாட்டில் காலனிகளில் கட்டுக்கடங்காத வகையில் தேசிய இயக்கம் வலுத்து வருகிறதென்றும் தாம் பிராஞ்சு இந்தோ சைனு கவர்னர் ஜெனரலாய் இருக்கும்போது காவற் படையன் 1500 பேரே யிருந்ததாகவும் இப்போது (1933) பத்தாயிரம் பேருமிருந்துங்கூட போதவில்லை யென்ருர். பிரஞ்சு கலோனியில் சர்க்கார் தங்கள் ஆட்சி நிலைக்கப்

பிரித்தாளும் சூழ்ச்சியிலும், அடக்குமுறையிலும் ஈடுபட்டிருக்கிறார்களென்பதற்கு அவ்வாண்டில் அது நாட்டுக்கோட்டை நகரத்தார்களைப் படுத்திய பாட்டிலிருந்தே அறியலாம். உலக மந்தத்தால் அன்னமிய வேளாளரும் அவதிப்படுகிறாரென்று கூறி கொச்சின் சைன கவர்னர் செட்டியார்களை யழைத்து கொடுத்த கடனிலுள்ள வட்டியெல்லாவற்றையும் தள்ளுவதுடன் முதலிலும் முக்காலிலிருந்து கால் பாகமே பெறலாமெனவும் மீறினால் 24 மணி நேரத்திற்குள் நாடு கடத்தப்படுவரென்றும் அறிவித்தது ஞாபகமிருக்கலாம். அதன்படி சில தன வைசியர்களைக் கைது செய்து விரட்டக்கூட விரட்டினார். போதாக் குறைக்கு இந்தோ சைனவிலிருந்து இந்தியாவிற்குப் பணமேதும் அனுப்பக்கூடாதென்றும் உத்தரவிட்டார். இதை எந்த சட்டசபையும் செய்யவில்லை. பிரஞ்சு கவர்னரே செய்தார். இவ்வுத்தரவு இந்தியர்மீது மாத்திரமே சாதரா செய்யப்பட்டது.

## நிகுயன் ஐகுவாக்

**1931**-லேயே கம்யூனிஸ்டு கட்சி வலுத்திருந்தது. அப்போது அதில் 1500 அங்கத்தினர்கள் இருந்தார்கள். நன்றாக ஆங்கிலம் பேசக்கூடியவர் சிறைக்குத் தாரத்தைப் பறிகொடுத்தவர். அவருடைய 3 புத்திரர்களும் புத்திரிகளும் சுதந்திரப் போராட்டத்தில் தம் உயிரை அர்ப்பணம் செய்தனர். அதைத் தோற்றுவித்தவர் நிகுயன் ஐகுவாக் ஆகும். அன்னமியரின் சொத்தாசையும், குடும்பப் பற்றுதலு மறிந்தவரான படியால் முதலில் நாட்டின் சுதந்தரத்தைப் பெற்று பின்னர் படிப்படியாக சோவியத் அரசைத் துவக்குவதென எண்ணமிட்டார். அன்னார் 1892-ல் அன்னமிய அதிகாரி யொருவரின் மகனாய்ப் பிறந்தார். தம் பதினேழாம் வயதில் வீட்டை விட்டு வெளியேறி பிரஞ்சுக் கப்பலொன்றில் சிப்பந்தியாகி உலகைச் சுற்றி

ஞர். முடிவாகப் பிரான்சிற்குச் சென்று பலவிதத் தொழி லில் ஈடுபட்டு பிரஞ்சு கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்தார். மெலிந்த தேகத்தினராயினும் ஆர்வத்திஞல் மன வுறுதி உடையவராஞர். சுதந்திரம் பெற்ருலே அவதிப்படும் தம்மவர் உய்யமுடியு மென்பதைக் கண்டார். வேர்சேல்ஸ் மகா நாட்டின்போது பெரியதொரு மகஜரை அன்ஞமியர் சார்பில் சமர்ப்பித்தார். அதை என்னவெனக் கேட்பா ரில்லை. பாரிசில் காலனி கறுத்தவர் மகா நாடொன்றை கண்டார். டூர்சில் 1920-ல் நடந்த கம்யூனிஸ்டு மகா நாட்டின்போது 3-வது அகிலத்திற்குச் சாதகமாக வாக் களித்தார். 1922-ல் பத்திரிகை யொன்றைத் தோற்று வித்துப் பிரஞ்சு ஏகாதிபத்தியத்தின் வண்டவாளத்தை வெளியாக்கிஞர். ஐரோப்பிய முதலாளித்துவத்தை வீழ்த்த அவைகளின் குடியேற்ற நாடுகள் மூலமாகவே தாக்கவேண்டுமென்பது அப்போது போல்சுவிக் கட்சியின் கொள்கையாகவிருந்தது. சன்யாட் சென்னுடன் ஒத்துப் போகவும் முயன்றது. புரட்சிப் பாதை அறிய மாஸ்கோ விற்கு 1923-ல் சென்ருர். அவரது அபார அறிவைக் கண்டு சோவியத் தலைவர்கள் அவரைக் கான்டன் நகருக்கு ஒடுக்கப்பட்டோர் சங்கம் ஸ்தாபிக்க அனுப்பினர். அதோடு 1926-ல் புரட்சிகர அன்ஞமிய இளைஞர் கழகமும் கான்டனில் கண்டார். குவான்டங்கில் ஸ்ரீ போரோடினுடன் இருந்துகொண்டு காலனி எதிப்புப் பிரசுரங்களை வெளியிட்டார். 1934ல் கவர்னர் மெர்லினைக் கொன்ற டான்கின் வாலிபர் கல்லறை கான்டனிலிருப் பதால் அதைப் பெரியதொரு க்ஷேத்திரமாகக் கருதி ஒவ்வொரு ஆண்டிலும் ஜூன் 19-ந்உ அங்கு அன்ஞமியர் அனைவரும் சேருவது வழக்கம். அப்போது புரட்சிபற்றி அவர்களுக்குப் போதனை நடக்கும். நிகுயன் ஐ குவாக் கம் யூனிசத்தைவிட தேசபக்தியையே பெரிதும் அப்போது அவர்களிடையே வற்புறுத்திவந்தார். 1927-ல் கோமின் டங் - கம்யூனிஸ்டு சச்சரவு நேரவே நிகுயன் போரோடி

னுடன் ரஷ்யா சென்றார். அவர் சென்றாலும் அவரது சிடர்கள் கான்டனில் தங்கள் தலைமைக் காரியாலயத்தை உடனே கலைக்கவில்லை. பிரஞ்சு ஏகாதிபத்தியத்தை மாத்திரம் எதிர்ப்பது என்ற சமரசம் பிற்பாடு ஏற்படவே கான்டன் அதிகாரிகள் அவர்கள் வேலைக்குத் தடை செய்யவில்லை. அங்கு பயிற்சிபெற்ற சுமார் 250 ஊழியர்கள் அன்னமில் பிரவேசித்துப் பிரசாரத்தில் இறங்கினார்கள்.

1929 மே முதல் தேதியன்று ஹாங்காங்கில் நடந்த இந்தோசீன கம்யூனிஸ்டு மகாநாட்டில் டான்கின் பிரதிநிதிகள் தேசபக்திக்கு மாறாகத் தீர்மானம் கொண்டுவந்தார்கள். அதனால் கட்சி பிளவுபட்டது. எல்லா கட்சிகளையும் ஒன்று சேர்க்கும்படி நிகுயன் மாஸ்கோவிலிருந்து அனுப்பப்பட்டார். பாங்காக்கிலிருந்த கட்சிக் காரியாலயம் முதலில் ஹெய்பாங்கிற்கும், பின் சைகோனுக்கும் மாற்றப்பட்டது. மாஸ்கோவும் மாத மாதம் 5000 பிராங்குகள் அனுப்பியது. எனினும் பிரஞ்சு அதிகாரிகள் அவரைப் பிரிட்டிஷ் போலிசின் உதவிகொண்டு 1931 ஜூன் 6-ந்தேதி ஹாங்காங்கில் கைது செய்தனர். வேறு தண்டனை கொடுக்கவும் பயந்து, க்ஷய ரோகத்தால் அவதிப்பட்ட அவர் சிறையில் செத்தால் பெருங் கலகம் தோன்றுமோ எனப் பயந்து அதிகாரிகள்



ஜனநாயகங்களின் காலனி பித்தை
வெளிப்படுத்திய ஜனாதிபதி
ஹோசின் மின்

கருத்தாகக் காத்தனர். அவர் பயங்கரவாதிகளை வெறுத்தார். நிகுயன் தம் பெயரை ஹோசின்மின் என்று மாற்றிக் கொண்டார். அவரே இப்போது வியட்னும் குடியரசின் ஜனுதிபதி. பிரசாரத்திலும் ஸ்டிரைக்கிலுமே அவர் கட்சி ஈடுபட்டது. எனவே 1930-3 கலகத்தின்போது கம்யூனிஸ்டு தலைவர்கள் பலரும் கைது செய்யப்பட்டனர். 1933 பிப்ரவரியில் லாஸா சிறைக்கு அனுப்பப்பட்ட 200 பேரில் 30 பேர் ஒரே வருஷத்தில் மாண்டனர். 1935-36லும் சிலர் கைதியாயினர்.

பிரான்ஸில் 1936-ல் இடதுசாரிகள் அதிகாரத்திற்கு வந்தனர். இதனுல் இந்தோசைனுவில் சிறிது நம்பிக்கையுண்டாயிற்று. புளூம் சர்க்காரில் காலனி மந்திரியாயிருந்த ஸோஷியலிஸ்ட் மாரியஸ்மௌட் "சகல சுதேசிகளையும் சமத்துவமாக நடத்துவோம். சகல மக்களையும் சகோதரர்களாகப் பாவிப்போம்" என்ருர். தமது கொள்கையை அநுசரித்து எதேச்சாதிகாரியாயிருந்த கவர்னர் ஜெனரலை நீக்கி இந்தோசைனுவுக்குத் தாராள குணம் படைத்தவரை கவர்னர் ஜெனரலாக நியமித்தார். 1,300 ராஜீயக் கைதிகளை விடுவிக்க உத்தரவிட்டார். கம்யூனிஸ்ட் கொள்கையை ஆதரிக்கும் பத்திரிகையும் சைகோன் நகரில் பிரசுரிக்க அநுமதிக்கப்பட்டது. 1935-ல் டான்கின் எல்லையருகிலுள்ள லாங்சியுவிலிருந்து சோவியத் பிரசாரம் நடந்தது.

இடதுசாரி சர்க்காரின் பிரகடனத்தால் இந்து-சீன தேசீய வாதிகள் திருப்தி யடையவில்லை. அதிக ஊதியம் வேண்டுமென்ற கோரிக்கையில் ரப்பர் தோட்டங்கள், நிலக்கரி சுரங்கங்கள், பஸ் போக்குவரத்து ஆகியவற்றில் வேலை செய்தோர் விடாது வேலைநிறுத்தம் நடத்தினர். நிலையை விசாரிக்க விசேஷ தூதரைப் பிரஞ்சு சர்க்கார் அனுப்பியது. இந்த தூதர் துறைமுகத்தில் வந்து இறங்கியதும், தங்கள் உரிமைகளை வற்புறுத்தி இந்தோசீன மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். தொழிற் சங்கங்கள்

ஸ்தாபிக்கவும், பொது மேடைகளில் பேசவும், கூட்டம் கூட்டவும் உரிமை அவர்கள் கேட்டனர். அது வழங்கப் படவேயில்லை. "சகோதரத்வம், சமத்துவம்" என்று பேசிய அதே காலனி மந்திரி, "இந்தோசைனுவில் ஆட்சி முறையை நடத்தியே தீருவோம். சட்டத்தை நிலைநாட்டு வோம்" என்று ஆர்ப்பரித்தார். விசாலமான நோக்கத் துடன் கூடிய கொள்கை அனுசரிக்கப்படும் என்று பிரகடனம் மாத்திரம் செய்யப்பட்டது. பிரஞ்சுப் பிரதமர் லியோன் புளூம் எழுதிய பிரசுரத்தின் அன்னுமிய பாஷா மொழிபெயர்ப்பைப் பகிரங்கமாக வாசித்ததற்காக ஒருவனுக்கு மூன்று வருஷ கடுங்காவல் தண்டனை விதிக் கப்பட்டது!

ஜப்பான் படையெடுத்து வரும் என்ற நிலையேற்பட்ட போது 1937-ல் இந்தோசைனுபற்றி பிரான்ஸில் இரண்டு வித அபிப்பிராயம் ஏற்பட்டது. அத்தேசம் பிரான்ஸி லிருந்து வெகு தூரத்திலிருப்பதால் ஸ்தலத்திலேயே படை யெடுப்பைச் சமாளிக்க ஏற்பாடு செய்யவேண்டுமெனத் தீர்க்க புத்திகொண்ட பிரஞ்சுத் தலைவர்கள் சொன் ஞர்கள். இந்தோசைனுவிலேயே தொழிற்சாலை யமைக்க வும், அன்னுமியர் கொண்ட பெரிய பட்டாளத்தைத் திரட் டவும் அவர்கள் வற்புறுத்தினுர்கள். "ஆசியாக்காரர் களுக்கே ஆசியா" என்ற பிரசாரத்தை ஜப்பான் செய்வ தால் கூடிய அளவு சுதேசிகளிடம் ஆட்சியை விட்டு அவர்கள் ஒத்துழைப்பைப் பெறவேண்டுமென அவர்கள் சொன்னுர்கள்.

அதற்குப் பேராசை பிடித்த பிரஞ்சு ஏகாதிபத்திய வாதிகள் செவி சாய்க்காமல் பழைய குருட்டு வழியைப் பின்பற்றினுர்கள். ஜெனரல் காட்ரூவை கவர்னர் ஜெனரலாக நியமித்து, இந்தோ-சைனுவைக் காப்பாற்றி விடலாமெனவும் கருதினர்.

III

# ஜப்பான் தலைகாட்டுகிறது

**1940** ஜூனில் பிரான்சு ஹிட்லரிடம் மண்டியிட்ட பிறகு பிரஞ்சு இந்தோ சைனு கலகலத்துவிட்டது. சீனுவிற்கு யுன்னுன் வழியாக ஏதும் தளவாடங்கள் செல்லக்கூடாதென்றும் அதைக் கண்காணிக்கத் தம் அதிகாரிகளுக்கு இடந்தர வேண்டுமென்றும் ஜப்பான் கேட்டுப் பெற்றது. அதுவே தருணமென ஸயாம் கண்டு தன்னிடமிருந்த கடைசி தடவையில் 1907-ல் களவாடிய ஜில்லாக்களைத் தந்துவிட வேண்டுமென வற்புறுத்தியது. ஐரோப்பிய காலனிகள் நிலைத்திருப்பதில் அக்கறை கொண்ட அமெரிக்கா தாய்லந்துடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி விற்க ஒப்புக்கொண்ட விமானங்களை மணிலாவரையில் வந்தும் கொடுக்க மறுத்துவிட்டது. இதில் ஜப்பானியர் தலையிட்டால் அதனிடம் அமெரிக்கர் கொண்டுள்ள கருத்து மாறுமென ஸ்ரீ கார்டல் ஹல் கூறினுர். இந்தோ சைனுவைத் 'தொட்டால் தெரியுமா' என லண்டன் டைம்ஸ் அப்போது தாய்லந்தை உருட்டியது. ஆனுல் விஷயங்கள் அவைகளை மீறிவிட்டன. ஹெய்பாங் துறைமுகமும் யுன்னுன் ரயில்வேயும் ஜப்பானியர் ஆதிக்கத்தில் வந்தன. 10 ஆயிரம் ஜாப் துருப்புகளும் டான்கின் வந்தன. செப்டம்பரில் ஜாப் ராணுவத்திற்கும் பிரஞ்சு ராணுவத்திற்கும் ஏற்பட்ட அடிதடியில் பிரஞ்சு சைந்நியம் பின்வாங்கி ஜப்பானுக்குப் பணிந்தது. தாய்லந்தின் முதலமைச்சர் தமது கோரிக்கையை முதலில் வெளியிட்டபோது ராணுவ நடவடிக்கை எதுவும் எடுக்கப் போவதில்லை எனக் கூறினுலும் அவசிய முஸ்தீபுகளை எடுக்கவே இந்தோசைனு-ஸயாம் நெருக்

கடியில் ஜப்பான் தலையிட்டு ஏற்கனவே களவாடப்பட்ட பட்டம் பாங், கியானிப், சிகிபோன், லாஆஸில் மீகாங் நதிக்கு மேற்கிலுள்ள பிரதேசம் ஆகிய சுமார் 70000 சதுர ஆயிர மத்தர் பூமியைத் தாய்லந்திற்குத் திரும்ப வாங்கிக் கொடுத்தது. இஜ்ஜில்லாக்களில் ராணுவ நடவடிக்கை எடுக்கக் கூடாதென்பதற்கும், நஷ்ட ஈடாக 60 லட்சம் பியாஸ்டிரஸ் தரவும் தாய்லந்து பிரஞ்சு இந்தோ சைனு விடம் ஒப்புக்கொண்டது. இப்பிரதேசத்தில் எல்லா ஜாதி யாரையும் சமமாகப் பாவிப்பதாகவும் தாய்லந்து ஒப்புக் கொண்டது. 1940 ஆகஸ்டு 30-ந்தேதி விச்சியுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி ஜப்பான் டான்கின் பிரதேசத்தை ஆக்ரமித்துக் கொண்டது. ஜெனரல் டிகாலேயிடமிருந்து காப்பாற்ற விச்சி சர்க்காருடன் 1941 ஜூலை 23-ந்தேதி செய்துகொண்ட ஒப்பந்தப்படி ஜப்பான் 29-ந்தேதி இந்தோ சைனுவிலுள்ள முக்கிய ஸ்தலங்களுக்குத் தன் துருப்புகளை அனுப்பியது. இதை ஏகாதிபத்ய ஆசை கொண்ட ஜெனரல் டிகாலே சுதந்திரக் கமிட்டி ஏற்க வில்லை. 1941 டிசம்பர் 7-ந்தேதி ஜனநாயக வல்லரசுகள் மீது ஜப்பான் போர் தொடுத்த மறுநாள் டிகாலே கமிட்டி தானும் ஜப்பான் மீது போர் தொடுத்திருப்பதாக லண் டனிலிருந்து அறிவித்தது.

சென்ற ஆண்டில் பிரான்சு நேச நாடுகளிடம் மீண் டும் சிக்கவே விச்சி சர்க்கார் இந்தோ சைனுவின் கவர்னர் ஜெனரல் வைஸ் அட்மிரல் டிகோவிற்குப் பூரண அதிகாரம் கொடுத்தனர். ஆனால் ஜப்பான், மார்ச்சில் இந்தோ சைனு தன் ராஜ்யத்தின் பாகமெனக் கூறிய துடன் அன்னுமிற்கு சுயவாட்சி தருவதாகவும் உறுதி யளித்தது.

பிரஞ்சுக்காரர் இந்தோசீனருக்குச் சுதந்திரம் தருவ தாகக் கூறினார்களா? அதுதான் இல்லை. 1943 டிசம்பர் 8-ந்தேதி அல்ஜியர்ஸில் முடிவு செய்த தீர்மானத்தையே காட்டினார்கள். அதுதான் என்ன?

"பிரஞ்சு சமுதாயத்திற்குள்ளேயே இந்தோ சைனு விற்குப் புதியதொரு ஸ்தானம் கொடுக்கப் பிரான்சு விரும்புகிறது. அவர்கள் (இந்தோ சீனர்) தங்கள் அரசியல் பொறுப்பைக் காட்டிக்கொண்டு விட்டார்கள். இந்தோ சைனு யூனியனிலுள்ள எல்லா ராஜ்யங்களின் உரிமை களும் விரிவாக்கப்படும். முடிவாக எல்லாருக்கும் எல்லா உத்தியோகத்திற்கும் வரத் தடை எதுவுமிராது. சமஷ்டி ஆட்சி அமைக்கப்படும். இந்தோ சைனு பண்பை அடி யுடன் கைவிடாமலே நவீன நாகரிக முறை வாழ்க்கை நடத்த உதவப்படும்" என்பதே. இவ்வாறு நாடற்ற பிரன்சுக் கமிட்டி நிர்க்கதியற்ற நிலைமையிலும் பேசுவ தற்குக் காரணமென்ன? ஜனநாயக வல்லரசுகள் பிரஞ்சு ஏகாதிபத்யம் நீடிக்க உதவி செய்யுமென்ற உறுதியான நம்பிக்கையாலேயே. அதே சமயம் ஜெனரல் டிகாலே, இந்தோ சீனருடன் நெருங்கிய, சவுஜன்னிய உறவு கொண்டு பசிபிக்கில் தன் கடமையை நிறைவேற்றும் என்ருர்.

"கடல் கடந்த நாடுகளிலும் பிரான்ஸ் ஜனங்களுக் குள்ள ஆதிக்க உரிமையை மதிக்கிருேம்" என்று 1942 ஏப்ரல் 13-ந்தேதி அமெரிக்காவின் அயல் நாட்டு அமைச்சர் கூறிஞர். 1939 ஜுலையிலேயே சிங்கப்பூர் அதிகாரிகளும் சைகோன் அதிகாரிகளும் தங்கள், தங்கள் காலனிகளைக் காப்பாற்றிக்கொள்ளுவதைப் பற்றி ஒத் துழைக்கத் திட்டம் போட்டார்கள். 1940 ஜுனில் பிரான்சு கவிழ்ந்ததுமே அப்போது இந்தோ சைனுவில் கவர்னர் ஜெனரலாக விருந்த தளபதி ஜியார்ஜ் காட்ரூ பிரிட்டிஷ் உதவிபெற ரகசியமாகத் தூதுவர்களை யனுப் பினர். பிரிட்டிஷார் பாடே திண்டாட்டத்தி லிருந்ததால் ஆசையிருந்தும் உதவிசெய்யப் பிரிட்டனுல் முடிய வில்லை. அதனுலேயே ஜெனரல் காட்ரூ 1940 ஜுலை 20-ந்தேதி அட்மிரல் டிகோவிடம் தமது பதவியை விட்டார். பிரான்சு வீழ்ந்த மறுதினம் சைகோன் மக்கள்

ஜெர்மனியையும், விச்சியையும் எதிர்த்து நிற்கப்போவ தாகக் கூறிய பேரொலியின் சைகோன் ரேடியோ ஒலிபரப்பு இன்றும் என் காதில் ஒலித்துக்கொண்டே யிருக்கிறது.

## வெள்ளையர் புருடா

"சென்ற சில வருஷங்களில் ஆசியாவில் வெள்ளைக் காரர்களின் கௌரவம் நாசமாகிவிட்டது. இந்தோ சைனு விலும் அப்படித்தான். இந்த புருடாவினுலேயே வெள்ளையர் ஆட்சி செய்ய முடிந்தது. காலனி மக்களை உய்விக்கவேண்டியது அவசியமானுல் இந்த கௌரவம் மீண்டும் நிலைக்கச் செய்யவேண்டும். ஆகவே இந்தோ சைனுவிலிருந்து ஜப்பானியரை விரட்டும் காரியத்தில் பிரஞ்சுக்காரரும் பங்குகொள்ள வேண்டும். ஆகவேதான் 1943 டிசம்பர் 8-ந்தேதி அறிக்கையில் டிகாலே கமிட்டி இந்தோ சைனுவிலிருந்து ஜப்பானியரை விரட்டப் பிரஞ்சுக் கமிட்டியும் நேச நாடுகளுடன் ஈடுபடும் என்று கூறியது" எனப் பிரஞ்சு காலனி கழகத்தின் உறுப்பினர் காஸ்டன் ரூப் "பாரின் அபார்"ஸில் எழுதுகிருர். அதற் காகப் பிரான்சும் காலனிகளின் படையெடுப்பாக விசேஷ பட்டாளங்களைத் திரட்டிப் பயிற்சி அளித்தது.

ஐரோப்பியர்கள் புருடாவிலேயே கீழ்திசை மக்களை ஆட்டி வருகிருர்களென்பது தென்னமோ உண்மை. இக் குட்டை ஜப்பான் உடைத்துவிட்ட தென்பதே அவர் களுக்கு ஆத்திரம். 1942-ல் டச்சு கிழக்கிந்திய தீவுகள் ஜப்பானிடம் பறி போனதும் லெப். கவர்னர் வான்மூக் ஓடிவந்தபோது வெள்ளையர் புருடாவில் கீழ்திசை நாடு களில் ஆட்சி நடத்தி வருகிருர்களென்றும் அதன் குட்டு வெளிப்படாதிருக்க அப்பிரதேசங்களை ஓராண்டிலேயே ஜப்பானியரிட மிருந்து திரும்ப விடுவிக்க வேண்டுமென் றும் கூறியது நோக்கற்பாலது. இன்று பிரஞ்சு ஏகாதி பத்தியத்திற்குப் பிரிட்டன் உதவினுல், பிரிட்டிஷ் சாம்

ராஜ்யத்திற்கு ஆபத்து வருங் காலையில் அது உதவும். இவ்வாறு பரஸ்பர உதவி இருப்பதாலேயே இரு சாம்ராஜ்யங்களும் சாயாமலிருக்கின்றன. மேலும் இதர மேலைநாட்டு சாம்ராஜ்யக் காலனிகளில் பிரிட்டிஷ் பெரிய அளவிற்கு முதல் போட்டிருக்கிறது. அவ்வாறே இரு சாம்ராஜ்ய மக்களும் சேர்ந்து ஆபத்து விளைவிக்காமலிருக்கவே பர்மா—இந்தியா பிணக்கு, அன்னும்—கம்போடியா முரண்பாடு போல பல மனக் கசப்புகளைப் பிரித்தாளும் சூழ்ச்சிப்படி சாம்ராஜ்யங்கள் சாமர்த்தியமாகச் செய்துவருகின்றன. இதன் ரீதிப்படித்தான் ஆப்பிரிக்கத் துருப்புகளை இந்தியாவிற்கும் இந்தியத் துருப்புகளை ஜாவாவிற்கும் கொண்டு போகத் தயங்குவதில்லை.

பொறித் தொழில்கள் மிகுந்த அமெரிக்கா போன்ற நாடுகள் மூலப் பொருட்களை உற்பத்தி செய்யும் காலனிகள் பிறர் (ஐரோப்பா) ஆட்சியி லிருப்பதில் அக்கறை கொண்டிருப்பதும் சகஜமே. அயலார் ஆட்சி யிருப்பதாலேயே ரப்பர், ஈயம் போன்ற மூல வஸ்துக்களைக் குறைந்த விலையில் வாங்கி அவைகளாலான உற்பத்திப் பொருட்களைச் செய்து அகாத விலைக்கு உலகச் சந்தையில் அத்தகைய நாடுகள் விற்க முடிகின்றன. இதனாலேயே அந்நாடுகளில் வாழ்க்கைத்தரம் மேலோங்கி யிருக்கிறது. மூலப் பொருட்கள் வாங்கும் விலையும், அவை சந்தைக்கு வேலைப்பாடமைந்தவைகளாக வரும்போதுள்ள விலைக்குமுள்ள வித்தியாசத்தை அறிந்தால் பொறித்தொழில் மிகுந்த நாடுகள் எப்படி குறைந்து விலைக்கு மூலப் பொருட்களை வாங்கிவிட்டு அவைகளே அதிக விலைக்கு உற்பத்தி பொருட்களை விற்று கொள்ளை லாபம் அடித்து வருகின்றனவென்பது தெளிவாகும். காலனிகள் சுதந்திரம் பெற்றுவிட்டால் ஒன்று உண்மை நிலை தெரிந்து அவைகளே மூலப்பொருட்களின் விலையை ஏற்றலாம்; அதற்கு வாங்குவோர் உட்படாவிட்டால் அவைகளே உற்பத்தியில் இறங்கலாம். ஆகவேதான் காலனி சுதந்திர விஷயத்தில்

மேலை நாடுகள் அதிக அக்கரை காட்டுவதில்லை. காலனி களில் வசிக்கும் மக்களுக்கு வேண்டிய சரக்குகளை விட ஏற்றுமதி விளை பொருட்களின் உற்பத்தி பெருக்கிலேயே லேயே ஆதிபத்திய சர்க்கார்கள் ஈடுபட்டிருப்பதும் இதை மெய்ப்பிக்கும். காலனிகளைக் கொண்டுள்ள நாடுகளும் தங்கள் காலனிகளில் பிறநாடுகளும் சமமாக வர்த்தகம் நடத்த வசதி தருவதாகவும் கூறுகின்றன. அப்போதே இதர மேலை நாடுகள் காலனி அரசுகளிலும் அசூயை விட்டு திருப்தியடைந்து காலனி சுதந்திரத்தில் அக்கறை கொள்ளாதிருக்கு மன்றோ.

மார்ஷல் பெடெயின் சர்க்கார் வீழ்ந்ததும் இந்தோ சைனு முழுவதையுமே தன்னுட்சியில் கொள்வதாக ஜப்பான் அறிவித்து மார்ச்சில் ஆக்ரமித்ததல்லவா? மார்ச் 11-ந் தேதி அன்னுமிய அரசர் பாவ்தாய் தம் மந்திரிகளைக் கலந்துகொண்டு அன்னுமைச் சுதந்திர நாடெனப் பறை சாற்றினுர். இதனை ஜப்பானும் ஏற்றுக் கொண்டது. பிரான்சில் இளம் வயதில் படித்து மேலை நாகரிகத்தை நன்குணர்ந்து, சமத்துவ நோக்குடையவர் மேன்மை தங்கிய பாவ் தாஷ் தாய். 1932–33-ல் பல உள் நாட்டுச் சீர்திருத்தங்களைச் செய்தார். கல்வி முறையும், சட்டம் செய்வதும் செம்மையாக்கப்பட்டன. சம்பிரதாய வாதிகள் சீர்திருத்தங்களை எதிர்த்தும் அவை வெற்றி பெற்றன. கட்டாய தொழில் சேவையை 1933-ல் ஒழித் தார். சுதந்திர பிரகடனத்தை மாற்றவேண்டி ஜெனரல் டிகாலேயின் காலனி மந்திரி ஸ்ரீ கியாகேஸி 1945 மார்ச் 25-ந்தேதி 1943-ம் ஆண்டு டிசம்பர் அறிக்கையை மீண் டும் வற்புறுத்திப் பேசினுர். கவர்னர் ஜெனரல் தலைமை யில் சமஷ்டி சர்க்கார் ஏற்படுமென்றும், பிரபுக்களைக் கொண்ட மேற்சபையும், சாதாரண பொது ஜன சபையு மிருக்குமென்றும், அவைகளில் இந்தோ சீனரும் பிரஞ்சுக் காரர்களும் பதவி வகிப்பார்களென்றும், வரவு செலவு இனங்களில் அவை வோட் செய்ய உரிமை பெற்றிருக்கு

மென்றும் வர்த்தக உடன்படிக்கை போன்றவை அவை முன்னர் விவாதத்திற்குச் சமர்ப்பிக்கப் படுமென்றும் பத்திரிகை உரிமை போன்ற அடிப்படை உரிமைகள் வழங்கப்படுமென்றும் இரு ஜாதியாரும் கொண்ட ஒரு பலத்த முப்படை திரட்டப்படுமென்றும், உத்தியோகங் களில் சமத்துவமிருக்குமென்றும், சமஷ்டியில் சேரும் ஐந்து பிரதேசங்களுக்கும் சுயவாட்சிகொண்ட பிரதேச சட்டசபைகள் வேறிருக்குமெனவும் கூறினர். அயல் நாட்டு விவகாரம் பிரான்சினிடமே யிருக்குமென்ருலும் நெருங்கிய உறவு ஏற்பட்டு ஒரே இனமாகப் பிரஞ்சு யூனியனில் வாழலாமென்றும் சொன்னர். இதற்கு அன் ஞமியர் செவி சாய்க்கவில்லை. மன்னர் பாவ்தாயின் சர்க் கார் 1945 ஜூன் 30-ந் தேதி இந்தோ சைனுவை "வியட் ஞம்" அதாவது தெற்கத்திய சீமை (இது முன் காலத்திய பழம் பெயர்) என்ற பெயரிட்டு தனிச் சுதந்திர நாடென உறுதி செய்தனர். தனிக் கொடியும், தனி ராஜாங்கக் கீதமும் ஏற்பட்டன.

## அண்டம் கண்டிராத அதிசயம்

ஆகஸ்டில் ஜப்பானிய அரசே நேச நாட்டாரிடம் அடிபணியவே வியட்ஞம் சர்க்கார் தங்கள் நாடு சுதந்திர நாடென்றும், அத்து மீறி பிரான்சு காலடி வைத்தால் முழு பலத்துடன் எதிர்க்க நேரிடுமெனவும் அறிவித்தது. எனினும் நேச நாடுகளின் மதிப்பு பெறவேண்டி அன்ன மில் அண்டம் கண்டிராத அதிசயமொன்று நிகழ்ந்தது. அன்னுமின் அரசர் பாவ் தாஷ் தாய் ஆகஸ்டு 8-ந் தேதி தமது முடியைத் துறந்து ஸ்ரீ ஹோசின்மின் (நிகுபென் ஐகாக்) தலைமையில் குடியரசு சர்க்கார் தோன்ற வழி விட்டார். அத்தகைய மாண்பு கொண்ட மன்னன் இம்மா நிலத்தில் எங்கு மிருந்ததில்லை. பிரிட்டனே தன் அரசன் முதலாவது சார்லசைத் தூக்கில் போட்டது. மற்ருெரு வனை நாட்டைவிட்டுத் துரத்தியது. முடிதுறந்த மற்ருெரு

மகாராஜன் பெண்ணொருத்திக்காகச் சென்றான். பிரான்சு ராஜத் தம்பதிகளைத் தூக்குமேடைக்கனுப்பியது. ரஷ்யா ராஜா குடும்பத்தையே கொன்று தள்ளியது. கிழக்கத்திய நாட்டிலேயே சிம்மாசனம் கொண்ட ராஜன் தானே வலுவில் அரியாசனத்தை விட்டது காணலாம். அதிகாரத்தை வியட்மின்சர்க்காரிடம் கொடுத்தபோது மன்னர் விடுத்த ஆகஸ்டு 24-ந் தேதிய அறிக்கைதான் எத்தகைய மனப்பான்மையைக் காட்டுகிறது.



மன்பதை மாணிக்கம் மன்னன்
பாவ் தாஷ் தாய்

"அன்னமிய மக்களின் சுகத்திற்கும் அன்னமிய ராஜாங்கத்தின் சுதந்திரத்திற்கும் நான் எந்தத் தியாகமும் செய்யத் தயாராக இருக்கிறேன். என் தியாகம் நம் தாய்நாட்டிற்கும் பலனளிக்க வேண்டுமென விரும்புகிறேன். இப்போதிருக்கும் நிலையிலே நம் நாட்டினர் ஒன்றுபடவேண்டியது அவசியமாகும். ஒன்று பட்டாலுண்டு வாழ்வு ஒற்றுமை நீங்கின் சாவு. நெருக்கடி முற்றியிருக்கிறது.

சென்ற இருபது ஆண்டுகளாக ஆண்டேன். மக்களுடன் நெருங்கி இருந்த சொற்ப காலத்திலும் ஆவன செய்ய முடியவில்லை.

முடி துறக்க முடிவு செய்து விட்டேன். ஜனநாயக குடியரசு சர்க்காரிடம் நாட்டின் அதிகாரத்தை ஒப்படைக்கத் தீர்மானித்து விட்டேன். எல்லா வகுப்பாரை

யும், கட்சிகளையும், கோஷ்டிகளையும், ராஜ குடும்பத்தாரையும் ஒற்றுமையாக விருப்பதுடன் நமது தேச சுதந்தரத்தைப் பலமடையச் செய்யவேண்டும் என்றும் கேட்கிறேன். இப்போது சுதந்திர நாட்டின் சாதாரண பிரஜையாக விருக்கிறேனென்ற திருப்தி. நம் மக்களை ஏமாற்ற என் பெயரையோ ராஜ குடும்பத்தாரின் பெயரையோ கையாள யான் இனி அனுமதிக்கப் போவதில்லை. வியட்னும் என்று மிருக்கவேண்டும். நம் ஜனநாயகக் குடியரசு நீடூழி யிருக்கவேண்டும்' என்று தம் பிரகடனத்தில் பாவ் தாய் மன்னர் குறிப்பிட்டிருக்கிறார்.

ராஜ குடும்பங்களில் காணப்படும் வேற்றுமைகளைக் கையாண்டு பிரித்தாளும் சூழ்ச்சியில் இறங்கி அரண்மனை அதிகாரத்தையே அன்னுமில் முன்னெல்லாம் பிரஞ்சுக்காரர் குலைத்தனர். அடிக்கடி மீர்ஜாபர்களை விலக்கி மீர்காஸிம்களைத் தங்கள் இஷ்டப்படி அரச பீடத்திற்குப் போடுவது பிரஞ்சு வழக்கமாகி விட்டது. அதற்கு இடங் கொடுக்காமலிருக்கவே மன்னுதி மன்னன் பாவ் தாய் பொதுப் பிரகடனம் செய்ததுமல்லாமல் ராஜ குடும்பத்தாருக்கு ஒரு வேண்டுகோளும் விடுத்தார். அதாவது:

"மக்கள் சுபிட்சமே மாநிலத்தில் மகத்தானது. மற்றதெல்லாம் அடுத்தபடி என்ற விரதம் கொண்டுவிட்டேன். வெறும் சமஸ்தானத்தின் அதிபதியாக விருப்பதை விட சுதந்திர நாட்டின் பிரஜையாக விருப்பதென்று முடிவு செய்தேன். சுதந்திரத்தை உறுதிப்படுத்த நாட்டின் சக்திகளை ஒன்றுபடுத்தக்கூடிய சர்க்காருக்குச் சாதகமாக பட்டம் துறக்கத் தீர்மானித்து விட்டேன். அச்சர்க்காராலேயே நாட்டிற்குச் சுகம் விளையும். சுதந்திரத்திற்கும் பொது ஜன சுகத்திற்காகவும் நம் நாட்டாரில் பலர் சென்ற 80 ஆண்டுகளாகக் காட்டிலும் காராக் கிரகத்திலும் தேசத்தின் பொருட்டு தங்கள் உயிர்களை அர்ப்பணம் செய்திருக்கின்றனர். அத்தகைய அதியாச்சரியமான ஆயிரக் கணக்கான ஆண், பெண் தியாகிகளைப் பார்க்கும்

போது, என் சிங்காதனத்தை விடுவது எம்மாத்திரம்? என் பிரகடனத்தைப் படித்த என் வமிசத்தார் குடும்ப சௌகரியத்தை விட நாட்டிற்குரிய கடமையே முக்கிய மானதெனக் கொள்வாராக. நந்தந்தையர் நாட்டின் சுதந்திரம் உறுதிப்படுவதற்கு ஆதரவாக அவர்கள் அனை வரும் மற்ற மகாஜனங்களுடன் சேருவார்களாக."

மேற்கண்ட இரு பிரகடனங்களையும் மன்னர் வெளி யிட்டு, 1945 ஆகஸ்டு 15-ந்தேதி அமைக்கப்பட்ட வியட் மின் ஜனநாயகக் குடியரசு சர்க்காரிடம் தம் அதிகாரங் களை விட்டுக் கொடுத்தார். அதுவும் ஆகஸ்டு 28-ந்தேதி மந்திரி சபையை அமைத்தது. பிரான்சுடன் எவ்வித உறவு முறையுமில்லையென அறிவித்தது. இந்திய சமஸ் தானுதிபதிகள் போல சொந்த சுகங்களை மாத்திரமே மன்னர் கவனிப்பவரானுல், கம்போடியா ராஜா போல பிரான்சிடம் விசுவாசம் தெரிவித்து பிரிட்டிஷ் இந்திய ராஜாக்களையும் போல அவருமிருந்திருக்கலாம்.

1944 ஜனவரி 3-ந் தேதி தேசியவாதிகளும் கம்யூ னிஸ்டுகளும், குடியானவர், தொழிலாளர் கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஜாப் எதிர்ப்பு பிரகடனம் செய்தனர். அதற்கு மாய்மலை சாதியாரும் ஆதரவு தந்திருக்கிருர்கள். அவர்கள் கட்சிக்கே வியட்மின் என்று பெயர். சுதந்திர சர்க்கார் ஹனுயைத் தலைநகராகக் கொண்டது. கப்போர் முடிவில் ஏகாதிபத்திய அரசு வேண்டாமெனக் கொடியை முதலில் தூக்கியது இந்தோ சீனரே.

கொச்சின் சைனுவில் நம்போ வென்ற கமிட்டியும் அன்னுமில் டிரங்போ வென்ற கமிட்டியும், டான்கின்னில் பாக்போ வென்ற க'மிட்டியும் அதிகாரத்தை ஏற்று நடத்தின. நம்போ கமிட்டியில் டிரான்வான்ஜியின், துவாங் பாக்னுய், நிகுயன் வான்டோய் என்ற கம்யூனிஸ்டு களும், (பிரஞ்சு ஆட்சியில் சிறையில் அவதிபட்டோர்) டாக்டர் பாம் கோ தாச், ஹுயின்தி ஓவன் போன்ற தேசிய வாதிகளும் பதவி வகிக்கிருர்கள். ஸ்ரீ டிரான்

வான்ஜியன் 35 வயதானவர். 12 வயதிலிருந்தே பிரான்சில் படித்து மாஸ்கோவில் இரண்டாண்டுகளிருந்தவர். பிரான்சிலிருந்தபோது அன்னுமிற்குச் சாதமாக நடந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதற்கு நாடுகடத்தப் பட்டவர். ஜாப் ஆக்கிரமிப்பின் போது தலைமறைவாயிருந்து வேலை செய்தவர். தென் வியட்னுமின் பிரதமர். மார்ஷல் டைட்டோ பிரஞ்சு கம்யூனிஸ்ட் தோரஸ் முதலியோரின் தோழர். ஸ்டாலின் சர்வ கலாசாலையில் அவர்களுடன் ஒருங்கே படித்தவர். டாக்டர் தாச் 35 வயதான வைத்தியர். பிரஞ்சு மாதொருத்தியை மணந்தவர். தென் வியட்னுமின் அயல் நாட்டிலாகா மந்திரி. ஸ்ரீ பாம்வாச் சேன்னும் 38 வயதினரான வக்கீல் தென் வியட்னுமின் அதாவது நம்போவின் தலைவராவர். 18 வயதிற்கு மேற்பட்டோ ரனைவருக்குமே வாக்குரிமை யளிக்கப்படுமென்றும், 60,000 பேர்களுக் கோர் தொகுதியிருக்கு மென்றும், ஒரே சட்டசபை கொண்ட ஜனநாயக சர்க்கார் அமைக்கப்படு மெனவும் ஜனுதிபதி ஹோசின்மின் அறிவித்தார்.

ஹோசின் ஜப்பானின் ஆக்கிரமிப்பின்போது தம் கட்சியாட்களே அவர்களை எதிர்த்ததாகவும் பிரஞ்சுக்காரராளாவிருந்ததுடன் சில சமயம் தங்கள் கொரில்லா படையினரை ஜப்பானியரிடம் 1940 அக்டோபரில் பாக்ஸானிலும் நவம்பரில் கொச்சின் சைனுவிலும், 1941-ல் டௌலுவாங்கிலும் கலகம் செய்தபோது காட்டிக் கொடுத்ததாகவும் ஜனுதிபதி ஹாசின்மின் கூறுகிறுர். அக்கலவரங்களின்போது ஆயிரம் பேருக்குமேல் அன்னுமியர் கைது செய்யப்பட்டனரென்று விச்சியே கூறியது. அவர்கள் வரிகொடா இயக்கத்திலும் ஈடுபட்டதுடன் சர்க்காருக்கு அரிசி விற்கவும் மறுத்துவிட்டனர். இவரின் பாத்யதையை மறுக்கும் பாரிஸ் பிரஞ்சு காலனி அதிகாரி வியட்னும் சர்க்காரை மைனுரிட்டியே ஆதரிப்பதாகவும் லாஆஸும், கம்போடியாவும் தங்களையே

ஆதரிப்பதாகவும் லாஆஸுக்கு இஷ்டப் பிரகாரம் அரசு அமைத்துக்கொள்ள உரிமை கொடுத்திருப்பதாகவும் அதை அன்னியரிடமிருந்து காப்பாற்ற வேண்டியது தங்கள் பொறுப்பென்றும் கூறினர். லாஆஸின் அரச ரான 60 வயது கிழவர் ஸ்ரீ ஸிஸவாங்வாங் பிரான்சையே ஆதரிப்பதாகவும் சென்ற மார்ச்சு மாதத்தில் ஜப்பானியர் லாஆஸை ஆக்கிரமித்தபோது அன்னாரின் மூத்த மகன் கியாப் ஸவாங் ரத்ன ஜப்பானியருக்கு விரோதமாகக் காடுகளில் ஒளிந்திருந்து தொல்லை விளைவித்ததாகவும் அன்னியர் இவர்களைக் கவிழ்க்க முயன்று வருவதாகவும் கூறினர். சமஸ்தானாதிபதிகள் ஆதிபத்திய சர்க்காரை ஆதரிப்பதில் இந்தியர்களாகிய நமக்கு ஆச்சரியமில்லை. அவ்வாறே பிரான்சு கூறும் இஷ்டப்படி அரசு அமைத்துக்கொள்ளும் உரிமையும் மக்களுக்கில்லாமல் பிரான்சின் 5-ம் படையின் சின்னமாக விளங்கும் சமஸ்தானாதிபதிக்கேதானிருக்கும் எனக் கூறவும் வேண்டுமோ?

பிரஞ்சுத் துருப்புகள் மீண்டும் ஆக்கிரமித்த பிறகு, அட்மிரல் டார்ஜன் பியு கம்போடியாவிற்குப் பாதிரி புரோவென்ஷியலுடன் சென்றபோது அவர்களுக்குப் பட்டு, வெள்ளி குடைகளுடன் மன்னன் வரவேற்றான். கலர் விளக்குகள் வீசின. மெலிந்த இடையுடைய கம்போலிய மாதர் நடனமாடி களிப்பித்தனர். ரெஸிடெண்டுகள் இனி ராஜாவின் ஆலோசனையாளராய் இருப்பார்கள் என்றார் அட்மிரல்.

1945 செப்டம்பர் 19-ந் தேதி ஹனாய் ரேடியோ சுதந்திரப் பிரகடனத்தை ஒலிபரப்பிய காலத்திலே கூறியதாவது:

'அனைவரும் சமத்துவமாகவே பிறந்திருக்கிறோம். விடுதலையும் சுகமும் பிறக்கும் போதே இயற்கை அன்னை தந்திருக்கிறாள். சென்ற 80 ஆண்டுகளாகப் பிரான்சு விடுதலையை மறுத்து வந்ததுடன், அமானுஷ்யமான

சட்டங்களைச் சுமத்தியது. நமது தேசீய ஒற்றுமை சிதற மூன்றுவித அரசுகளைப் பிரான்சு இந்தோ-சைனுவில் அமைத்தது· கல்விச்சாலைகளை விடச் சிறைச்சாலைகளே அதிகமாயின. தேச பக்தர்களைக் கொன்றது; சுதந்திர இயக்கங்களை ரத்தவாருக அடித்து நசுக்கியது. பொது ஜன அபிப்பிராயத்தை நெறித்தது. செய்திகளைப் புரட்டியது; நமது ஜனங்களழிய அபினேயும், சாராயத்தையும் கொட்டியது. அவர்களே ஜப்பானியருக்கு வழிவிட்டதுடன், நாம் ஜாப்பை எதிர்த்தபோது பிரஞ்சு அதிகாரிகளும் ஜாப்புடன் சேர்ந்து நம்மை நசுக்கிஞர்கள்."

"நாம் விடுதலை யடைந்தோம். மன்னர் பாவ்தாய் அரசு விட்டார். 100 வருஷ முடியரசு சங்கிலி முறிந்தது; குடியரசு பிறந்தது. பிரான்சு உறவை உடைத்து விட்டோம்." இந்தோ சைனுவின் தலைவர், பண்டித ஜவாஹருக்கும், ஜெனரல் ஆங்சானுக்கும், போப்பரசருக்கும் கூட வேண்டுகோள் விடுத்தார்.

# IV

# நேச நாட்டார் ஆக்கிரமிப்பு

**1945** செப்டம்பர் மூன்ரும் வாரத்தில் சைனுவின் ராணுவம் ஹனுயில் இறங்கி ஜப்பானியரின் சரணுகதியை ஏற்றது. 16-வது வடகுறுக்கைக்கு வடக்கில் அவர்கள் ஆக்கிரமிப்பது என்பது நேச உடன்பாடு. அன்று அன்னுமியர் பிரஞ்சுக்கு எதிர்த்துக் கிளப்பிய கலகத்தை உடனே அடக்க வேண்டுமென்று சீன தளபதி கேட்டதும் வியட்மின் சர்க்கார் அடக்கிவிட்டது. அப்படியிருக்க இதையே பிரஞ்சு சர்க்கார் கலகக்கார கூட்டம் என்றது. தாங்கள் ஜப்பானியரை நிராயுதபாணிகளாக்கவே வந்திருப்பதாகவும் அன்னுமியர்—பிரஞ்சு தகராறில் தலையிடப் போவதில்லை என்றும் பிரதேசஆசை ஏதுமில்லையென்றும் சீன ஜெனரல் லுஹான் 18-ந்தேதி இறங்கியபோது கூறிவிட்டார். செப்டம்பர் 27-ந்தேதி நடந்த சரணுகதி சடங்கிற்குப் பிரஞ்சு பிரதிநிதி வரவில்லை. பிரஞ்சு கொடி போடாததே அதற்குக் காரணமாம். அக்கொடி போடவேண்டிய அவசியமில்லை என்றும் சீன தளபதி கூறிவிட்டார். விழாவிற்கு அழைக்கப்பட்டிருந்த ஸ்ரீ ஹோசின் மின்னும் வரவில்லை. சொந்த ஹோதாவிலேயே அவரை அழைத்திருந்ததாலும் சுதந்திர சர்க்கார் தலைவர் என்ற முறையில் அழைக்காததாலும் அவர் செல்லவில்லை. சீனத் தளபதி வியட்மின் சர்க்காருக்கு அங்கீகாரம் தராவிட்டாலும், அதனைப் பெயர்க்க முற்படவில்லை. மேலும் பிரஞ்சு துருப்புகள் ஹனுயில் இறங்குவதற்கும் இடங் கொடுக்கவில்லை. சீனத் துருப்புகள் லாஆஸை செப்டம்பர் இறுதியில் ஆக்கிரமித்ததும் பிரான்சு தன் கண்டனத்தைத் தெரிவித்தது. சுங்கிங்கிக்குப் போன பிரஞ்சுத்

தூதராலும் அப்போது சைனுவின் போக்கை மாற்ற முடியவில்லை. அக்டோபர் இறுதியில் லாஆஸில் பிரான்சின் கமிஷனராக விருந்த கமாண்டர் பேபரைக் கைது செய்து வெளியேற்றினர் சீனர்.

நேச நாட்டாரெனச் சைகோன் பிரதேசத்தில் இந்தோ சைனுவை ஆக்கிரமித்து ஜப்பானியரை நிராயுத பாணியாக்கிய பிரிட்டன் போக்கு என்ன? 1945 ஆு செப்டம்பரில் பிரிட்டன் சேனை சைகோனில் இறங்கியது. அவை கால் கொண்டதும் பின்பற்றி வந்த பிரஞ்சு படைகளை, நேச நாட்டுப் படைகளெனக் கூறி, அவைகளுமிறங்கப் பிரிட்டன் வசதியளித்தது. ஸ்ரீ காஸ்டன் ரூபி பாரின் அபார்ஸில் கூறியதற்கு ஒப்ப பிரஞ்சு வெள்ளையரின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டாமா? 1945 செப்டம்பர் 23ந் தேதி பிரஞ்சுப் படை ரகசியமாக சைகோனிலிருந்த எல்லா பிரஞ்சுகாரர்களுக்கும் ஆயுதமளித்து அன்னுமிய சுதந்திர சர்க்காரின் சைகோனிலுள்ள தலைமை காரியாலயத்தைக் கைப்பற்றியது. செப்டம்பர் 20-ந் தேதி ராணுவச் சட்டம் தென் இந்தோ சைனு பூராவும் அமுலுக்கு வந்திருப்பதாகப் பிரிட்டிஷ் கமாண்டர் அறிவித்து வேலை நிறுத்தங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் முறியடித்துவிட்டார். மீறியோருக்குத் தூக்கு தண்டனையென்றும் அறிவிக்கப்பட்டது. சுதந்திர சர்க்காரின் வெளிநாட்டு மந்திரியான டாக்டர் தாச்சையும் கைது செய்தது. அது காலை நடந்த பெரும் கலகத்தில் அமெரிக்க ஆதிபத்ய அங்கத்தினர் கர்னல் துவி கொல்லப்பட்டார். பல நேச நாட்டாரும் பலி ஆனார்கள். சட்டத்தின் பேராலும் சமாதானத்தின் பேராலும், பிரிட்டிஷ் ஜெனரல் நவீனப் போர்க் கருவிகளைக் கொண்டு எளிதில் கலகத்தை அடக்கி விட்டார். ஜாப்களிடமிருந்து கைப்பற்றிய டாங்கிகளையும் தங்களிடமிருந்த கன பீரங்கிகளையும் பிரிட்டிஷார் பிரன்சுக்காரரிடம் கொடுத்தனர். இதனை வாஷிங்டன் பி. எம். பத்திரிகை செப்டம்பர் 26-ந்

தேதி கூறியிருக்கிறது. அமெரிக்க 'டைம்' வா... பத்திரிகையும் பிரஞ்சுக்காரர் அமெரிக்காவின் கடன் குத்தகை ஆயுதங்களை உபயோகித்ததைப் பிரசுரித்திருக்கிறது.

108114

## சமரசப் பேச்சு முறிவு

பிரஞ்சு கைதிகளுக்கும் ஆயுதங்களைக் கொடுத்து சமாதானத்தை நேசத் தலைவர் நிலை நிறுத்தினர். கைது செய்யப்பட்ட பாலர்களையும் பெண்களையும் கூட பல மணி நேரம் கைகளை உயரத் தூக்கி வைத்திருக்க வேண்டுமென 'ஒட்வியர்' உத்திரவிட்டார். பிரஞ்சு ஹைகமிஷனரோ மார்ச்சில் பிரஞ்சு காலனி மந்திரி புது அரசியலமைப்பைப் பற்றிக் கூறியிருப்பதைப் பன்முறையும் வலியுறுத்தி சமாதானமாகப் போகும்படி கூறினர். பிரஞ்சு அதிகாரிகளும் அன்னமியச் சுதந்திரவாதிகளும் அக்டோபர் முதல் தேதி தற்காலிகப் போர் நிறுத்தம் செய்து கொண்டனர். அன்னமியரின் சார்பாக ஸ்ரீ ஸான் நாக தாகரும், டாக்டர் தாச்சும் அக்டோபர் 4வ பிரிட்டிஷ் தளபதி முன்னிலையில் பிரஞ்சு சர்க்கார் பிரதிநிதியிடம் சமரசப் பேச்சைத் துவக்கினர்கள். அதனல் பலனேதுமில்லை. சமரசப் பேச்சு முறிந்ததாக அக்டோபர் 12-ந் தேதி அறிவிக்கப் பட்டது. பிரஞ்சு போலீசிடமிருந்து தேசியவாதிகளிடம் சட்டம் சமாதானப் பொறுப்பு மாற்ற வேண்டுமெனவும், பிரஞ்சு துருப்புகளை நிராயுதபாணிகளாக்க வேண்டுமெனவும், அவர்களைப் பிரத்யேகமான இடத்தில் கொண்டு வைத்து பாதுகாப்பும், உணவும் அளிக்கும் பொறுப்பைத் தாம் ஏற்பதாகவும் அன்னமியர் கூறினர். அதற்குப் பிரஞ்சு இஷ்டப்படவில்லை. அதன் பிறகு ஏற்பட்ட கலவரத்திலே பிரிட்டிஷ் அதிகாரிகளிடமிருந்த பிரஞ்சு காவற் படையினர் கொல்லப்படவே சண்டை மும்முரமாயிற்று. அல்லும்பகலும் கைகலப்பு. சைகோன் விமான நிலயத்தை அன்னமியர் தாக்கினர். எனினும்

நேச நாட்டு ராணுவ பலத்தின் முன்னர் அவர்கள் பாச்சா பலிக்கவில்லை. நாட்களாகப் பிரான்சின் முப்படைகளின் பலமும் பெருகிக்கொண்டே வந்தது. ரிஷிலு போன்ற பெரிய போர்க் கப்பல்களும் துருப்புகளுடன் சைகோன் வந்தன. அக்டோபர் 15-ந் தேதி பிரஞ்சு 2-ம் படையும், அன்றிருந்து வாரந்தோறும் நேச நாட்டுக் கப்பல்கள் மூல மாக பல்லாயிர பிரஞ்சு வீரர்களும் வரத்தொடங்கினார் கள். அன்னாமியத் தலைவரான ஸ்ரீ ஹோங் டான் வானையும், கம்போடியாவின் பிரதமரான ஸ்ரீ ஸான் நாக் தாகரையும் பிரஞ்சுக்காரர் கைது செய்தனர். பிரஞ்சுப் படையில் 1942 வரையில் அலுவல் பார்த்த கம்போடியா அரசனின் சிற்றப்பனைப் பிரதம மந்திரியாக்கினர். கம்போடியாவில் முன்னர் கவர்னராக விருந்த பான்யங் 1945 ஆகஸ்டு 11-ந் தேதி கம்போடியாவில் குடியரசு சுதந்திரச் சர்க்கார் பிரகடனப்படுத்தப்பட்டதென்றும் 23 வயதினரான கம்போடியா அரசன் நரோத்தம சிகாநௌக் வர்மா மார்ச் 12-ந் தேதியே சுதந்திர சர்க்காரைப் பிரகடனப்படுத் தினரென்றும் பிரஞ்சுக்காரர் லாஸன் என்னும் மந்திரி யையும் கைது செய்தன ரென்றும் மார்ச்சில் சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டபோது பிரஞ்சுக்காரர் யாவரும் காவலில் வைக்கப்பட்டனரென்றும் கூறுவதாக அமெரிக்க யு. பி. கூறியது. கைது செய்யப்பட்ட ஸான்நாக்தாகர் பிரான்சுக்குக் கொண்டுபோகப்பட்டார்.

பிரிட்டிஷாரிடமிருந்து பெற்ற ஆயுதங்களைக் கொண்டு பிரஞ்சுக்காரர் ஜப்பானிய ராணுவ உடுப்புடன் பல வீடுகளை எரித்ததுடன் பல அன்னாமியரை சுட்டு வீழ்த்தினர். சைனாக்காரர்களைப் போலன்றி பிரிட்டிஷ் பிரஞ்சுக்கு ஒத்தாசை செய்தே வருகிறதென 'டைம்' டிசம்பர் 3-ந் தேதி எழுதியிருக்கிறது.

அன்னாமியரின் சுதந்திரப் புரட்சியைக் கலகமென்று கூறி அவர்களைப் பயமுறுத்தப் பல சுதேசிகளின் வீடு களையும் கொளுத்திவிட்டார்கள் நேசநாட்டார். இந்தியத்

துருப்புகள் அன்னுமியர் வீடுகளைக் கொளுத்திவிட்டதுடன் அன்னுமியரின் சொத்துக்களையும் களவாடினர் என்று 'சர்க்லெட்'டின் சைகோனிலுள்ள விசேஷ நிருபர் அறிவித்தார். எந்தச் சீனக்காரரும் அன்னுமியரைக் காட்டிக்கொடுக்க முன்வரவில்லை.

பிரஞ்சு மக்களுக்கு மாத்திரமே இந்த நேச (பிரிட்டிஷ்) துருப்புகள் பாதுகாப்பளித்தன. இவ்விந்திய துருப்புகளின் அதிக்கிரமத்தால் இந்தியாவின் பெயரே அன்னுமில் அன்னத்துவேஷமாகி விட்டது. சுமார் ஏழு எட்டு வருஷங்களுக்கு முன் சைகோன் பிராந்தியத்திற்குப் பண்டித ஜவாஹர்லால் நேரு சென்று அவர்கள் போராட்டத்தில் அனுதாபத்தைத் தெரிவித்து நம்மைப்பற்றி நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்தினர். அது இப்போது கெட்டது. இந்தோ சீனரும் அத்தகைய நாசவேலையில் அவர்கள் ஈடுபடக்கூடாதென்றும் இரு நாட்டாரும் ஏகாதிபத்ய ஆதிக்கத்திலிருந்து அகலப் போராடுபவரென்றும் முறையிட்டும் பயனில்லை. பல லிடிசிகளும், பெக்காஸிகளும், பாலியாக்களும் திருவாடானைகளும் அன்னுமில் நேர்ந்தன.

அன்னுமியர் அட்டூழியத்திலிறங்கினர் என்பதெல்லாம் வெறுங்கதை. கிறிஸ்தவரை எல்லாம் படாத பாடு படுத்துவதாகப் பிரசாரம் நடந்தது. மைதோ வென்ற அன்னுமியரின் படை வீடு ஸ்தலம் பிரஞ்சுக்காரரிடம் சிக்கிய போது ஆங்கிருந்த 100 கத்தோலிகக் கன்னி மடப் பெண்களும் சுகமே யிருந்தனர். அன்னுமியரால் தங்களுக்கேதும் ஆபத்தில்லை யென்றும் அவ்வாறே சீனரும் கூறினர். பிரஞ்சு வருமுன் அவர்கள் வியட்மின் கொடிகளைப் போட்டிருந்தார்கள். பிரஞ்சுக்காரர் வந்ததும் எடுத்துவிட்டார்கள். பதிலாகப் பிரஞ்சு கொடிகளை அவர்கள் போடவேயில்லை. சைகோனருகிலிருக்கும் சோளனிலுள்ள சீனர் நேச நாட்டுத் துருப்புகளின் கேவலப் போக்கைக் கண்டித்து கதவடைப்பிலும், வேலை நிறுத்தத்திலுமிறங்

கினர். சோதனை போடுவதாக கூறி துருப்புகள் மோசமாக நடந்து கொள்ளுவதாகவும், சோதனை போடுவதற்கு அவகாசமில்லாத இடங்களைக் கொளுத்தி விடுகிறார்களென்பதுமே அவர்கள் குற்றச் சாட்டு. சீனர்களின் கொட்டத்தை அடக்க அவர்களின் தலைவரான ஸ்ரீ ஹாலோவைப் பிரிட்டிஷார் கைது செய்ய வேண்டியதாகி விட்டது.

அக்டோபர் 15-ந் தேதியே அணுகுண்டின் பிதாவான ஜனாதிபதி ட்ரூமனையும் இதர நேசதேசத் தலைவர்களையும் வியட்னும் ஜனாதிபதி ஹோசின் மின் இந்தோ சைனா நெருக்கடியில் தலையிடும்படி வேண்டினார். ஜாப் ஆட்சியில் 50 வருஷங்களுக்குக் குறைவாக யிருந்த கொரியாவிற்கு விடுதலை யுண்டானால் அதற்கு மேற்பட்ட காலத்தில் வெள்ளைக்கார பிரான்சிடம் அவதிப்பட்ட தம் நாட்டிற்கேன் விடுதலை கிடையா தென்பதே அவரது வாதம். "பழைய ஏகாதிபத்யத்தை மீண்டும் குந்த வைக்கச் சம்மதித்திருப்பதாலேயே அமெரிக்கத் துருப்புகள் இந்தோ சைனாவில் ஈடுபட்டிருக்கின்றன. செய்கோனில் ஜாப் துருப்புகள் பிரிட்டிஷ், பிரஞ்சு துருப்புகளுடன் சேர்ந்து போரிட்டது" என்று கொலம்பியா ரேடியோவின் நிருபரான ஸ்ரீ பெல் டவுன்ஸ் கூறினார். நேச நாட்டாரும் சைகோன் செய்திகள் வெளியில் எட்டாதிருக்க இரும்புத்திரையைச் சுற்றிலும் போட்டனர். ஆஜர் பெய்ஜான் சுயாட்சி கோரிக்கை ரஷ்யாவிற்குச் சாதகமாகவும் பிரிட்டனுக்குப் பாதகமாகவுமிருப்பதால் அன்றாடம் அனவரதமும் தந்திகளை அனுப்பிவரும் ராய்டர் இந்தோ சைனாவிற்கு இருட்டடித்து விட்டது.

### நேச நாட்டார் ஜாப் உதவியை நாடினர்

இந்தோ சைனாவின் முறையீடு எவர் காதிலும் விழவேயில்லை ஜெனரல் கிரேசியின் (பிரிட்டிஷ் சேனாபதி) சேனாபலம் பெருகிக்கொண்டே வந்தது. 'ஓரான்டிஸ்'

போன்ற பிரிட்டிஷ் கப்பல்கள் பிரஞ்சு துருப்புகளைக் கொணர்ந்து கொட்டின. அங்கிருந்த 80,000 ஜாப் துருப்புகளையும் கையாண்டு கொள்ளப் பிரிட்டன் தயங்கவில்லை. தங்கள் ஆக்கிரமிப்பை எதிர்த்த அன்னுமியர் குடியரசு ஏற்படுத்தியிருப்பதை நசுக்க அவர்களும் ஆர்வங் காட்டினுர்கள். செய்கோனிற்குக் கம்போடியாவிலுள்ள நாம்பென்னிலிருந்து ஜாப் துருப்புகளே உணவுப் பொருட்களைக் கொணர்ந்தது. சீனரும், சுதேசிகளும், ஐரோப்பியருக்கு ஏதுவும் விற்க மறுக்கவே, வெள்ளைக்காரத் துருப்புகளுக்குக் கம்போடியா சமஸ்தானத்திலிருந்தே வரவேண்டியதாகி விட்டது. ஜாப் விமானப் படை உதவியுடனேயே நாம்பென்னுக்கு அக்டோபரில் பிரஞ்சு படைகள் சென்றன. அத்தகைய செய்திகள் தெரிந்தால் அமெரிக்கா அல்லோலகல்லோலப்படுமெனக் கருதி பத்திரிகை நிருபர் எவர் வந்தாலும் ‘ஒன்றும் தெரியாது’ என்று பதில் கூறும்படி எல்லா ராணுவ அதிகாரிகளுக்கும் ஜெனரல் கிரேஸி உத்தரவு போட்டார். எனினும் தாமே ஜாப் துருப்புகளை நேசநாட்டார் அன்னுமியர் மீது ஏவியதைப் பலமுறை கண்டதாக அமெரிக்க அ. பி. நிருபர் சார்லஸ் குரூமிட்ஸ் கூறுகிறுர்.

“ஜெனரல் கிரேஸியின் தலைமையிலுள்ள பிரிட்டிஷ் இந்திய ராணுவமும், பிரஞ்சு ஜெனரல் லெக்ரக்கின் தலைமையிலுள்ள பிரஞ்சு ராணுவமும் தென் இந்தோ சைனுவிலுள்ள வியட்னும் விடுதலை இயக்கத்தை நசுக்க ஜாப் துருப்புகளையும் உபயோகிப்பதைக் கண்டிக்கிறேன். நிராயுதபாணிகளாக்குவதாகக் கூறினுலும், அவர்கள் ஜாப் துருப்புகளையே முன்னணிப் படையாக உபயோகித்து வருகிறுர்கள். அட்லாண்டிக், சான் பிரான்ஸிஸ்கோ சாசனங்களின் கொள்கைப்படி தங்கள் நியாயமான உரிமைகளைப் பாதுகாக்கப் போராடும் சமூகமொன்றை இவ்வாறு கொலை செய்வதை தடுக்க வேண்டுகிறேன். வியட்னும் குடியரசையும் அங்கீகரிக்க வேண்டு

கிறேன்" என்று ஜனாதிபதி ஹோசிமின் அக்டோபர் ஆரம்பத்தில் மார்ஷல் சியாங்கிற்குத் தந்தியொன்று அனுப்பினார். அதற்கேதும் கோமின்டான் சர்க்கார் பதில் அனுப்பவில்லை. சைனாவே ஆங்கிலோ அமெரிக்கர் தயவில் வாழவேண்டியிருக்கும்போது எப்படி தனித்து காரியம் செய்யும்?

"வியட்னாம் சர்க்காரில் ஸ்டாலின் தரப்பு கம்யூனிஸ்டுகளும், டிராட்ஸ்கி தரப்பு கம்யூனிஸ்டுகளும், தேசியவாதிகளுடன் ஒத்துழைத்து வருகிறார்கள். பிரான்சு திரட்டிய அன்னமியப் போலீஸ் படை இப்போது வியட்னாம் சர்க்காருடன் பூராவாக ஒத்துழைக்கிறது. கம்போடியா ராஜசபையிலேயே பிளவிருந்து வருகிறது. அதனால்தான் மன்னனைப் பிரான்சு தங்கள் வசம் திருப்ப முடிந்தது. பிரிட்டிஷ் துருப்புகள் வாபசானால் பிரஞ்சு பாடு அதோகதிதானென்று துவாங்வான்கியோ என்னிடம் (டிராட்ஸ்கி கட்சி) கூறுகிறார். அக்டோபர் கடைசியிலே ஹோசின்மின் அதிகாரிகளுடன் சமரச முடிவுக்குப் பிரிட்டிஷார் வந்தனர். அது பிரஞ்சுக்காரருக்கும், டிராட்ஸ்கி அன்னமியருக்கும் பிடிக்கவில்லை. தீவிரவாதிகளான டிராட்ஸ்கி கட்சியார் ஒரு பிரிட்டிஷ் அதிகாரியையும் சில இந்தியத் துருப்புகளையும் சுட்டுக் கொல்லவே, அதுவே தருணமெனப் பிரஞ்சுக்காரர்கள், பிரிட்டிஷ் அன்னமியர் உடன்பாட்டை உதறும்படி பிரிட்டிஷாரைத் தூண்டி வெற்றி பெற்றார்கள். பிடித்த இடங்களிலுள்ள பிரிட்டிஷ் அதிகாரத்தைப் பிரஞ்சுக்காரர்கள் உடனே பெற்றுக்கொண்டார்கள். பிரஞ்சு கம்யூனிஸ்டு தோழர் டன்திரான் வான்கியா கண்டு கலந்து பேசவும் விரும்பினார். மலேயா, ஹாங்காங் சீனர் விஷயத்திலே பிரிட்டனுடன் சமாதானமாயிருக்கவேண்டி யிருப்பதால் சைனா அன்னமியருக்கு முழு உதவியும் கொடுக்க முடியாத நிலைமையிலிருக்கிறது. ராணுவத்திலே டிராட்ஸ்கி ஆட்களுக்கே ஆதிக்கம் அதிக மிருக்கிறது. ஆனால் அவர்கள்

செல்வாக்கு பெருகக் கூடாதென ஸ்டாலின் கம்யூனிஸ்டு கள் அவர்கள் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர். பிரசாரத்தால் ஸ்டாலின்-டிராட்ஸ்கிகம்யூனிஸ்டுகளை பிரித்து விரோதிகளாக்குதற் கென்ன வென்று சமீபத்தில் பிரிட்டிஷ் அயல் நாட்டு இலாகா பிரஞ்சு அதிகாரிகளைக் கண்டித்தது. இவ்வளவு குமுறிக்கொண்டிருக்கும் போதும் பிரஞ்சுக்காரர்கள் ரப்பர் சேமிப்புகளைப் பற்றி பெரிதும் கவலைப்படுகிறார் கள். அவைகளைக் கொண்டே அவர்கள் அமெரிக்காவுடன் பேரம் பேசக் கருதியிருந்தனர்." என்று சிகாகோ டிரிப் யூனின் நிருபர் ஆல்பிரட் வாக் 1945 நவம்பர் ஆரம்பத்தில் எழுதினார்.

அவர் மேலும் கூறியதாவது;

"டிராட்ஸ்கி கட்சியாரின் பத்திரிகையான 'காம்டு' (சாவுக்கும் அஞ்சாத்தொண்டன்) எழுதுவதாவது: கொரில்லாப்படைகள் போரில் ஈடுபட்டிருப்பதுபோல் பொது ஜனங்கள் பரிபூரண பகிஷ்காரத்தில் ஈடுபட வேண்டும். அயலாருக்கு எத்தகைய வசதியுமிருக்கக் கூடாது. துரோகக் கும்பல் துடைக்கப்பட வேண்டும்.

பிரஞ்சு அதிகாரிகள் சைகோன் பொருட் காட்சி சாலையிலிருக்கும் அம்புகளையும் வில்லுகளையும் எடுத்துக் கொண்டு மறுபடியும் அயல்நாட்டு நிருபர்களை அழைத்து அவைகளைக் காட்டி அன்னமியர் எதிர்ப்பு எங்குமில்லை யென்றும் சில காட்டு மிரண்டிகளே எதிர்ப்பதாக வும் அதற்கு அவ்வம்பு வில்லுகளே அத்தாட்சி யென்றும் பொய் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

பாட்னா சர்ச்லைட் விசேஷ நிருபர் ஸ்ரீ கித்வாய் எழுது வதாவது: அன்னமியர் பகிஷ்காரம் பூரணமாக இருக் கிறது. வெள்ளை கால் சட்டையும் கறுப்பு ஊதா சட்டை யும் தரித்திருக்கும் மெலிந்த உயர்ந்த அன்னமிய அழகிகள் பலர் பிரஞ்சுக்காரர்களுடன் பேசுவதை இன்னும் தெருக் களில் காணலாம். அவர்கள் எல்லோரும் பிரஞ்சுக்காரர்

களின் வைப்பாட்டிகள்; அல்லது விலை மாதர்கள். பிரஞ்சு ஏகாதிபத்தியத்தின் கஷ்டத்தைக் கண்டறியாத பெரிய பணக்காரிகளையும் காணலாம். அம்மாதிரியே பிரஞ்சு காரியாலயங்களில் கூலிகளைக் காணலாமே ஒழிய ஆட்சி முறை அறிந்த அதிகாரிகளைக் காணமுடியாது. அன்னமிய டாக்டர்களும், வக்கீல்களும், என்ஜினீயர்களும் வியட்னும் சாக்காருடன் சேர்ந்துவிட்டனர்."

## ரிவர் சதிபற்றி அமெரிக்கர் சாட்சியம்

அமெரிக்க யுனைடெட் பிரஸ் நிருபர் ஈவான் கிங்ஸ்கி கூறுவதாவது:

இந்தோ சைனுவைச் சட்ட சமாதானத்திற்குட் படுத்துவதென்பது 20-ம் நூற்றுண்டில் நடைபெறும் பெருத்த பாவம். அன்னமியர் கொள்ளைக்காரரென்றும், கம்யூனிஸ்டுகளென்றும் கூறி உலகை ஏமாற்ற பிரஞ்சு காலனி அதிகாரிகள் முனைந்திருக்கிறார்கள். கிழக்கத்திய கம்யூனிசம் வேறுவிதமானது. பணக்கார அன்னமியரும் பாமரர் அவதிகண்டு தங்கள் சுகபோகங்களை உதறித் தள்ளி வெளி வந்துள்ளார்கள். அவர்களில் சிலர் சமரசத் திற்கும் தயாராகவிருந்தார்கள். சமரசம் பேசுக்கொண் டேயிருக்கும்போது, செப்டம்பர் 23 ந்தேதி கர்னல் ரிவர் போர்க் கைதிகளுக்கெல்லாம் ஆயுதங்கள் அளித்து அன்னமியதேசிய வாதிகளைத் தாக்கியதால் நிலைமை மாறி விட்டது. நேசநாட்டார் (பிரிட்டிஷ்) ஊரடங்கு சட்டம் போட்டது. ரிவரின் ஆட்களுக்கு சௌகரியமாகி விட்டது. விடியற்காலை 4-மணிக்கு ஜாப்புடன் உறவாடிய பிரஞ்சு போலீசுடனே எல்லா பொதுக் கட்டிடங்களையும் திடீரென ஆக்கிரமித்துக்கொண்டார்கள் அன்னமியக் காவலாளிகளைச் சுட்டார்கள். அகப்பட்ட வியட்மின் அதிகாரிகளை கொட்டடியில் அடைத்தார்கள். ஜாப்பை எதிர்க்க முதுகெலும்பற்ற போலீஸ் புலிகள் அவர்களைக் காலால் உதைத்தார்கள்; கன்னத்திலடித்தார்கள்; துப்பாக்கி

சனியனுல் குத்தினுர்கள். சாதாரணப் பிரஞ்சுக்காரன் கூட அன்னுமியரை நடுத்தெருவில் அவமதிக்கத் தலைப் பட்டான். பிரஞ்சு அதிகாரிகள் முன்னிலையிலேயே தேசிய செஞ்சிலுவை சங்கத்தில் தேசபக்தியால் சேர்ந்து தொண்டுபுரிந்த உயர் குடும்பப் பெண்களைக் கூச்சமின்றி அவமரியாதையாகப் பேசி போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத் தான். தெருவிலும் போலிஸ் சாவடியிலும் ரத்தம் கொட்டிக் கிடப்பது சகஜமாகி விட்டது. ஆயுத சோதனை போடுவதாகக் கூறி அன்னுமியரை அல்லல் படுத்துவது அன்ருட வழக்கமாகிவிட்டது. 'ரிஷிலு' போர்க் கப்பல் வந்தபோது வெளியில் 1000 துருப்புகளே வந்ததென அறி வித்தார்கள். ஆனுல் உண்மையில் 4000 துருப்புகள் வந் தன. அரிசி, துணி பங்கீட்டிலும் மகா மோசம். அன்னு மியருக்குப் பங்கீட்டு சீட்டு கொடுப்பதேயில்லை. பிரஞ்சு காரர்கள் ஏராளமாகப் பொருள்களைப் பெற்று அவை களைக் கள்ளச் சந்தையில் கண்டா கண்ட விலைக்கு விற்கிருர்கள். அன்னுமியர் வெளியே எங்கு போகவேண்டு மானுலும் அனுமதிச் சீட்டுப் பெற்றுலே செல்லலாம். பல சமயம் சீட்டு கேட்டாலும் பிரஞ்சு அதிகாரிகள் கொடுப்பதில்லை. இவைகளைப்பற்றி நிருபர் மகாநாடொன் றில் நான் கர்னல் சிடிலியைக் கேட்டபோது அவர் வெளி யேறிவிட்டார். அன்னுமியர் அடைப்பட்டிருக்கும் சிறைக் கூடம் பார்க்க அனுமதி கேட்டேன். மறுக்கப்பட்டது. எனினும் துணிந்து ஒரு நாள் காவற்கூடத்தில் புகுந் தேன். அத்தகைய கோரக்காட்சியை நான் எங்கிலும் கண்டதேயில்லை. இவ்வாறு செய்திகளை மறைத்தது பற்றி மவுன்ட் பேட்டனுக்கும் அறிவித்தோம். சென்ற மாதம்கூட பல அன்னுமியரைக் கயிற்றில் கட்டி கூட்டாகத் தெருவில் இழுத்துச் செல்வதைக் கண்டேன். சிறைச்சாலைகளில் குடியானக் கிழவிகளு மிருந்தார்கள். அவர்கள் உடல் முழுதும் ரத்தம். அவர்களைப் பிரஞ்சு காவலாளிகள் உதைத்ததோடு அடித்தார்கள். நாஜியிட

மிருந்து பிரான்சை விடுவிக்கப் போராடிய பிரஞ்சு சைந்நியங்கள் இப்போது சட்டம் சமாதானத்தின் பெயரால் அன்னமிய விடுதலை இயக்கத்தை அழிக்க குவிந்து வருகின்றன!"

சிட்னி சன் பத்திரிகையின் நிருபர் 1945 டிசம்பர் 20-ந் தேதி எழுதுகையில், குரூரமான கசாப்பு வேலை' என்று சைகோன் நிலைமையை வருணித்தார். பல நேச நிருபர்களும் நியாயா நியாயமின்றி பலர் தூக்கிலிடப்படுவதாகவும் கொள்ளை யடிக்கப் படுவதாகவும் சொத்துக்கள் பொசுக்கப் படுவதாகவும் பலமாக முறையிட்டார்கள். டக்ஹோவில் தான் 24 வயதுள்ள அன்னமிய வாலிபனைப் போலிஸ் அதிகாரிகள் முன்னிலையிலேயே மூங்கில் தடிகள் கொண்டு அடிக்கப்பட்டதும், அதனால் தலையிலும் தேகத்திலும் ரத்தமாயிருந்ததாயும், ஒரு சட்டைக்காரன் அவன் காலை தடிகொண்டு ஒடித்ததாகவும், கேட்ட கேள்விகளுக்குப்பதில் கூற மறுத்ததால் முடிவில் அவனைத் தலையில் சுட்டு வீழ்த்தினார்களென்றும் ஆஸ்திரேலிய நிருபரொருவர் தாம் கண்டதைக் கூறுகிறார். சோ நதியின் வடக்கில் ஒரு கிராமத்தையே தரைமட்டமாக்க வேண்டியிருந்ததென 1945 அக்டோபர் 27 ந் தேதி சைகோன் அதிகாரிகளின் அறிக்கையே கூறுகிறது. அதில் ஈடுபட்டது அடிமை இந்தியாவின் ஆட்கள். டிசம்பரில் தலாத்திற்கு வடக்கேயுள்ள டிசியை நேச நாட்டுத் துருப்புகள் சாம்பராக்கியதை நியூஸ் கிரானிகிளே நாஜிகள் செக் நாட்டில் லிடிசியைக் கொளுத்தியதற் கொப்பாகுமென்றது. அன்னமிலுள்ள டார்லாட் மற்றொரு பெக்காஸியானது.

நேச நாட்டார் சைகோன் பாதுகாப்புக்கு ஜாப் துருப்புகளை உபயோகித்ததில் அன்னமியரால் எதிர்க்கப் பட்டு எல்லா நேச நாட்டாரின் சேதங்களைவிட ஜப்பானியரே அதிகமாக அடைந்தார்கள் என்று பிரிட்டிஷ் சர்வதேச உறவுக் கழகப் பத்திரிகைகூறுகிறது. பிரிட்ட

னும், பிரான்சும் லண்டனில் செய்துகொண்ட சிவில் விவகார ஒப்பந்தப்படி சைகோனிலுள்ள பிரிட்டிஷ் சேனுபதி தன்னிடம் சிக்கின எல்லா அன்னுமியக் கைதிகளேயும் பிரான்சிடம் அக்டோபர் மத்தியிலிருந்து கொடுக்க ஆரம்பித்தார். ஒப்பந்தம் கையெழுத்தான போது அது வெறும் சிவில் விவகார சம்பந்தப்பட்டதே ஒழிய பிரான்சிற்கு இந்தோ சைனுவை ஒப்படைப்பதாகாது என லண்டன் கூறியது. தன்னிடம் சிக்கிய அன்னுமியர் பலரைப் பிரஞ்சு அதிகாரிகள் ராணுவ கோர்ட் நாடகம் நடத்தி தூக்கிலிட்டார்கள். அவ்வாறு பயமுறுத்திஞல் தேசிய இயக்கத்தை எவரும் ஆதரிக்க மாட்டார்கள். எனப்பிரஞ்சு கருத்து. 'கலகக்காரர்'களே விட குரூரமாயிருந்தால் தான் சமாதானத்தை நிலே நிறுத்தலாமென ஒரு பிரஞ்சு அதிகாரி கூறினுர். அவ்வாறு தூக்கிலிடப்படுவதை ஆட்சேபித்து ஜனுதிபதி ஹோசின்மின் அதில் தலேயிடுமாறு பிரிட்டிஷ் தொழிற் கட்சி பிரதமர் மேஜர் கிளிமண்ட் ஆட்லிக்குத் தந்தியனுப்பினுர். அதற்குப் பதிலேதுமில்லே. நவம்பர் 2ந் தேதி வியட்மின் சர்க்காரும் பிரஞ்சு அக்கிரமத்தைக் கண்டித்தது. எறிகுண்டுகளே எறிந்ததற்கே தூக்கு தண்டனே விதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. குண்டிஞல் எவரும் சாகவில்லே என்பதும் கவனிக்கத்தக்கது.

## அன்னுமிய மீர்ஜாபர்கள்

அன்னுமியரின் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி பிரான்சுகொண்ட கருத்து என்ன? "முன்னேற்ற மடைந்துள்ள சில அன்னுமியர் சுயாட்சி பெற விரும்பினுர்கள். அதைச் சாதகமாகக்கொண்டு ஜப்பானியர் பிரஞ்சு துவேஷத்தைக் கிளப்பிவிட்டனர். துவேஷக் கட்சிகளெல்லாம் ஜப்பானியருடன் பேரம்பேசி யதேச்சையாகச் செயல் புரியத் தொடங்கினுர்கள். ஜாப் தோல்வி அவர்களுக்குச் சாவுமணி அடித்தாகிவிட்ட தென்பதைக் கண்டே

அவர்கள் நாட்டில் கலகங்களைக் கிளப்பிவருகிறார்கள். ஜப்பானியரே வியட்மின் தலைவர்களுக்குப் பணமும் ஆயுதமும் அளித்தனர். கலகம் தலைகாட்டாத பிராந்தியங்களிலிருக்கும் வியட்மின் துருப்புகளுக்கு ஜப்பானியர் ஆயுதமளிப்பார்கள் என்றதொரு தந்தியை அன்னும் ஜாப் ராணுவத் தலைவர், 'ஜனாதிபதி' ஹோ சின் மின்னுக்கு அனுப்பியது எங்களிடம் சிக்கியிருக்கிறது. ஜாப் வேஷதாரிகள் பலரை நேசநாட்டார் கண்டு பிடித்திருக்கின்றனர். கம்பேடியா, லா ஆஸின் மரபு வேறு; அவையிரண்டும் பிரான்சை வரவேற்கத் தயாராயிருக்கின்றன. சுமையாக சீனத் துருப்புகள் லா ஆஸிற்குச் சென்றிருக்கின்றன. பட்டம்பாங்கில் 2¼ லட்சம் கம்போடியரும் 4000 ஸயாமியருமேயிருப்பதால் அது பிரான்சிற்கு வர வேண்டும். பழய கலோனியல் ஆட்சிமுறை இனி இராது. சுயாட்சி பெருகும். பிரஞ்சு மக்களைப் போல சுதேசிகளும் பிரஞ்சு யூனியன் பிரஜா உரிமை பெறுவர். சர்வஜன வாக்குரிமையுண்டு. பிரஞ்சுக்காரர்களுடன் அவர்களும் எதிர்கால திட்டத்தை வகுக்கலாம். பிரஞ்சு சமஷ்டி யூனியனில் சுதந்திரமாக இந்தோசைனு விருக்கலாம்."

பிரான்சிற்குச் சாதகமாகச் சில மீர்ஜாபர்களும், குவிஸ்லிங்குகளுமிருப்பதால் அரசியல் ஞானம் அதிகமில்லாத மேல் நாட்டுப்பொது ஜனங்களைப் பிரான்சும் பிரிட்டனைப் போலவே ஏமாற்றிய பிரஞ்சு சர்க்காரின் தயவில் பாரிசுக்கு 1945 செப்டம்பரில் சென்ற கிருஷ்ணு வாங் கோமகன் நடத்திய நிருபர் மகாநாட்டில் ஜப்பானியர் படையெடுத்ததும் கொலை, களவு பொசுக்கல், கற்பழித்தல் முதலியன பர்வினவென் வழக்கப்பிரகாரம் கூறிவிட்டு 1945 மார்ச்சு 10ந் தேதி லா ஆஸின் ஜாப் எதிர்ப்பு இயக்கம் தலையெடுத்ததாகவும், நேச நாட்டு விமானங்கள் இறங்க ரகசியமாக விமானதளம் தாங்கள் கட்டியதாகவும், ஜப்பானியரை அதிகநாள் தாக்குபிடிக்க முடியாததால் தாம் சைனுவிற்குப்பின் வாங்கியதாகவும்

தம் மகன் பிரஞ்சு கமாண்டோகளுடன் சேர்ந்திருப்பதாக வும், பெண்களை ஒப்புவிக்க மறுத்த பெற்ருேர்கள் முரண்டிய போது ஆக்கிரமித்த துருப்புகள் அவர்களைத் தூக்கிலிட்ட தாகவும், அப்போது ஸயாமிய துருப்புகள் அத்துமீறிச்செய்த அநியாயத்தை ஜப் துருப்புகளே சகியாது லா ஆஸுகளை அவர் மரபாரிடமிருந்து காக்க முன் வந்தாக வேண்டியிருந்ததென்றும், ஜப் சரணுகதி யின் பிறகு அவர்களோடு உறவாடிய அன்னுமியர்கள் வந்தார்களென்றும் கூறியதுடன் பின் வருமாறு சொன்ஞர்: "இன்று லா ஆஸ் சர்க்கார் மீண்டும் பதவிக்கு வந்துவிட்டது. லுவாங் பிரபாங்கிலும், வியட்டினிலும் பிரஞ்சு கொடி பறக்கிறது. சீனத்துருப்புகளின் ஆக்கிரமிப்பு எங்களுக்குத் தேவையில்லை. அரிசியில்லாக் காலத்தில் அவர்கள் வேறு வேண்டுமா? நாங்கள் பிரான்ஸை விடோம்.'' டைடான் சக்ரவர்த்தி என்ற பெயருடன் அன்னுமை 1907–16 வரை ஆண்ட வின்ஸாணைக் கையாளாக அன்னுமில் உபயோகிக்கப் பிரான்சு கருதியது. அன்ஞர் இவ்வருஷ தொடக்கத்தில் ஆப்பிரிக்காவில் நடந்ததொரு விமான விபத்தில் மாண்டார்.

அன்னுமியரின் தேசீய இயக்கியமாகிய வியட் மின்னே ஐப்பானை ஆதியில் எதிர்த்தது என்று லாவ் லாடக்கென்னும் பாரிஸ் வெளிநாட்டு அதிகாரி கூறினு லும் அதே ஜப்பானியரிடமிருந்து அவர்கள் ஆயுதங் களைப் பெற்றது பிடிக்கவில்லையாம். பிரான்சிற்குக் கொடுப்பது போல அவர்களுக்கு அமெரிக்காவோ, பிரிட்டனே ஆயுதமளிக்கின்றனவா? ஐரோப்பா கண்டத்தில் தாயகம் திரும்பவேண்டி ஆயிரக்கணக்கான துருப்புகள் காத்திருக்கும் போது அமெரிக்கக் கப்பல்கள் பிரான்சி லிருந்து பிரஞ்சு துருப்புகளை அன்னுமியரை அடிமை கொள்ள ஏற்றிச்சென்றனவென பி. எம். என்ற பத்திரிகை 1945 நவம்பரில் குற்றஞ் சாட்டியது.

புதுவருஷ தினத்தில் சர் ராதாகிருஷ்ணன் கூறியது

போல் கீழ்திசை நாடுகளிடையே விடுதலை உணர்வைக் கிளப்பி விட்ட பெருமை ஜப்பான் ஒன்றிற்கே உரியது. பிரிட்டிஷ் பிரஞ்சு, டச்சு ஏகாதிபத்யங்கள் மீண்டும் வேதாளம் மாதிரி பழய காலனிகள் மீது குந்த வந்ததும் ஏற்பட்ட எதிர்ப்பை இப்போது ஒருவாறு சமாளித்து விடலாமென்ற தைரியத்துடனிருக்கின்றன.

டிசம்பர் ஆரம்பத்தில் கொச்சின் சைனுவில் டிராவினிலிருந்த வியட்மின் சர்க்கார் தலைமைக் காரியாலயத்தைப் பிரஞ்சுக்காரர்கள் பிடித்தார்கள். பிரஞ்சு சர்க்கார் திரும்பவும் வட இந்தோ சைனுவிற்கு வர முயலுவரென்பதை அறிந்த அன்னும் தேசீய வாதிகள் தங்கள் வேற்றுமைகளை விட்டு, 1946 ஜனவரி முதல் தேதி கூட்டு சர்க்காரை ஹனுயில் அமைத்தனர். புது சர்க்காரிலும் ஹோசின் மின்னே ஜனுதிபதி. தான் நிகுயன்ஹேய் உப ஜனுதிபதி. கியாப்வோ நிகுயன். உள்நாட்டு மந்திரியாகவும், லியு திரான் ஹிய் விளம்பர மந்திரியாகவும் பதவி ஏற்றனர் அன்னுமிய கோமின்டாங், புது அன்னும் வாலிபர் குடியானவர் தேசீய ஊழியர் கட்சிகள் இதில் அங்கம் வகிக்கின்றன. ஒற்றுமையைக்கருதி கம்யூனிஸ்டுகள் தங்கள் கட்சியை நவம்பர் 11-ந்தேதி கலைத்து விட்டார்கள்.

1941-லேயே அக்கட்சிகள் எல்லாம் யுத்தத்தின் பிறகு இந்தோ சைனுவைச் சுதந்திர நாடாக ஆக்குவதென்ற அடிப்படையில் ஒன்று சேர்ந்தன. 1943-ல் சைகோன் சீமைச் சீனரும் அக்கூட்டில் சேர்ந்தனர். முக்கியமானதொழில்களைத் தேசியமாக்குவதென எல்லாக் கட்சிகளும் முடிவு செய்துள்ளன.

அரசியல் ஆலோசகராக மன்னர் பாவ்தாய் ஜனவரி மத்தியில் நியமிக்கப்படார். பார்லிமெண்டிலும் அன்னூர் அங்கத்தினராய் தேர்ந்தெடுக்கப்பட்டார். அமெரிக்கா அ பி. நிருபர் பேட்டி கண்டபோது "நான் சுதந்திர நாட்டின் பிரஜையாக விருந்தாலு மிருப்பேனேழிய

அடிமை அன்னமின் அரசனுக ஆளமாட்டேன். வியட்னமை நசுக்க என் பெயர் இடங்கொடேன். ரத்தக்கிளறியின்றி இங்கு குடியரசேற்பட்டது. இதைச் சகல நாடுகளும் கவனிக்க வேண்டும். நாங்கள் பிரான்சின் எதிரிகளல்ல. சுதந்திரமே கேட்கிறோம்" என்றார். ஐக்கியநாட்டு சாசனம் முடியரசுகளையும், காலனிகளையும் ஒழித்துக் கட்டி விட்டதென்றார்.

ஹோவாஹாட் என்ற மதக் கட்சியும் வியட்மின்னுடன் சேர்ந்துவிட்டது. 1936-ல் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய உழியர்கள் கட்சியிலேயே 30 லட்சம் அங்கத்தினர்களிருக் கிறார்களாம். அதை 1½ கோடி மக்களுக்கு மேல் ஆதரிக்கிறார்களாம் 1946 ஜனவரியில் பாரிசுக்குத் திரும்பிய ராணுவ அதிகாரிகள் வியட்மின் வடபாகத்தில் பலங் கொண்டிருக்கிறதென்றும் அதனைக் கிளப்புவது மகா கடினமென்றும் கிராமம் கிராமமாகப் பிடித்தாலே சாத்தியமாகுமென்றும் கூறுகிறார்கள்.

வியட்னும் சர்க்காரை நடத்த இந்தோ-சைனு பாங்கினிடமே ஹனுய் சர்க்கார் கடன் எடுத்தது. அதுவோ பிரான்சின் கைப்பொம்மை. தற்காப்பிற்கு ஏராளமாகச் செலவிட வேண்டியிருந்தது. சீனர் வேறு வந்தது நாணயப் பொருக்கத்தை அதிகமாக்கி, விலைவாசிகளை ஏற்றி விட்டது. சீன நோட்டுகள் புழக்கம் பல சிக்கல்களைக் கொடுத்தன. இன்று சீன நோட்டுகளே அதிகமிருக்கின்றன. அவைகளை பின்னல் இந்தோசைனு பாங்கிமதிக்க மறுத்தது ஆகவே வியாபாரிகள் பொருட்களின் விலைகளைப் பெரிதும் தூக்கிவிட்டார்கள். உதாரணமாக டேலா தங்கம் 1200 பியஸ்டிரஸ்களாக விருந்தது அக்டோபர் முதல் தேதியின்பிறகு 2500 பியஸ்டிரஸ்களாக ஏறி விட்டது. சீனர் அகன்ற பிறகு சீன நோட்டுகளுக்கே மதிப்பில்லாது செய்து வியட்மின் சர்க்காரை திக்குமுக்காடச் செய்யவும் பிரஞ்சு அதிகாரிகள் சதி செய்தார்கள்.

யுத்தகால அமைதியின்மையால் வேளாண்மை சரிவரச் செய்யப்படாததால் பஞ்சத்தின் சாயலும், 1945 இறுதிப் பனிக்காலத்தில் தொத்து நோய்களும் இந்தோ சைனுவில் தலைகாட்டின. இந்தோ சைனுவில் கொச்சின் சைனுவுமே முக்கிய விளை நிலம். அதுவோ பிரான்சி னிடம் சிக்கிவிட்டது. அடுத்த நெல்விளை பூமியாகிய டான்கின்னே தேசிய வாதிகளிட மிருந்தது. வெளி உலக நாடுகள் எதுவும் அதனை அங்கீகரியாததால் எதனுடனும் வர்த்தகத் தொடர்பு கொள்ள முடியாமல் திண்டாடியது. போதாக்குறைக்கு வெள்ளம் வேறு தோன்றி பல அணை களையும் பாழாக்கியது நிலைமையை மோசமாக்கிவிட்டது. கொச்சின் சைனுவின் அமித அரிசியைப் பிரஞ்சுக்காரர் கள் தங்களைவர அனுமதித்தால் தருவதாகக் கூறினுர்கள். அதற்கு அன்னுமிய தேசிய வாதிகள் எவ்விதம் ஒருப் படுவர்? நடுநிலை நாடாகிய அமெரிக்கா போன்ற தேசத் தார் விநியோகம் செய்தால் ஆட்சேபமில்லை என்றனர் தேசீய வாதிகள். ஆனுல் அரிசி விநியோகத்தை வைத்து அரசியலைக் கைப்பற்ற எண்ணிக்கொண்டிருந்த பிரஞ்சுக் காரர்கள் அதற்கு உடன்படவில்லை.

நேச நாட்டார் சார்பாக பிரிட்டிஷ் இந்தியப் படைகளை இறக்கிய மேஜர் ஜெனரல் கிரேஸி அடிவைத்த போது ஜப்பானியர்களை நிராயுதபாணிகளாக்கவும், நேச நாட்டுக் கைதிகளை விடுவிக்கவுமே வந்ததாகக் கூறினுர். பிரஞ்சு சேனு பலம் ஆயுதமற்ற அன்னுமியரைத் தனித் துச் சமாளிக்கக்கூடிய சக்தி கொண்டுவிட்டதும் பிரிட்டி ஷார் 1946 ஜனவரி 30-ந்தேதி யன்று முடிவாக வாபஸாகி விட்டனர். சைகோனை விட்டுச் செல்லுமுன் ஜெனரல் கிரேஸியுக்கு அந் நகர உரிமை வழங்கப்பட்டது. பிரிட் டனிலும், ஆஸ்திரேலியாவிலும், நியூஜிலந்திலும் இன்று தொழிற் சர்க்கார்களே பதவி வகித்தும் நிறங் கலந்த மக்கள் கதிஎன்னவாயிற்று? கீழ்க்கோடி நாடுகளில் தோன்றும் தேசீய சக்திகளுக்கு ஆதரவு அளியாது அவை

களை அடக்கி ஒடுக்கி ஏகாதிபத்தியங்களுக்குப் பலி கொடுத்த பாக்கியம் பிரிட்டிஷ் தொழிற் கட்சிக்கும் சேர்ந்ததே. அம்மட்டுமா? எதிரிகளான ஜப்பானியருக்கும் ஆயுதமளித்து தேசீய வாதிகள்மீது ஏவியதுடன் ஆசிய மக்களுள் பகையை வளர்த்தும் விட்டனர். ஜனாதிபதி ரூஸ்வெல்டே இந்தோ சைனாவில் பிரஞ்சு நடத்திய மோசமான ஆட்சியைப்போல ஒரு கோர ஆட்சி எங்கிலும் கிடையாதென்றும் அது சர்வதேச நிர்வாகத்திலிருக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறார். ஆனால் அன்னாமியர் ஆர்ப்பரித்து எழுந்தபோது அமெரிக்கா என்ன செய்தது? பிரான்சிற்கும் அன்னாமியருக்கு மிடையே சமரசம் செய்துவைப்பதாக அக்டோபரில் கூறியது. அதற்குக்கூட ஏகாதிபத்ய பிரான்சு இணங்கவில்லை. "கலகஞ் செய்யும் இந்தோ சைனாவாதிகளுடன் சமரசப் பேச்சா? அது உள்நாட்டு பிரச்னையல்லவா? அமெரிக்கத் தலையீடு வேண்டாம்" என்றது பிரான்சு. ஆனால் அதைக் கூறிய அதிகாரியே அமெரிக்கா இந்தோ சைனாவில் பிரான்சின் ஆதிபத்ய உரிமையை அங்கீகரித்ததுபற்றி ஆனந்தம் கொண்டார்.

தமக்கும் இதர வல்லரசுகளுக்கும் தகராறு நேரும் போதெல்லாம் காலனி ஆட்சிகளைச் சுட்டிக்காட்டி சோவியத் பத்திரிகைகள் கேலி செய்தன. பிரிட்டிஷ் 'நியூலீடர்', அமேரிக்கா 'அமரேஷியா' கூடத்தான் ஜனநாயக வல்லரசுகளின் கேவலப் போக்கைக் கடுமையாகக் கண்டித்தன. குட்டி லெபனானுக்கும், படாக்ளியோ இதாலிக்கும் அங்கீகாரம் கொடுக்க முன்வந்த ரஷ்யா, ஷியாட் மின் சர்க்காருக்கோ, ஜனாதிபதி சுகர்னோ சர்க்காருக்கோ மதிப்பு அளிக்க முன்வரவில்லை.

டச்சுத் தோழர்கள் சமீபத்தில் நடத்திய வருஷாந்திரக் கம்யூனிஸ்டு மகாநாட்டில் கூட சுத்த சுதந்திரம் இந்தோனேஷியாவிற்குக் கொடுப்பதைப் பேசவில்லை. ஆனால் டச்சு சர்க்கார் தங்கள் காலனி கொள்கையை

மாற்றிக்கொள்ள வேண்டுமென்றும் பலாத்காரத்தைக் கைவிட வேண்டுமென்றும் கூறினர்.

உண்மையில் ஜனநாயக வல்லரசுகளுக்கு அந்தரங்க சுத்தி யிருக்குமானல் இந்தோசைனுவில் தோன்றிய கிளர்ச்சிகளைப் போன்ற விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவு தந்து—ஸ்பெயினில் குடியரசுவாதிகளுக்குத் தருவதுபோல உலகெங்கும் சுதந்திரத்தைத் தழைக்கச் செய்திருக்கவேண்டும். வியாட்மின் சர்க்காரும் பொதுஜன வாக்கொடுப்பதற்கும் சர்வதேச விசாரணைக்குத் தயாராக விருந்தது. நேச நாட்டுக் கைதிகளை ஒப்புவிக்கவும், ஜப்பானியரைக் கைது செய்ய வசதிதரவும் வியாட்மினும் தயாராக விருந்தும், நேசநாடுகள் ஏற்கவில்லை. ஏகாதிபத்ய வெறி தொழிலாளர் சர்க்காரையும் வீட்டுவிடவில்லை.

## கூலி பொருளாதார தத்துவம்

அமெரிக்காவின் உதவி ஜனுதிபதியாக விருந்த ஹென்றி வாலஸ் கூறியபடி கூலி பொருளாதாரத்தில் மேலே ஏகாதிபத்யங்கள் வாழ்ந்து வருகின்றன. அதாவது கீழ் நாட்டாரைக் கூலியாகக் கொண்டாலே, அவர்கள் சுகபோகத்தில் வாழலா மென்பது. உதாரணமாக 3 கோடி பவுனுக்குமேல் ஆண்டுதோறும் ஹாலந்திற்கு ஜாவாவிலிருந்து லாபமாகக் கிடைக்கிறது. பிரான்சோ இந்தோசைனுவிலிருந்து செல்வச் சுரண்டலை நடத்தியதுடன் அந்நாட்டு மக்கள் மலிவான ஜாப் சாமான்களைப் பெறக் கூட போரின் முன் அனுமதிக்கவில்லை. பர்மாவிலும் இதே கதை. மரத்திலும் எண்ணெயிலுமே பிரிட்டன் $1\frac{1}{2}$ கோடி பவுன் லாபம் அடிக்கிறது. சணல் தொழிலிலே கூலியாகக் கொடுக்கப்படும் ஒவ்வொரு 12 பவுனுக்கும் ஸ்காத்லந்திலுள்ள பங்காளிகளுக்கு 100 பவுன் லாபம் அளிக்கப்படுவதாக ஸ்ரீ பிரெயில்ஸ் போர்டு கூறுகிருர். அதாவது நெற்றிவேர்வை கொட்டும் தொழிலாளிகளுக்கு 12 பவுன்;

முதலை போட்டு வீட்டிலிருக்கும் முதலாளிகளுக்கு 100 பவுன். இவ்வாறு பலர் சேவை செய்து தரும் லாபத்தைப் பெருவாரியாக அடிக்கும் முறையையே ஸ்ரீ வாலஸ் 'கூலி பொருளாதாரம்' என்கிருர். நிறங்கொண்ட மக்களை அடிமைகளாக வைத்தாலேயே மேலை நாடுகள் தங்களுள் அடித்துக் கொள்ளுவதைக் குறைத்துக் கொள்ளலா மன்ரோ?

இந்தோ சைஞ வளம்பொருந்திய நாடுதான். அது தன் ஏகபோகச் சந்தையாக இருக்கப் பிரான்சு அந்நாட்டில் தொழில்களைத் துவக்கவேஇல்லை. பிரான்சு தன்னுட்சியில் குடிகள் இருமடங்காகப் பெருகியதென டமார மடிக்கிறது. படிப்போ 11% மேல் ஏறவில்லை. அன்ருடக் கூலி 1 ரூபாய்கு அதிகமாகவில்லை.

தென் கிழக்கு ஆசிய சமஷ்டியொன்று அமைக்க வேண்டுமெனப் பர்மா தலைவர் ஜெனரல் ஆங்ஸான், பண்டித ஜவாஹர்லால் முதலிய தலைவர்களும் கூறிவருகிருர்கள். ஐரோப்பிய வல்லரசுகளிடை அடிமைப்பட்டிருக்கும் அத்தகைய நாடுகளின் விடுதலை இயக்கம் ஒன்றுபட்டு வேலை செய்தாலேயே அவைகள் சுதந்திரம் அடையும். இந்தோ சைஞவிலும், ஜாவாவிலும் சுதந்திரக் கிளர்ச்சிகள் நடக்கும்போது பர்மாவிலும், இந்தியாவிலும், மலேயாவிலும், இலங்கையிலும் சுதந்திரக் கிளர்ச்சிகள் வீறு கொண்டு எழுந்தால் பிரிட்டன் தன் ஏகாதிபத்யப் படைகளை அங்கு அனுப்பி கூலிப் பொருளாதாரத்தை அமைக்க பிரஞ்சு, டச்சு ஏகாதிபத்யங்களைச் சுமத்த முடியுமா? பரஸ்பர சகாயத்திற்காகவே இன்று எவ்வாறு ஏகாதிபத்யங்கள் பலாத்கார உதவிகளை ஒன்றுக்கொன்று அளித்துவருகின்றனவோ அவ்வாறே ஐரோப்பாவிடம் அடிமைப்பட்ட நாடுகள் ஒன்றுசேர்ந்து பரஸ்பர உதவியுடன் வீறுகொண்டெழுந்தாலே விடுதலைபெறும். சில்லறை இயக்கங்கள் சிறப்பைத் தராது. ஆகவே தென்

கிழக்காசிய நாடுகளின் பொது இயக்க அமைப்பு உடனே தேவை. அது தலையெடுக்காதபடி, வேற்றுமைகளை இப்பவே ஏகாதிபத்யம் கிளப்பிவருகிறது. ஜாப் ஆட்சிகாலத்திலே மார்ஷல் சுபாஷ் சந்திரபோஸ் சர்க்காரின்கீழ் எல்லா ஜாதியாரும், இனத்தாரும் , மதத்தாரும் ஒன்று பட்டனர். பர்மியர், இந்தியர், மலேயர், தாய், அன்னுமியர், ஹிந்து, முஸ்லிம், வடநாட்டான், தென்னுட்டான், பிராமணன், வைசியன், பறையன் வித்தியாசங்களெல்லாம் ஒழிந்தன. நாம் இப்போது காண்பதென்ன ? பிரதமர் டாக்டர் பாமா ஆட்சியில் ஒன்றுபட்ட இந்திய - பர்மியர்களைக் கிளப்ப பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் விதை போடுகிறது. அதற்காகவே மாஜி பிரதமர் ஊ ஸாவை விடுதலை செய்திருக்கிருர்களாம். பர்மா பிரிவினையே பிரிட்டிஷ் செயல், கவர்னர் சர் சார்லஸ் இன்ஸ் விஷமம். ஆகவே பிரிட்டிஷ் சதியை முறியடிக்க தென் கிழக்காசிய மக்கள் உடனே கூடி தங்கள் வேலைதிட்டத்தை வகுப்பதுடன் முன் எச்சரிக்கையாகவு மிருக்கும்படி தங்கள் நாட்டு மக்களை அறிவுறுத்தினுலேயே விடுதலை அடையலாம். தொழிலாளியானுலும், கம்யூனிஸ்டானுலும் ஐரோப்பிய உதவி எதிர்பார்க்கலாகாது.

V

# இறுவாய்

ஜனவரிமாதம் முடிந்ததும் 150 பாகை வட குறுக்கைக் குத் தெற்கிலுள்ள தென்பாதி இந்தோ சைனு முழுதும் பிரான்சின் ஆட்சியில் வந்ததுடன் அமைதியும் நிலை நாட்டப் பட்டுவிட்டதென்று பிப்ரவரி 4-ந்தேதி ஜெனரல் லெக்லெர்க் கூறினுர். ஒன்றிரண்டு அன்னுமியக் கொரில் லாக்களே தொந்தரவளித்து வருவதாகவும் சீனர் அனுமதி யுடன் பிரஞ்சு கமாண்டோக்கள் வடபாகத்தின் எல்லை யோரத்தில் ஆழம் பார்த்து வருவதாகவுங் கூறினுர்.

பிப்ரவரி இறுதி வியாழனன்று சுங்கிங்சில் பிரான் சும், சைனுவும் செய்துகொண்ட ஒப்பந்தப்படி சீனத் துருப்புகள் காலி செய்யுமிடங்களை யெல்லாம் உடனடி யாகப் பிரஞ்சுத் துருப்புகள் ஆக்கிரமிக்க வேண்டு மென்று உடன்பாடேற்பட்டது. தேசிய வாதிகளுடன் தக ராறில்லாமல் ஆக்கிரமிப்பதென்ற முயற்சியும் அப்போது முறிந்துபோனது. பிரஞ்சுக்காரரோ அப்போது உள் நாட்டுச் சுயவாட்சியே தருவதாகக் கூறினர். தேசிய வாதிகளோ சுத்தச் சுதந்திரத்தைத் தவிர வேறு ஏதும் ஏற்க முடியாதெனக் கூறிவிட்டனர். பிரஞ்சு சொத்துக் களையும் மக்களையும் காப்பாற்றித் தருவதாகவும், ஆனுல் இந்தோ சைனு பிரஞ்சுக் காலனி என்பது ஒழிந்தாக வேண்டுமென்ருர் ஜனுதிபதி ஹோசின்மின். சுதந்திரச் சர்க்காருக்கு ஆலோசனையாளராக பிரஞ்சுக்காரர்களை நியமித்துக்கொள்ளவும் தயாரென்ருர். 'சுதந்திரப் பேச்சைக் காதில் போடாதே' என்றனர் காலனி அதிகாரி கள். தகராறு நேர்ந்தால் பல வருஷங்கள் தாக்குப்பிடிக்க மலைகளிலும் காடுகளிலும் கொரில்லா போர் நடத்த

வியட்னும் சர்க்காரும் தயாரானது. ஜப்பானியரிடமிருந்து பிடுங்கிக்கொண்ட துப்பாக்கிகளு மிருந்தன. சில மட்ட ரகத் துப்பாக்கிகளும் உள்நாட்டிலேயே உற்பத்திசெய்ய வும் ஏற்பாடானது. அவ்வாருன நிலைமையில் அதனை அடக்கி யொடுக்குவதென்ருல் வெகு சிரமம்தான். ஹனுயிலோ 20,000 பிரஞ்சுக்காரர்கள் நிராயுதபாணி களாயிருக்கிருர்கள்.

"உலகில் காணப்படும் இதர தேசிய இயக்கங்களை விட அன்னுமியத் தேசீயம் அடக்கமானதென்றே கூற வேண்டும். கம்யூனிஸ்டு கட்சி கலைக்கப்பட்டு விட்டாலும் தேசியத்தில் கம்யூனிஸ சாயலே காணக் கிடக்கிறது. வெடி மருந்து கிடங்காக இக் கீழ்க்கோடி நாடிருந்து வருகிறது" என்று சண்டே அப்சர்வரின் நிருபர் மார்ச்சு முதல் வாரத்திலிருந்த நிலையைப் பற்றிக் கூறினுர். அமெ ரிக்க அதிகாரிகள் தங்கு தடையற்று ஹனுயில் செல்வதாகவும் கூறினுர். சைனுவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி சீனப் பிரதேசத்தி லிருந்துலாஆஸை ஆக்கிர மிக்கப் பிரான்சு அனு மதி பெற்றது. பிரான்சும்


ஹிட்லரிடம் அவதிப்படும் காலனி ஆசை விடாத டிகாலே

தனக்குச் சைனுவிலுள்ள விசேஷ உரிமைகளை யெல்லாம் மற்ற ஜனநாய நாடுகளைப்போலவே விட்டது. யுன்னுன்

ஹெய்பாங் ரயில்வேயில் சீனப் பிரதேசத்திலிருக்கும் பாகத்தைச் சைனுவிற்கே விற்றது. சைனுவும் ஆக்கிரமிப்பு செலவை வற்புறுத்துவதில்லையென வாக்களித்தது.

நேச நாட்டாரின் முடிவின்படி மார்ச் 2-ந்தேதி நள்ளிரவின் பிறகு இந்தோ சைனுவின் அதிகாரம் பூராவும் பிரான்சிற்கு மாற்றப்பட்டுவிட்டது. அதுவரையில் அப்பிரதேசம் சிங்கப்பூரிலுள்ள தென் கிழக்காசிய ராணுவ மண்டலத்தின் அதிகாரத்திலிருந்தது.

"நாம் பட்ட பயங்கர அவதியின்போது நானொரு உண்மையைக் கண்டேன். நமது சாம்ராஜ்யத்தின் பெருமையும் அதன் அவசியமும் அப்போதே தெற்றென விளங்கியது" என்று கூறிய ஜெனரல் டிகாலே பிரான்சில் பதவி துறந்து சமதர்மக் கட்சி பிலிக்ஸ் கோயின் ஜனுதிபதியாகவே, ஏகாதிபத்திய பித்தர்கள் புது பிரஞ்சு சர்க்கார் அன்னுமிய தேசிய வாதிகளுக்குப் இடங் கொடுத்துவிடுவார்களோ என அஞ்சினர். தோழர் தோரஸ் உப பிரதமராக வந்ததும் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஒவ்வொரு நாட்டு சோல்ஜரும், தாயகம் திரும்பத் தவித்த போது ஏகாதிபத்தியத்தை இறுகப் பிடிக்கப் பிரான்சிலிருந்து வந்த இந்த சோல்ஜர்களா இடங்கொடுப்பார்கள்?

'அவினர்' பத்திரிகையிலே சில பிரஞ்சுக்காரர்கள் வியட்னும் சர்க்காரின் சுதந்தரத்தை அங்கீகரிக்கவேண்டுமென ஜனுதிபதி கோயினுக்கு வேண்டுகோள் விடுத்த போது சட்டத்தையும் சமாதானத்தையும் காற்றுப் போக்கில் விட்டு சைகோன் நகரெங்கிலும் பிரஞ்சு சோல்ஜர்களும் மாலுமிகளும் கலாட்டா செய்தார்கள். 'டிகாலே வாழ்க', 'லெக்லெர்க் வாழ்க', 'தோரஸ் தொலைக' என்று ஆர்ப்பரித்தனர். கம்யூனிஸ்டு பத்திரிகாலயத்தில் நுழைந்து அங்கிருந்த சாமான்களை நொறுக்கி, பத்திரிகை பிரதிகளையும், புஸ்தகங்களையும் நடுத்தெருவில் சொக்கப் பானையாகக் கொளுத்தினர்கள். அம்மாதிரியான மகஜரில்

கையெழுத்திட்ட ராணுவ குமாஸ்தாப் பெண்ணொருத்தியை இரவில் தெருவில் இழுத்து வந்து தலையைச் சிரைத்து மொட்டை யடித்து சைகோன் தெருவெல்லாம் ஊர்வலமாக இழுத்துச் சென்றார்கள். அவளது இரு கைகளையும் கட்டிப் போட்டார்கள். அவள் கையெழுத்திட்ட கடிதம் 'துவான் ஜ்லாய்' என்ற அன்னாமிய சமதர்ம பத்திரிகையில் வெளியானதாம்.

பிரஞ்சு பார்லிமெண்டில் சைகோன் விஷயம் பிரஸ்தாபிக்கப்பட்டபோது, துவான் ஜ்லாய் பிப்ரவரி 10-ந் தேதிய தகராறுக்கான மகஜரைப் பிரசுரித்ததென்றும் அப்பத்திரிகை இந்தோ சைனாவிலுள்ள பிரஞ்சு துருப்புகளின் நடத்தையைப் பற்றிக் கேவலமாக எழுதினதாகவும் அதனால் சென்ற பல நாட்களாகவே பிரஞ்சு சோல்ஜர்கள் கலாட்டாவில் இறங்கி யிருப்பதாகவும் தெரிந்தது. அச் சம்பவங்களை விசாரிக்கப் பிரஞ்சு ஜனாதிபதி உடனே ஏற்பாடு செய்யவேண்டு மென்றும் பிரஞ்சுக் காலனிக் கமிட்டி அங்கத்தினர் வற்புறுத்தினர்.

அன்னாமுக்குச் சுத்த ஃசுதந்திரம் கொடுக்கவேண்டுமென்று கூறிவந்த கம்யூனிஸ்டுகள், தாங்கள் பதவிக்கு வந்ததன் பின்னர் கூப்பாட்டை மாற்றிவிட்டனர். சுதந்திர நாடென அறிவித்தால், ஐக்கிய நாட்டுஸ்தாபனத்தின் தர்மகர்த்தா ஆட்சியே அங்கு தோன்றுமென்றும் ஆகவே பிரஞ்சு யூனியனுக்குட்பட்டு சுயேச்சை நாடாகவிருப்பதே மேலென்றும் பல்லவி பாடத் தொடங்கினார்கள். யூனோ சங்கமோ இந்தோனேஷியா, கிரீஸ் தேச விஷயங்களில் நடந்து கொண்ட மாதிரியிலிருந்து புகார் செய்யப்பட்டாலும் இந்தோ சைனா கதியாதாகுமெனக் கூறவேண்டுவதில்லை.

மார்ச்சு ஆரம்பத்தில் ஹனாயில் நடந்த அன்னாமியப் பிரஞ்சு பேச்சின் விளைவாக வியட்னாவிற்கும் பிரஞ்சுக்காரர்களுக்கு மிடையே 6-ந்தேதி ஒப்பந்தம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"பிரஞ்சு யூனியனில் சொந்தசர்க்காரும், பார்லிமெண்டும், ராணுவமும், வரவு செலவும் கொண்ட சுயேச்சை சர்க்கார் வியட்னும் குடியரசு என்பதை பிரான்சு அங்கீகரிக்கிறது. இந்தோ சீனசமஷ்டியின் பாகமாகக் கருதுகிறது. பொதுஜன வாக்கெடுப்பின் முடிவை உறுதி செய்வதாகவும் பிரான்ஸ் உத்தரவாதம் கொடுக்கிறது. சர்வதேச ஒப்பந்தங்களின்படி சீனத் துருப்புகளை விடுவிக்க பிரஞ்சு ராணுவம் வருங்கால் அதனை நேசப் பான்மையில் வரவேற்க வியட்னும் தயாராகின்றது. ஜப்பானியர்களை வெளியேற்றுவதில் ஈடுபட்டிருக்கும் பிரஞ்சுத் துருப்புகள் வெளியேற ஐந்து வருஷங்களேனும் ஆகும். விரோத மனப்பான்மைக்குரிய நடவடிக்கைகளையெல்லாம் இருசாராரும் தடுத்துப் பிரான்சுடன் நேசமாகவிருப்பதற்கான முறை ஏற்பட ஈடுபடும். அப்போது வெளி நாடுகளுடன் வியட்னும் கொள்ளவேண்டிய தொடர்பு பற்றியும், இந்தோ சைனு சட்டம் பற்றியும் செல்வ கலாசார பாத்யதைகளைப் பற்றியும் பேசப்படும்" என்பதே உடன்படிக்கையின் முக்கிய ஷரத்துகள். அவ்வொப்பந்தத்தில் ஸ்ரீ ஹோசின் மின்னும், பிரான்சின் சார்பாக ஹனுய் பிரஞ்சு கமிஷனர் மேஜர் ஜீன் ஸெயின்டினியும் கையெழுத்திட்டனர். வியட்னும் அன்னும், டான்கின் பிரதேச சர்க்கார் என்பது ஏற்கப்பட்டது.

"வியட்னும் குடியரசை" அங்கீகரித்ததை வரவேற்று லண்டன் டைம்ஸ் எழுதுகையில் தீவிரவாதிகளை வியட்னும்வாதிகள் அடக்கிப் போட்டது குறிப்பிடத் தக்கதென்றும், தேசியத்திற்கும், நாசத்திற்குமுள்ள வித்தியாசத்தைப் பிரான்சு கண்டு நடந்துகொண்டது அறிவுடமை யென்றும் கூறியது.

இந்தோ சைனுவில் பிரஞ்சு ஆட்சி மீண்டும் ஏற்பட்டு விட்டதென்று கூறிவிட்டு அட்மிரல் டார்ஜன்லியு இந்தோ சீன சமஷ்டியின் முழுமைக்கும் தற்காப்பு, போக்குவரத்து, சுங்கம், நிதி முதலியவற்றில் பிரான்சே

பொறுப்பு வகிக்குமென மார்ச் 9-ந்தேதி அறிக்கை விட்டார்.

பிரஞ்சு-அன்னும் ஒப்பந்தமான பிறகு வியட்னும் சர்க்கார் மீண்டும் ஹோசின்மின் தலைமையில் திருத்தி யமைக்கப்பட்டது. பாவ்தாய் மீண்டும் ஆலோசகராக அமர்ந்தார். நியமிக்கப்பட வேண்டிய மந்திரிமார் 18 பேர்களின் பெயர்களும் பிரஞ்சு ஹைகமிஷனருக்குச் சமர்க்கப்பட்டிருக்கிறது என்றதிலிருந்து சுயாட்சி அளவி லேயே அரசுரிமை வழங்கப்பட்டிருக்கிறதென எண்ண வேண்டியிருக்கிறது.

சீனருடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி 10 ஆயிரம் பிரஞ்சு துருப்புகள் ஹெய்பாங் துறைமுகம் வந்தபோது அவை வந்த கப்பல்கள் மீது மார்ச் 2-ந்தேதி கரையோரத் திலிருந்த சீனப் பீரங்கிகள் தவறுதலாகச் சுட்டன. ஹெய்பாங் சம்பவத்தில் 20 பேர் கொல்லப்பட்டதாகவும் 40 பேர் காயமடைந்ததாகவும் பாரிஸ் கூறியது. பிரான்சே தவருக நடந்து கொண்டதென்றும் அது நஷ்ட ஈடுதர வேண்டுமென்றும் சீனர் கூறி பிரஞ்சுத் துருப்புகள் தங்கள் ரேவுத்துறையில் இறங்கவிடாது சீனர் பலப் படுத்தி ஜனரல் லெலெர்க் சீனத்தளபதி வாங்லியைச் சந்தித்த பிறகு தகராறு சமரசமானது. ஏப்ரல் முதல் வாரத்துடன் சீனத்துருப்புகள் சென்று விடும்.

பிரான்சிற்கும் வியட்னுமிற்கும் ஏற்பட்ட ஒப்பந் தத்தைக் கொச்சின் சைனு ஆலோசனைக் கவுன்சில் (பிரஞ்சு அதிகாரிகளால் ஏற்படுத்தப்பட்டது) பலமாகக் கண்டித்து தீர்மானமொன்றை நிறைவேற்றியது. பிரஞ்சு ஆதரவில் நடந்துவந்த கொச்சின் சைனு பிரிவினை இயக்கத் தலைவரும் ஆலோசனை கவுன்சில் அங்கத்தினரு மான டாக்டர் பிரான்ஸ் தான்பாட்டை எவரோ மார்ச்சு முடிவில் கொன்றுவிட்டனர்.

எனினும், பிரான்சின் அரசியலமைப்பு அசெம்பிளி மார்ச்சு 13-ந் தேதி கொச்சின் சைனுவிற்குச் சுயேச்சை

அரசியலமைப்பை அளித்தது. மற்ற 4 பிரதேசங்களுக்கும் ‘இலாகா’ அந்தஸ்து அளித்தது. அவை நாலும் பிரன்சு ஜனுதிபதியின் கீழா அல்லது சைகோன் கவர்னர் ஜெனர லின் கீழா இருக்கும் என்பது இன்னும் தெரியவில்லே. கொச்சின் சைஞ தனி ராணுவத்தையும், சட்ட சபையையும், வரவுசெலவு திட்டத்தையும் கொண்டிருக்கு மென்றும் மற்ற இந்தோ சீன சமஷ்டியிலிருக்கும் நாடுக ளிருப்பதுபோன்று ‘விடுதலே ஆட்சி’ ஏற்படுத்தப்படுகிற தென்றும் பிரஞ்சு சர்க்கார் அறிக்கை கூறியது. வியட்ஞ முடன் அதன் முடிவான அந்தஸ்தைப் பேசி முடிக்க வேண்டிய தூது கோஷ்டி ஏப்ரல் 2-ந் தேதி பாரிசி லிருந்து கிளம்பியது. அட்மிரல் டார்ஜன் பிரபுவே அதற்குத் தலைமை வகிப்பார். மே மாதம் வியட்மின் அந்தஸ்து பற்றி முடிவான ஏற்பாடு தெரிந்து விடும். ஸோஷலிஸ்டு பிரான்சாக மாறினலும் நிஜமான சுதந்திரத்தை வியட்ஞமிற்குத் தருமா வென்பது சந்தேகமே.

ஹனுயிக்கும், ஸ்ரீயூவிற்கும் பிரஞ்சு துருப்புகள் வந்தபோது பெருத்த ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. ஹோசின்மின் சர்க்கார் அவர்கள் வருமுன் அடக்கமாக விருக்கும்படி கேட்டும், மக்கள் பிரஞ்சு வருகையிலுள்ள தங்கள் எதிர்ப்பைக் காட்டிவிட்டார்கள். கடுமையான முறைகளைக் கையாண்டு அவைகளை அடக்கவேண்டிய தாகிவிட்டது. கொச்சின் சைஞவிலும் கைகலப்புகள் இருந்து வருகின்றன. ஆகவே பாரிஸ் கோஷ்டி நிஜமான சுதந்திரத்தை அன்ஞமியருக்கு அளிக்காவிட்டால் பெரிய தொரு புரட்சி இரண்டொரு மாதங்களில் கீழ்க்கோடியில் கிளம்பலாம். ஜனுதிபதி ஹோசின்னே டார்ஜன்லியு மார்ச்சு மாதக் கடைசியில் கண்டபோது அவர் அந்தஸ்துக் குரிய மரியாதையுடன் வரவேற்ருர். வரப்போகும் சமரசப்பேச்சு முறையைப் பற்றி அப்போது விவாதித் தனர். அதன் பிறகு பிரஞ்சு கடற்படை அணிவகுப்

பொன்றையும் ஹோசின் மின் பார்வையிட்டார். ஜனாதிபதியும் அட்மிரலும் பேசிக்கொண்டிருந்த அதே சமயத்தில் தீவிர அன்னியர் ஹனாய் ஜல சப்ளை ஸ்தலத்தை ஆக்கிரமித்தனர். பிரெஞ்சுக்காரர் கண்டனம் தெரிவிக்கவே ஒருவாறு சமரசம் ஏற்பட்டது.

பிரான்சில் சோஷலிஸ்டு சர்க்கார் பதவிக்கு வந்திருப்பதாலும், உபஜனாதிபதியாகத் தோரஸ் இருப்பதாலும், உலக நிலையை எண்ணியுமே ஜனாதிபதி ஹோசின் மின் சமரசத்திற்கு சம்மதித்திருக்கிறாரென்று தெரிகிறது.